தேசப் புயல்களால் எங்கும் வசந்தம் வீசுகிறது
பக். 12-13

விலை ரூபா 20
பக்கங்கள் 32+ VIII

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 223 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 22, புதன்கிழமை 06.07.2016


# யாழ்ப்பாணத்துக்கு வந்து குவிகிறது கேரளக் கஞ்சா

### ஒரு வாரத்தில் 135 கிலோ சிக்கியது



யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ்.மாவட்டத்தில் 40 நாள்களில் 135 கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. அதில் நேற்று மட்டும் பருத்தித்துறையில் 40 கிலோ கஞ்சா சிக்கியது.
இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண.

பக்.04



## பிரதி அமைச்சர் தேவரப்பெரும கைதானார்

கொழும்பு, ஜூலை 6
பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெரும நேற்று மாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவரை நாளை வரைவிளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.
களுத்துறை – மீகாதென்ன பாடசாலை ஒன்றில், முதலாம் தரத்துக்கு பத்து மாணவர்களைப் பலவந்தமாகச் சேர்த்துக்கொள்ள வைத்த குற்றச் சாட்டுத்தொடர்பில்பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெரும கைது செய்யப்பட்டார்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 9 மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று மீகாதென்ன பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நாளை வரை

பக்.29

## கீரிமலைத் துறைமுகம் அமைக்கும் திட்டம் வேறு இடத்துக்கு மாற்றம்

### யாழ். மாவட்டச்செயலகம் நடவடிக்கை

யாழ். ஜூலை 6
காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனக் காணியில் குடியேற்றப்பட்ட மக்களுக்காக, கீரிமலையில் துறைமுகம்நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த முயற்சிக்கு இந்து அமைப்புக்கள் எதிர்ப்பு வெளியிட்டன. இதனையடுத்து, துறைமுகத்தை வேறிடத்தில் அமைப்பதற்குரிய ஒழுங்குகளை யாழ். மாவட்டச் செயலகம் எடுத்துள்ளது.
நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள, சொந்தக் காணியில்லாத

பக்.29

## வல்லை - அராலி வீதியை கட்டுவன் சந்தி வரை விடுவிக்க இணக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
வல்லை – அராலி வீதியில், கட்டுவன் சந்தி வரை விடுவிக்க இராணுவம் சாதகமான முடிவை வழங்கியுள்ளதாக, யாழ். மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவித்தன. அதிகாரிகளுக்கும் இராணுவத் தரப்புக்கும் இடையிலான பேச்சுக்களின் ஊடாக இவ்வாறு இணக்கம் காணப்பட்டது.
வலி.வடக்கில் 201 ஏக்கர் கடந்த

பக்.29

# கொத்துக்குண்டு விவகாரத்துக்கு பன்னாட்டு விசாரணை அவசியம்

### நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 6
இறுதிக் கட்டப் போரின்போது கொத்துக் குண்டுகள் பாவிக்கப்பட்டுள்ளன என உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் பரணகம கருத்து வெளியிட்டார். இந்த விவகாரம் குறித்து பக்கச் சார்பற்ற பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும்.
இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்று அழுத்தமாகக் கேட்டது பிரதான எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சபையில் உரையாற்றினார். இதன்போது அவர் தெரிவித்ததாவது:
இறுதிப் போரில் கொத்துக் குண்டுப் பாவனை தொடர்பில் செய்திகள் வெளிவந்தன. காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர், கொத்துக்குண்டுகள் வீசப்பட்டமைக்கு ஆதாரபூர்வமான சாட்சிகள் எதுவும் இல்லை. மக்கள் வழங்கிய

பக்.27

> "உண்மையில் நல்லிணக்கத்தைக் கொண்டுவரவேண்டும் என அரசு நினைக்குமானால், இது பற்றி பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடத்தி, சகல மக்களுக்கும் உண்மையை வெளிப்படுத்த வேண்டும்."

## பிறை தென்பட்டது; புனித ரம்ழான் பெருநாள் இன்று

கொழும்பு, ஜூலை 6
ஷவ்வல் பிறை தென்பட்டதையடுத்து, முஸ்லிம்கள் புனித ரம்ழான் பெருநாளை இன்று கொண்டாடுகின்றனர் என கொழும்பு பெரிய பள்ளிவாசல் நேற்றிரவு அறிவித்தது. (வ)


## குறைபாடுகளுடன் வீதியில் செல்லும் அரச வாகனங்களைப் பிடியுங்கள்

### பொலிஸாருக்கு சாவகச்சேரி நீதிவான் உத்தரவு

தென்மராட்சி, ஜூலை 6
வீதியில் பயன்படுத்தப்படும் பாவனைக்கு உதவாத அரச வாகனங்கள் அனைத்தையும் நீதிமன்றில் முற்படுத்த வேண்டும். பொலிஸாரின் வாகனங்களோ, இராணுவத்தினரின் வாகனங்களோ, திணைக்களங்களின் வாகனங்களோ, எந்தத் துறையினரின் வாகனங்களாக இருந்தாலும்சரி அவற்றுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும்.
இவ்வாறு பொலிஸாருக்குக் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்தது சாவகச்சேரி நீதிவான் மன்றம்.
யாழ்.மாவட்டத்திலுள்ள அரச திணைக்கள வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியது. அந்த வாகனம் தொடர்பில் மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பரிசோதகரினால் பரிசோதனை செய்யப்பட்டது. வாகனத்திலுள்ள

பக்.29

முச்சந்தி முரளி




நீங்களும் பிடிக்கிறியள் அதுவும் பெருகிக்கொண்டே இருக்கு...

## பருத்தித்துறைக் கடலில் 17 இந்திய மீனவர் கைது

யாழ். ஜூலை 6
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 17 பேர் நேற்று கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
பல நாள்களுக்குப் பின்னர் இவ்வாறு அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, யாழ்ப்பாணத்தில் இதுவரை 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ரமேஸ் கண்ணா தெரிவித்தார்.
தமிழகம் – பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர்களே பருத்தித்துறைக்கடலில்வைத்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் காங்கேசன் துறை

பக்.04

noolaham.org | aavanaham.org

## வித்தியாவின் தாயாரை அச்சுறுத்தியவர்களுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6
வித்தியாவின் தாயாரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைத்துள்ள 2 பேருக்குமான மறியலை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நீடித்தது ஊர்காவற்றுறை நீதிவான் மன்றம்.

புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், பாதிக்கப்பட்ட மாணவியின் தாயாரை அச்சுறுத்தியதான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போதே பதில் நீதிவான் இ.சபேசன் மேற்படி கட்டளையை வழங்கினார்.

வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் முதலில் கைது செய்யப்பட்டிருக்கும் 9 சந்தேகநபர்களில் 2 பேரின் உறவினர்களே வித்தியாவின் தாயாரை அச்சுறுத்தியதாக முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (வ-4)

# பதுங்குகுழி இருப்பதால் வீட்டை தர மறுக்கிறார்கள் சீருடையினர்

## 6 ஆண்டுகளாகியும் அதிகாரிகளும் அக்கறையில்லை என உரிமையாளர் ஆதங்கம்





யாழ்ப்பாணம், ஜூலை 6
வீட்டில் பதுங்கு குழி இருப்பதைக் காரணம் காட்டி 6 ஆண்டுகளாக எனது வீட்டைச் சீருடையினர் விடுவிக்கின்றார்கள் இல்லை. பல தரப்புக்களிடமும் முறைப்பாடு செய்தும் பலன் கிடைக்கவில்லை. இவ்வாறு வேதனையுடன் கூறினார் வீட்டின் உரிமையாளரான குடும்பத் தலைவி திரேஸ் தனேஸ்குமார்.

2010 ஆம் ஆண்டு உதயநகர் கிராம மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டனர். திருமதி திரேஸின் வீடு அந்தப் பகுதியில் அமைந்துள்ளது. வீட்டில் முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நிறுவனம் ஒன்று இயங்கியது. அந்தக் காலப் பகுதியில் சிமெந்து பதுங்கு குழி அமைக்கப்பட்டது.

"உதயநகர் மேற்கில் 3 பிள்ளைகளுடன் நான் வசித்து வருகின்றேன். போரின் போது எனது கணவர் உயிரிழந்துவிட்டார். வாழ்வாதாரத்துக்காக சந்தையில் வியாபாரம் செய்து வருகின்றேன். பதுங்குகுழியைதகர்த்து என்னை மீளக்குடியமர்த்துமாறு கேட்டு, சீருடையினரின் உயர் அதிகாரிகள், அரச அதிகாரிகள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எனப் பல இடங்களிலும் முறைப்பாடு செய்தேன்.

காலம் கடந்து கொண்டிருக்கின்றது. எனது பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கவில்லை. ஒவ்வொரு தடவையும் காலத்தைக் கடத்தும் நடவடிக்கைகளிலேயே சீருடையினர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். எனது தாயாரின் வீட்டில் சிரமங்களுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்" என்றார் திருமதி திரேஸ் தனேஸ்குமார்.

"அந்தப் பகுதி மீள்குடியமர்வுக்கு முழுமையாக அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி வீடு தொடர்பில் எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. சீருடையினருடன் இந்த விடயம் தொடர்பில் பேசினேன். இதனை அகற்றுவதற்குப் பெரும் தொகைப் பணம் தேவைப்படுகின்றது. இதனைப் பிரதேச செயலக ஒதுக்கீட்டில் வழங்க முடியுமா என்று சீருடையினர் கேட்டனர். எமக்கு அவ்வாறான ஒதுக்கீடுகள் இல்லை என்பதைத் தெரிவித்தேன். தாம் அந்தப் பணியை மேற்கொள்வதாக சீருடையினர் தெரிவித்தனர். ஆனால் இன்று வரையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை" என்று கரைச்சிப் பிரதேச செயலாளர் குறிப்பிட்டார். (வ-5-101)

## மாணவனை அச்சுறுத்திய ஆசியர்களுக்குப் பிணை

சாவகச்சேரி, ஜூலை 6
மாணவனை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஆசிரியர்கள் இருவருக்கும் நேற்று சாவகச்சேரி நீதிவான் மன்றினால் பிணை வழங்கப்பட்டது.

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் ஆசிரியர் தாக்கியதனால் மாணவன் ஒருவனுக்குக் காதில் பாதிப்பு ஏற்பட்டது. இது தொடர்பில் மாணவனால் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு நடைபெறுகிறது.

குறித்த மாணவன் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வேளை, வைத்தியசாலைக்குச் சென்ற ஆசிரியர்கள் இருவர், மாணவனை அச்சுறுத்தினர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்ததது.


இவ்வாறு அச்சுறுத்திய குற்றச்சாட்டில் குறித்த ஆசிரியர்கள் இருவரும் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றின் கட்டளையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி ஏற்கனவே மன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. எனினும் அது நிராகரிக்கப்பட்டிருந்தது. நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த ஆசிரியர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் பிணை விண்ணப்பம் செய்தனர். அதனைப் பரிசீலித்த நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், ஆசிரியர்கள் இருவரையும் பிணையில் விடுவித்தார். (வ-ற-ஜ-4,9)







## நடுவீதியில்சண்டையிட்ட குழுக்களால் மக்களின் போக்குவரத்துப் பாதிப்பு

### தட்டாதெருச் சந்தியில் நேற்று மாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 6
தட்டாதெருச் சந்தியில் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலும், பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலும் இரு குழுக்கள் வீதியில் மோதலில் நேற்று மாலை ஈடுபட்டன. வாகன விபத்தினாலேயே மோதல் ஏற்பட்டது.

தட்டாதெருச் சந்தியிலிருந்து மானிப்பாய் வீதியை நோக்கித் திரும்பிய வாகனமும், மானிப்பாய் வீதியிலிருந்து தட்டாதெருச் சந்தியால் யாழ்ப்பாணப் பக்கம் திரும்பிய வாகனமும் விபத்துக்குள்ளாகின.

விபத்து இடம்பெற்றதுமே இரண்டு சாரதிகளும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தினர். இந்த வாக்குவாதம் முற்றி கைகலப்பு நிலமை ஏற்பட்டது. வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையிலேயே இரண்டுவாகனங்களும் வீதியின் நடுவே நிறுத்தப்பட்டன. இதனைப் பொருட்படுத்தாது, இரண்டு வாகனச் சாரதிகளும் அவர்களுடன் வந்தவர்களும் வீதியில் முட்டி மோதினர்.

அங்கு கூடி நின்றிருந்தோர் இவர்களது கைகலப்பைத் தடுக்க முயற்சித்தனர். இந்த மோதலால் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியினூடான போக்கு வரத்து சுமார் 20 நிமிடங்கள் வரையில் பாதிக்கப்பட்டது. (வ-ம-5-21)

## ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களை நியமிப்பதில் கொழும்பு இழுத்தடிப்பு

### வடக்கு அரசுக்கும் அக்கறையில்லை என குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 6
விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவி வெற்றிடங்கள் பதினொரு மாதங்களாகியும் இன்னமும் நிரப்பப்படவில்லை. அந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட பெரும் பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். வடக்கு மாகாணத்தில் விண்ணப்பித்தவர்களுக்கு நியமனம் பெற்றுத்தரப்படும் என வடக்கு மாகாண சபை உறுதியளித்தது. எனினும் அவர்கள் அதில் அக்கறை செலுத்தவில்லை. இவ்வாறு குற்றஞ்சாட்டினர் அந்தப் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி வடக்கு மாகாணத்தில் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது. அதில் 90 சதவீத மானவர்கள் பெரும்பான்மை இனத்தவர்கள். வடக்கு மாகாணம் தமிழை தாய்மொழியாகக் கொண்டிருக்கும் போது, பெரும்பான்மையினத்தவரை இந்தப் பதவிக்கு நியமிப்பதால் விவசாயத்துறை பெரும் பாதிப்பை சந்திக்கும் என்று எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபையிலும், வடக்கு விவசாய அமைச்சரால் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. தொடர் எதிர்ப்புப் போராட்டங்களால் வடக்கில் நியமிக்கப்பட்ட சிங்கள உத்தியோகத்தர்கள் மீளப் பெறப்பட்டனர். இந்தப் பதவிக்கு வடக்கிலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. சிங்கள உத்தியோகத்தர்கள் திருப்பி அனுப்பப்பட்டு 11 மாதங்கள் கடந்துள்ளன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. கொழும்பு நடுவண் அரசுதான் இந்த நியமன விடயத்தில் முடிவெடுக்க வேண்டும் என்று இதனோடு தொடர்புடைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண அரசு, சிங்கள உத்தியோகத்தர்களை திருப்பி அனுப்பியது. இந்தப் பதவிக்கு இங்கிருந்து விண்ணப்பித்தவர்களுக்கு நியமனம் பெற்றுத் தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இன்னமும் நடவடிக்கை எடுக்கின்றார்கள் இல்லை- என்று விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பதவிப் பரீட்சைக்குத் தோற்றிய ஒருவர் தெரிவித்தார். (வ-ற-5-ரி)

## குளத்தில் குளித்தவரைக் காணவில்லை

குளத்தில் குளிக்கச் சென்ற குடும்பத் தலைவர் ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமற்போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பளை நகர்ப் பகுதியில் உள்ள குளத்தில் நேற்றுமாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பளை பெரியபளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை திருச்செல்வம் (வயது - 40) என்பவரே நீரில் மூழ்கிக் காணாமற்போயுள்ளார் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டது.

தனது வீட்டுக்கு அருகில் உள்ள குளத்திற்கு தனது சகோதரனுடன் சென்று குளித்துக் கொண்டிருந்த போது, நீந்திச் சென்றதாகவும் சிறிது நேரத்தில் திடீரென காணாமற்போயுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பளைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு பொலிஸார் அங்கு சென்று தேடுதல் நடத்தி அவரைக் கண்டறியாததால், கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டது. கடற்படையினர் அங்கு சென்றிருந்தபோது இருள் சூழ்ந்துவிட்டதால்–வெளிச்சம்போதாத நிலையில் தேடுதலைக் கைவிட்டுத் திரும்பினர். எனினும் இன்று காலை கடற்படையினர் தேடுதல் நடத்துவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,9,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைலாய வாகன வெள்ளோட்டம்

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோயிலுக்குப் புதிதாகக் கைலாய வாகனம் அமைக்கப்பட்டது.
அதன் வெள்ளோட்டம் இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறுகிறது. வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து இரவு 8 மணிக்கு கைலாய வாகன வீதியுலா இடம்பெறும். (வ-4)

### தவறிவிட்டது

துரைவீதி, தாவடி வடக்கு கொக்குவிலைச் சேர்ந்த மாணிக்கவாசகம் சித்திராதேவி என்பவரது தேசிய அடையாள அட்டை (488325353V) கடந்த 29.06.2016 அன்று யாழ்ப் பாணதில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 077 912 7993

### காணியுடன் வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் 2பரப்பில் அமைந்துள்ள வீடும், Station Road இல் 2பரப்பில் அமைந்துள்ள 2 வீடுகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777 037 058

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் (இலங்கை பெந்தக்கோஸ்சே சபையின் முன் வீதியில்) மாடி வீடு ஒன்று சகல வசதிகளுடன் வாடகைக்கு உள்ளது. அரச உத்தியோகத் தர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 4712702

### VACANCY

RECEPTIONIST (Female)
ஆங்கிலம் நன்றாகப் பேசக் கூடிய கணினி அறிவுள்ள வரவேற்பாளர் உடன் தேவை.
வயதெல்லை 18-28
அடிப்படைச் சம்பளம்- 15,000/-
WINSTAR VISA CONSULTANTS
0702 36 36 76

### பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டமும் நூற்றாண்டு விழாக் கூட்டமும்

எமது பாடசாலை பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டமும் நூற்றாண்டு விழா பற்றிய கலந்துரையாடலும் 16.07.2016 பி.ப 2 மணிக்கு நடைபெற உள்ளது.
இக் கூட்டத்திற்கு பழையமாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர்
யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம்

### 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் அருணாசலம் கோபாலரத்தினம்**

திதி:06.07.2016

தோற்றம் 01.01.1933 — மறைவு 21.06.2012

நெஞ்சினிலே உங்கள் நினைவலைகள்
நிதமும் வந்து போகும்
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
நீங்காது உங்கள் நினைவது.

88, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (88/2677) (11.17.18) குடும்பத்தினர்.

நிரமத்த ஜய
வெற்றி வாரம் 476 — திகதி 05.07.2016 — வர்ணம் மஞ்சள்
08 55 58 64 T
ரூ 11,321,120/=
Tel: 011 4 824 824
2016.07.08

அடுத்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 86,381,040/-
கோடிபதி ஷனிது — 025 — 2016-07-05
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
Q 42,58,63,67
தொ.பே. 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 05.07.2016 — வெற்றி வாரம் 2000 — வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள்: சிங்கம் 37 41 48 60
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 63,14,520 /-

### விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

**விசேட செயலமர்வு**

**A/L 2016 தொழில் நுட்ப பிரிவு**

08,09.10 திகதிகளில் { பொறியியல் தொழில்நுட்பம் / உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
15,16 திகதிகளில் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்
17,18 திகதிகளில் I.C.T விவசாயம், புவியியல்
- கையேடுகள் வழங்கப்படும்

நேரம் காலை 8.30 – 1.30
முற்பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
கட்டணம் அறவிடப்படும்
தொடர்புகளுக்கு 0772487774

### மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
### கேள்வி அறிவித்தல் - திருத்தம்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரச அதிபர் / மாவட்டச் செயலாளரால் 'கீரிமலையில் மீள்குடியேற்றத்துக்காக அமைக்கப்படவுள்ள 150 வீடுகளுக்கான (அண்ணளவாக 550 சதுர அடி) கட்டடப் பொருள் விநியோகத்துக்காக தகைமையுடையோரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன' என்பது தொடர்பாக 29.06.2016 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரத்தில் கட்டடப் பொருள்களுக்கான மூலப்பொருள் தொகுதியில் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

**1. கட்டடப் பொருள்கள் (கல், சிமெந்து, மணல், கம்பிகள், மரங்கள்)**
இங்கு கல் என்பது கருங்கல் மற்றும் சுண்ணாம்புக்கல் என்பவற்றைக் குறிப்பதோடு அதன் அளவுகளாக 1",3/4",1/4", மற்றும் கண்டகல் என்பதைக் குறிக்கும்.

நா.வேதநாயகன்
அரச அதிபர்/ மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம். (4/24119) (11.17.18)

### குப்பிழான் திருவருள்மிகு கற்கரைக் கற்பக விநாயகர் திருக்கோயில் புனராவர்த்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகப் பெருவிழா



மெய்யடியார்களே !

ஆனித்திங்கள் 22ஆம் நாள் (06.07.2016) புதன்கிழமை கர்மாரம்பம்
ஆனித்திங்கள் 23ஆம் நாள் (07.07.2016) வியாழக்கிழமை
காலை 8.00 மணி யந்திரபூசை
நண்பகல் 12.00 மணி தாபிஸ்தாபனம்
மாலை 4.00மணி நூதனமூர்த்தி சயனா ரோகணம்

ஆனித்திங்கள் 24ஆம் நாள் (08.07.2016) வெள்ளிக்கிழமை
காலை 8.00 மணி கோவாசம், தீர்த்த சங்கிரஹணம்
மாலை 4.00 மணி கும்பயாகசாலா பிரவேசம்
இரவு 9.00மணி-10.30 மணி வரை கும்பலக்கினத்தில் யந்திரஸ்தாபனம்

ஆனித்திங்கள் 25ஆம் நாள் (09.07.2016) சனிக்கிழமை
காலை 7.00 மணி யாக பூசைகள்
காலை 8.00மணி-4.00மணிவரை அடியவர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்
மாலை 4.00மணி நவகுண்ட பூஜை மூலமந்திரஹோமம்

ஆனித்திங்கள் 26ஆம் நாள் (10.07.2016) ஞாயிற்றுக்கிழமை
காலை 6.00 மணி ஹோம சமர்ப்பணம்
காலை 9.00மணி ஸ்தூபிகள் அபிஷேகம்
காலை 9.02 முதல் 10.26 வரையுள்ள சிங்கலக்கின சுப முகூர்த்த வேளையில் மகாகும்பாபிஷேகம்
மாலை 4.30 மணி வசந்த மண்டபத்தில் ஷோடஷோபசாரபூசை
திருவூஞ்சல் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறும்.

அடியார்கள் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகைதந்து கற்பகவிநாயகன் அருள்பெறுவீர்கள் ஆக.

ஆலய பரிபாலன சபையினர்.

### துயர் பகிர்கின்றோம்

**கலாபூஷணம் லெட்சுமணன் கெங்காதரன் ஆச்சாரியார்**

பிறப்பு 18.02.1944
இறப்பு 05.07.2016



எமது யாழ் பிரதேச செயலக கலாசார பேரவை உறுப்பினர் கலாபூஷணம் லட்சுமணன் கெங்காதரன் அவர்கள் 05.07.2016 ஆம் திகதியன்று இயற்கை எய்தினார்.
அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாரப் பேரவை,
யாழ் பிரதேச செயலகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று கரும்புலிகள் நாள் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6
தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் நாள் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று கடைப் பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதுடன், அது பற்றிய படங்களும் வெளியிடப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றுகூடும் இடத்தில் நேற்று முற்பகல் மெழுகுவர்த்திகள் ஏற் றப்பட்டு உணர்வுபூர்வமாக கரும்புலிகள் நாள் நினைவு கூரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தின் விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் கரும்புலி மில்லரின் உருவப் படம் வைக்கப்பட்டது. அவற்றுக்கு முன்னால் மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு கரும்புலிகள் நாள் நினைவு கூரப்பட்டடது. அவ்வாறு நிகழ்வு இடம்பெறு வதாகக் கிடைத்த தகவலையடுத்து பல்கலைக்கழக வாயிலில் அரச புலனாய்வாளர்கள் ஒன்றுகூடி மாண வர்கள் பலரின் அலைபேசியைச் சோதித்தனர் என் றும் கூறப்பட்டது.



1987ஆம் ஆண்டு ஜூலை 5ஆம் திகதி யாழ்ப்பாணம் நெல்லியடியில் முதலாவது கரும்புலியான கப்டன் மில்லர் என்றழைக்கப்பட்ட வல்லிபுரம் வசந்தன், இராணுவ டிரக் வண்டி மீது நடத்திய தாக்குதலே தமி ழீழ விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட முதலா வது கரும்புலித் தாக்குதலாக அமைந்தது. (வ-4)

## காணமற்போனோரை பதிவு செய்ய புதிய சட்ட வரைவு நாடாளுமன்றில்

கொழும்பு, ஜூலை 6
காணாமற்போனோரைப் பதிவுசெய்வதற்கான ஏற்பாடு களுடன் கூடிய புதிய சட்ட வரைவு நாடாளுமன்றில் நேற்று முன்வைக்கப்பட்டது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகா ணங்களில் போரினால் ஏற் பட்ட அரசியல் அமைதிக் குலைவினால் அல்லது குடி யியல் குழப்பங்களில் அல் லது வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்ட காணா மற்போனவர்களைப் பதிவு செய்யவதற்காகவே இந்த சட்ட வரைவு முன்வைக்கப் பட்டது.

இறப்புகளின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தம் சட்டம் என்ற பெயரிலேயே அரசின் பிரதம கொறடாவான அமைச் சர் கயந்த கருணாதிலக இந்த சட்ட வரைவை முன்வைத்தார்.

இறப்புக்களின் பதிவுச் சட்டத் துக்கு தற்காலிக ஏற்பாடு களாக காணாமற்போன ஆள்களைப் பதிவுசெய்யும் விடயத்தைத் திருத்தியதாகவே இந்த சட்ட வரைவு கொண்டு வரப்பட்டதாக அவர் தெரி வித்தார். (வ-4)

## யாழ்ப்பாணத்துக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:
யாழ்.குருநகர் சவக்காலைச் சந்தியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த தனபாலசிங்கம் குலசிங்கம் (வயது-35) என்ற கடற்றொழிலாளியை பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் சோதனையிட்டனர். இதன்போது அவரது உடமையில் இருந்து குறிப்பிட்டளவு கஞ்சா மீட்கப்பட்டது. அதனால் அவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணை யில் பருத்தித்துறையிலுள்ள தனது சகோதரி வீட்டில் பெருமளவு கஞ்சா இருப்பதாகத் தகவல் கிடத்தது.

இதனையடுத்து பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் பருத்தித்துறைக்குச் சென்று மேற்கொண்ட தேடுதலில் சுமார் 40 கிலோ எடையுள்ள கேரளாக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப் பட்டன. இந்தப் பொதிகள் சுமார் 60 இலட்சம் ரூபா பெறுமதியா னவை. யாழ். மாவட்டத்தில் கடந்த 40 நாள்களில் மட்டும் 135 கிலோகிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டது - என்றார்.

இந்தத் தேடுதல் வேட்டை யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி எம்.வீரசிங்கவின் வழிகாட்டலில் பொலிஸ் உப பரிசோதகர் சிறிகஜனினினால் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்த பொலிஸார், கைதானவர் இன்று யாழ். நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவார் என்றும் குறிப்பிட்டனர். (வ-4,106)

## பருத்தித்துறைக்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகத்துக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு மருத்துவ பரிசோத னைகள் மற்றும் விசாரணைகளின் பின்னர் கடற்படையினரால் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சில மாதங்களாகக் குறைந்தளவானவர்களே பிடிபட்டு வந்த நிலையில், நேற்று அதிகளவானோர் பிடிபட்டனர். மீன் இனப் பெருக்கக் காலமான ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னரான 40 நாள்களில் எவரும் கடலுக்குச் செல்ல மாட்டார்கள். அதனால் எவரும் கைது செய்யப்படவில்லை.

ஜூன் 2ஆம் திகதிக்குப் பின்னர் ஊர்காவற்றுறையில் 3 தடவைகளில் 11 பேரும், அதன் பின்னர் பருத்தித்துறையில் 5 பேரும் பிடிபட்டனர். அதன் பின்னர் கடந்த சனிக்கிழமை பருத்தித் துறையில் 5 பேர் கைது செய்யப்பட்டனர். யாழ்.மாவட்டத்துக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் நேற்றுவரை 6 தடவைகளில் 38 பேர் கைது செய்யப்பட்டனர் என்று ரமேஸ்கண்ணா தெரி வித்தார்.

இதனைவிட நேற்றுமுன்தினம் புத்தளம் கற்பிட்டிக் கடலில் 6 பேர் கைது செய்யப்பட்டு மன்னார் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (வ-4,101)

KU Education
உடனடி வேலைவாய்ப்பு
கே.யுவின் நல்லூர்க்கிளையில்

Job Opportunities
1) Receptionist -Female/under 24 yrs
2) Marketing Executives (Male/Female)
3) Branch Manager
4) Office Boy/General Assitant




மேற்படி பணிநிலைக்கு உடன் ஆட்கள் தேவை. அனுபவமற்றவர்களும் (பணிநிலை 1,2,4) பயிற்சியாளராக இணைய விண்ணப்பிக்கலாம். கடின உழைப்பு,முடிவெடுக்கும் திறன் ,நல்ல தொடர்பாடல் திறன் உள்ளவர்கள் தேவை. பாடசாலைக்கல்விச்சான்றிதழ்கள் கவனிக்கப்படாது. உங்கள் தனிப்பட்ட திறமையே கவனிக்கப்படும்.

தினசரி நேர்முகத்தேர்வு -10 am-1.00 pm

இல 788/4,செம்மணி வீதி(கிட்டுப்பூங்கா எதிரில்)
நல்லூர்.(முத்திரைச்சந்தியடி) Call :0777-302882
021-3208342 /0777302882 | www.kugroup.info

கே.யுவின் பிரித்தானிய ஆங்கிலக்கல்லூரி
தற்போது புனித நகர் நல்லூரில்.




16 Years
SDP
STUDY UK
Student Visas

இடமாற்றப்பட்டுள்ளது

IELTS AC/G /Life Skills(Personal Coaching )
IELTS Group Class
Diploma in English
I-Spoken
Hotel Management

MBA(UK) Qualified Lecturers
Library Facilities
E-Books and more

Visit our we site for more http://edu.kugroup.info
இல 788/4,செம்மணி வீதி(கிட்டுப்பூங்கா எதிரில்)
நல்லூர்.(முத்திரைச்சந்தியடி) Call :0777-302882

தனிப்பட்ட முறையில் கற்கக்கூடிய, உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்கும ஒரே சர்வதேசக்கல்லூரி

021-3208342 /0777302882 | www.kugroup.info

யாழ்ப்பாண ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்மென்ஸ், பி.எல்.சி கிளை தற்போது புதிய இடத்தில்

233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுக்கு சௌகரியமான சேவையை வழங்குவதற்காக ட்ரேட்பினான்ஸ் இன்வெஸ்மென்ஸ் பி. எல்.சி யாழ்ப்பாணக் கிளை 2016 யூலை 6 ஆம் திகதி சுபநேரத்தில் புதிய முகவரியில் திறந்து வைக்கப்படுகிறது.

தலைமை அலுவலகம்:-
யூனியன் பிளேஸ்
கொழும்பு - 02
011 268 8421
BBB-

வாடகைக்குத் தேவை
யாழ் இந்துக் கல்லூரியை அண்மித்த 3km பகுதிக்குள் 3 பேர் கொண்ட ஆசிரியர் குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. (நல்லூர், கந்தர்மடம், திருநெல்வேலி போன்ற இடங்கள் விரும்பத்தக்கது)
077 118 8212

காணி தேவை
பலாலி உட்பட்ட வலி. வடக்குப் பிரதேசத்தில் 10 பரப்புக்கு மேற்பட்ட காணி தோட்டம் செய்வதற்கு குத்தகைக்கு/ விலைக்குத் தேவை.
077 609 4232

வேலையாள் தேவை
ஹோட்டல் ஒன்றுக்கு கொத்து ரொட்டி தயாரிப்பவர் தேவை.
076 897 2849 , 021 224 3394

ASTROLOGY SOFT WARES BASED ON
வாக்கிய பஞ்சாங்கம்
ICS நிறுவனத்தாரின் வாக்கிய பஞ்சாங்க முறையிலான Softwares விற்பனைக்கு துல்லியமான கணிதம் எல்லாம் நாடுகளுக்குமானது திருமண பொருத்தம் சுபமுகூர்த்தம், குழந்தை பெயர் நியுமராலஜி உள்ளடக்கப்பட்டுள்ளது. ஜாதகம், 7,11,21,115 பக்கங்களில் பிரிண்ட் செய்யும் வசதி
கமலநாதன்
077 789 1945

விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்
- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்றர்
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனின் ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 - 12 - 1995

மறைவு
06 - 07 - 2015



# சிவன் வேலாயுதம்

என் வீட்டில் வந்துதித்த சூரியனே சோதிசிவனே
எமக்கு ஒளி தந்தவனே எம் உணர்வை தொட்டவனே
நாடெல்லாம் நாம்திரிந்தோம் உன் நோய் தீர்க்க
பாடுகளின் அவதிகளை பகுத்துணர்ந்தேன் உன்னால்

கோயில்களில் வீற்றிருந்து அருள்பொழியும் சிவன்போல்
இல்லத்தில் நீ இருந்துஎன் உள்ளத்துக்கு வலுத்தந்தாய்
சிந்தையில் உன்போல் தெய்வக்குழந்தைகளை கண்ணுற்று
உன்நாம இல்லங்கள் அமைத்து உட்காரவைத்தேன் சிவனே

பாரெல்லாம் பறந்து திரிந்தாலும் பக்கத்தில் நீ இல்லையே
சோர்ந்த என்மனது சோகத்தின் பாரத்தில் விம்முதையா!
ஆண்டவனின் படைப்புக்கள் பல்லாயிரம் ஆயினும்
அத்தனையும் இறையருள் முத்துக்கள் அருஞ்சொத்துக்கள்

இருபது அகவையில் எமைவிட்டு இறையடி சேர்ந்த ஐயா!
கருவறைத் தெய்வமாய் காத்தருள் சேர்ப்பாய் ஐயா!
இல்லக் குழந்தைகளுக்கு இறைவன் நீதானே ஐயா!
உள்ளத்தில் என்றென்றும் உறைபவன் நீயன்றோ ஐயா!–
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**சிவன் பவுண்டேசன்**
**அறக்கட்டளை நிலையம்**
**நெல்லியடி, கரவெட்டி.**

**கணேஸ்வரன் வேலாயுதம்**
**எட்னா வேலாயுதம்**
**லீலா வேலாயுதம் உற்றார் உறவினர்கள்,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு 3 மாத கடூழியச் சிறை

## வாகனம் செலுத்த ஒருவருட தடை

யாழ்ப்பாணம், ஜூலை 6
மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கு தலா 3 மாதங்கள் கடூழிய சிறைத் தண்டனையும், 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அவர்களது சாரதி அனுமதிப் பத்திரங்களை ஒரு வருடத்துக்குத் தடுத்து வைக்குமாறு யாழ்.நீதிமன்று உத்தரவிட்டது.

மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய குற்றச்சாட்டில் கோப்பாய் பொலிஸாரால் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். யாழ். நீதிவான் மன்றில் இவர்கள் கடந்த வியாழக்கிழமை முற்படுத்தப்பட்டனர். இருவர் தமக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்குத் தலா 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும், தலா 3 மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. அவர்களுடைய சாரதி அனுமதிப் பத்திரங்களை ஒரு வருடத்துக்கு இடை நிறுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

குற்றச்சாட்டுக்கு சுற்றவாளி எனத் தெரிவித்தவரை ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையிலும், 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் செல்லுமாறு உத்தரவிட்ட நீதிவான் சி.சதீஸ்தரன், வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும் வரை அவருடைய சாரதி அனுமதிப் பத்திரத்தை இடைநிறுத்தி வைக்குமாறும் பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.
(ந-ஐ-4,103)

# எருமையுடன் மோதி இருவர் படுகாயம்

முல்லைத்தீவு, ஜூலை 6
காட்டுப் பகுதியால் வேகமாகப் பயணித்த இருவர் எருமை மாட்டுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகினர். அவர்கள் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர் என்று முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு முல்லைத்தீவு முள்ளியவளை காட்டுப் பகுதியில் நடந்துள்ளது.

முல்லைத்தீவு இத்திமடு நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் உற்சவத்துக்காக மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே படுகாயமடைந்தனர். முள்ளியவளை வீதியைக் கடக்க முற்பட்டபோது எருமை மாட்டுடன் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்துக்குள்ளான எருமை மாடும் பலத்த காயங்களுக்குள்ளானது. மோட்டார் சைக்கிளும் சேதங்களுக்குள்ளானது என்று முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.
(ந-ஐ-21)

# ஜோர்ஜ் மாஸ்டர் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 6
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் மொழி பெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டரை அனைத்துக் குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிப்பதாக சட்ட மா அதிபர் அறிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் மொழி பெயர்ப்பாள ராகப் பணியாற்றிய ஜோர்ஜ் மாஸ்டர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டர் ஆகிய இருவரும் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதான நீதிவான் மன்றில் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

ஜோர்ஜ் மாஸ்டரின் உடல்நிலையைக் கருத்திற் கொண்டு, அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்குமாறு மன்றில் ஏற்கனவே விண்ணப்பம் செய்யப்பட்டது. நேற்றைய தினம் சட்ட மா அதிபரின் அறிவித்தலுக்கமைய ஜோர்ஜ் மாஸ்டரை விடுவிக்கக் கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய கட்டளையிட்டார்.

தயா மாஸ்டர் மீதான குற்றச் சாட்டுக்கள் தொடர்பில், சட்டமா அதிபரின் ஆலோசனைகிடைக்கப் பெறவில்லை. இதனால் வழக்கு டிசெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-5)

## சுகாதார உத்தியோகத்தர் டெங்கால் சாவு

கொழும்பு, ஜூலை 6
டெங்குத் தொற்றால் சுகாதார உத்தியோகத்தர்ஒருவர்உயிரிழந்தார். கண்டி மாநகர சபையின் சுகாதார உத்தியோகத்தரான 38 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார். கடந்த மாதம் 25 ஆம் திகதியில்இருந்துதொடர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவர் உயிரிழந்துள்ளார். நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற டெங்கு நிகழ்ச்சித்திட்டத்தில்இவர்பங்கு பற்றியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
(ந-ஐ-5)


முதலாம் ஆண்டு நினைவேந்தல்

தோற்றம் 20 . 02 . 1920
மறைவு 03 . 04 . 2015



தோற்றம் 24 . 06 . 1927
மறைவு 18 . 06 . 2015

அமரர் நாகர் ஏரம்பு — அமரர் சின்னம்மா ஏரம்பு

உயிர் தந்த அம்மாவே! உணவு, உடை, கல்வி தந்த ஐயாவே!
தேனிலும் இனிய வாழ்க்கை வாழ்ந்த தெய்வங்களே!
வசந்தமுடன் வாழ எங்களுக்கு வழிகாட்டிய மாணிக்கங்களே!
தேசத்தில் தேகம் விட்டுச் சென்று ஓராண்டு நிறைவில்
மாயக்குழல் ஊதி ஆயர் குலம் காத்த மாயக்கண்ணன் திருவடிகளில் என்றும்
ஆனந்தமாய் இன்புற்றிருக்க எக்கணமும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நீங்காத நினைவுகளுடன்....

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.
(Ga/2648) (11.18.17)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



3ஆம் ஆண்டு நினைவலைகள்

அவதாரம் 02.01.1937
மறைவு 09.07.2013



திருமதி நல்லம்மா பொன்னம்பலம்
(ஓய்வுநிலை ஆசிரியை)

திதி:
ஆனி மாத
பூர்வபக்க துதியை
- 06.07.2016

நல்லதோர் இல்லத்தரசியாய்
நலிந்தோருக்குத் தொண்டுகள் பல செய்து
வாழ வைத்து வாழ்ந்த பெருந்தகை
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

டச்சு வீதி,மீசாலை.
(C/88) (11.17.18)
குடும்பத்தினர்.



6ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
மனோன்மணி
கந்தசாமி
(முறிவு நெரிவு வைத்தியர்)



பிறப்பு
04.12.1947
இறப்பு
29.06.2010

ஆண்டுகள் ஆறு ஆனாலும் ஆறவில்லையம்மா எம் துயரம்
மாண்டவர் மீண்டதில்லை என்றாலும்
மனம் தாங்க முடியவில்லையம்மா
மீண்டு வரமாட்டாயா? என ஏங்கித் தவிக்கின்றோம்.

பாடசாலை வீதி, கட்டுடை,
மானிப்பாய்.
(Ga/2606) (11.17)
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
இராயப்பு
மரியகொறர்ரா (மணி)

மண்ணகம்
09.10.1961





விண்ணகம்
06.07.2013

எம்மோடு வாழ்ந்து மறைந்த எம்
தெய்வமே!
எங்கு சென்றாய், நெடுந்தூரப் பயணம்
சொல்லாமல்
வழிமேல் விழிவைத்துப் பார்க்கிறோம்,
கண்ணிருந்தும் உனைக் காணும் வரம்
கொடுக்கலையே இறைவன்
உன்னைக் காணும் காலம் தூரமில்லை!!

[illegible] வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.
கணவர்,மகள்,அப்பா, அம்மா,
சகோதரர்கள்.
077 807 7862


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 6
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் மின்சாரம் தடைப் பட்டிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் கோண்டாவில் இருபாலை வீதி, கோண்டாவில் பலாலி வீதி, கோண்டாவில் யாழ்வீதி, புனிதநகர், வராத்துப்பளை, கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, வெளிச்சவீடு, சிவப்பிரகாசம், 3 ஆம் குறுக்குத்தெரு, கற்கோவளம் ஜெயந்தா கைத்தொழில் பூங்கா ஆகிய இடங்களிலும், வவுனியாவில் ஆதி விநாயகர் கோவில் பிரதேசத்திலும் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார். (ற-ஜ-ரி)



இரணைமடுவில் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி இராணுவத்தினரின் புதிய கண்டுபிடிப்புக்கள் கண்காட்சி ஒன்று இடம்பெற்றது. மாவட்டத்தைச் சேர்ந்த இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் பாடசாலை மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர். (ற-21)

# காணிகள் இராணுவத்தின் வசம் வாழ வழியற்று தவிக்கும் மக்கள்

## திருமுறிகண்டி, வசந்தநகர் கிராமங்களின் நிலை

முல்லைத்தீவு, ஜூலை 6
பசுமை நிறைந்த சொந்தக் காணிகளை இராணுவத்தினரிடம் கொடுத்துவிட்டு வெட்டை வெளியில் அநாதரவாக இருக்கின்றோம். எங்களுக்கு வீட்டு வசதிகள் உட்பட அடிப்படை வசதிகள் எவையும் செய்து கொடுக்கப்படவில்லை.

இவ்வாறு திருமுறிகண்டி மற்றும் வசந்தநகர் கிராமங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர்.



போருக்கு முன்பு சுமார் 740 குடும்பங்கள் வீட்டு வசதிகளுடனும், 130 குடும்பங்கள் இணைப்பாகவும் வசந்தநகரில் வாழ்ந்தனர். இப்போது 421 குடும்பங்கள் மட்டுமே மீளக் குடியமர்ந்துள்ளனர். அவர்களில் 270 குடும்பங்களுக்கு மட்டுமே இதுவரை வீட்டு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிராமத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 60 குடும்பங்கள் உள்ளன. மீள் குடியமர்ந்துள்ள குடும்பங்களில் 29 குடும்பங்கள் தனி ஒரு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களாகும். இவர்கள் உள்ளடங்கலாக இந்தக் கிராமங்களில் மொத்தம் 122 குடும்பங்களுக்கு இதுவரை வீட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.

கிராமத்திலுள்ள 53 தனி நபர்களைத் தவிர மற்றையவர்கள் நிரந்தர வருமானம் அற்றவர்கள். இவர்கள் வாழ்வாதாரத்துக்காகக் கூலி வேலைகளையும், வீதி வேலைகளையும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

வேலைகள் கிடைக்கும் நாள்களிலேயே அவர்களின் வீடுகளில் அடுப்பெரியும். அதுவும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வேதனை சொல்லில் அடங்காதவை - என்று அந்தக் கிராமத்தில் உள்ள வயது முதிர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

"எனது கணவர் இறுதிப் போரில் எனது கண்முன்னே இறந்து போனார். நாம் போருக்கு முன்பு இந்தப் பிரதேசத்தில் 2 ஏக்கர் காணியில் தென்னை, மா, பலா போன்றவற்றால் கிடைத்த வருமானத்தாலும், கணவரின் வருமானத்திலும் தலை நிமிர்ந்து வாழ்ந்தோம். தற்போது கணவரும் இல்லாத நிலையில் வருமானம் ஈட்டித் தந்த எனது காணியும் இல்லை. என்னிடம் இருந்து 2 ஏக்கர் காணியை அபகரித்த இராணுவம் அதற்குப் பதிலாக அரை ஏக்கருக்கும் குறைந்த ஓர் வெட்டை வெளி காணித் துண்டை வழங்கினர்.

எனது மூன்று பிள்ளைகளின் கல்விக்காக அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய உதவி மட்டுமே கிடைத்தது. சிரமத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றேன். என்னைப் போன்றவர்களிடம் அபகரிக்கப்பட்டுள்ள நிலங்களையாவது, இந்த நல்லாட்சி அரசு விடுவித்து, இங்கு நடப்பது நல்லாட்சி என நிரூபணம் செய்ய வேண்டும்" - என்று அங்கு வாழும் பெண் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது வீடுகள் கிடைத்துள்ளன. இந்தக் கிராமங்களில் உள்ள சில குடும்பங்களுக்கும் சில வீடுகளை வழங்க வேண்டும். இவர்களுடைய சொந்தக் காணிகள் தற்போது இராணுவத்தின ரிடம் உள்ளன. அவர்கள் அவற்றை விடுவித்தாலே மீள் குடியமர்த்த முடியும். அரசுதான் அதை முடிவு செய்ய வேண்டும் - என்று ஒட்டு சுட்டான் பிரதேச செயலர் தெரிவித்தார். (ற-ஜ-21,101)

# வரட்டுக் கௌரவங்களை விட்டு மக்கள் நலனுக்காக செயற்படுவோம்

## வட மாகாணசபை உறுப்பினர் பரஞ்சோதி தெரிவிப்பு

அச்சுவேலி, ஜூலை 6
வடக்கு மாகாண சபையால் 34 மாதங்களில் எந்தவித பெரிய பொருளாதார திட்டங்களையும் வகுத்துச் செயற்பட முடியவில்லை. வரும் திட்டங்களுக்கும் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. வரட்டுக் கௌரவங்களை விட்டு மக்களின் நலனே முக்கியம் என்று செயற்பட சகலரும் முன்வர வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்தார்.

பொருளாதார மத்திய நிலைய விவகாரம் தொடர்பாக அ.பரஞ்சோதி வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது:

கிராமியப் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது தொடர்பில் கடந்த பல மாதங்களாக பலவித முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எமது மக்கள் இரண்டு பட்ட நிலையில் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். இது முழுக்க முழுக்க மத்திய அரசின் முதலீட்டுத் திட்டமாக இருந்தபோதும், வட பகுதியின் பொருளாதார விடயமாவதால் இயல்பாகவே வடக்கு மாகாணசபையும், இதன் பங்குதாரராக ஆக்கப்பட்டுள்ளது.

வடக்குக்கான பொருளாதார மத்திய நிலையம் சம்பந்தமான குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களின் மாற்றத்தை ஏற்படுத்தினாலொழிய, தாண்டிக்குளத்தைவிட வேறிடத்துக்கு அதைக்கொண்டு செல்வது முடியாத காரியமாகும். மீறின் இந்தத் திட்டமானது வடக்கை விட்டுப் போவது தவிர்க்க முடியாததாகிவிடும்- என்றுள்ளது. (ற-ஜ-1)

## ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 6
ஞாபகங்கள் என்னும் தலைப்பில் ஓவியக்கண்காட்சி இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இல.15 றக்கா வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலை முற்றத்தில் நடை பெறும்.

கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கண்காட்சி, இன்று புதன்கிழமையும் நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-ஜ-ரி)

## அலங்காரத் திருவிழா

தென்மராட்சி. ஜூலை 6
சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலய அலங்காரத் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து 15 தினங்கள் திருவிழாக்கள் இடம் பெற்று, எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும். (ற-ஜ-9)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 6
வட்டு. மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரியின் அதிபர் திருமதி பு.பஞ்சாட்சரத்தின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தலைமை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரி சு.நோபேட் உதயகுமாரும் கலந்து கொள்வர். (ற-ஜ-ரி)

## விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 6
டி.எம்.ஐ கணினிக் கற்கை நிறுவனத்தின் வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக அமெரிக்க பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆர்.லோகேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்களான க. தர்மலிங்கம், பா.கஜதீபன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ற-ஜ-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தைக் காக்க முயல்வோரிடம் எவ்வாறு நீதியை எதிர்பார்க்க முடியும்?

## காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் கேள்வியெழுப்புகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 6
இராணுவத்தைப் பாதுகாக்க முற்படும் ஒருவரிடமிருந்து எவ்வாறு நீதியை எதிர்பார்க்க முடியும்?. பன்னாட்டு விசாரணையைத் தமிழ் மக்கள் திரும்பத் திரும்பி அழுத்திக் கேட்பதற்கு இவ்வாறான நிலைப்பாடுகளே அடிப்படைக் காரணம். இவ்வாறு காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் தெரிவித்தார்.

போரின் போது இராணுவம் கொத்துக் குண்டுகளைப் பாவித்திருந்தால் அது சட்ட விரோதமானது அல்ல என்று காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்திருந்தார்.

அது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மகேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

பரணகமவின் கருத்து தமிழ் மக்களைப் புண்படுத்தும் செயலாகும். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கொத்துக் குண்டு விவகாரத்தில் நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார். மக்ஸ்வெல் பரணகம தெரிவித்த கருத்தானது, இராணுவம் போரில் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தியமைக்கு ஆதாரமாக அமைந்திருக்கின்றது.

போரின் போதான மனித உரிமை மீறல்கள், காணாமற் போனவர்கள் தொடர்பில் நீதியான விசாரணையை மேற்கொள்ள வேண்டிய தலைவர் இவ்வாறான கருத்தைக் கூறுகின்றார். தமிழ் மக்கள் இவரிடமிருந்து தமக்கு நீதி கிடைக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? இராணுவத்தைப் பாதுகாக்க முற்படுபவர் எப்படி நீதியை வழங்குவார்? பாதிக்கப்பட்ட மக்கள் இலங்கையில் நடத்தப்படுகின்ற விசாரணைக்கு எதிர்ப்பையும், பன்னாட்டுவிசாரணையையும் கோருவதற்கு இதுதான் காரணம்.

கடந்த வருடம் ஜனவரி 8 ஆம் திகதி ஆட்சி மாற்றத்துடன் ஜனநாயகச் சூழல் தோன்றியிருக்கின்றது. காணாமற் போனவர்கள் விவகாரம், தமிழ் அரசியல் கைதிகள் விடயம், மீள்குடியமர்வு என்பன ஆரம்பப் புள்ளியிலேயே இன்னமும் இருக்கின்றன. மக்கள் இந்த ஆட்சி மீதும் விரக்தியடையக் கூடும்- என்றார். (ற-ஜ-5)

## கைப்பையில் பணம் திருடியவர் சி.சி.ரி.வி. கமராவால் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூலை 6
யாழ். நகரிலுள்ள தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றில் பெண் ஒருவரின் கைப்பையிலிருந்து 15 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடியவர் அங்கிருந்த சி.சி.ரி.வி. கமராவால் சிக்கினார்.

குறித்த விற்பனை நிலையத்துக்குச் சில நாள்களுக்கு முன்னர் தொலைபேசி வாங்குவதற்குச் சென்ற இளம்பெண், தனக்கு அருகில் மேசையில் கைப்பையை வைத்து விட்டு கொள்வனவு செய்யவுள்ள பொருளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பின்னர் அந்தப் பெண் பணப்பையைத் தேடிய போது காணாததால் அது திருடப்பட்டிருக்கலாம்என்று கடைக்காரரிடம் கூறினார். அங்கு பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பார்த்தபோது திருடன் பணப்பையைத் திருடிச் செல்வது பதிவாகியிருந்தது.

"உடனேயே தேடியபோது நகரில் நின்றிருந்த திருடன் பிடிக்கப்பட்டான். பணம் திருடியதை அவன் ஒப்புக் கொண்டான். திருடிய பணத்தைத் திருப்பித் தந்து மன்னிப்புக் கோரியுள்ளான். பணம் உரிய பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டது. திருடன் மன்னிப்புக் கேட்டதால் அவன் மன்னித்து விடுவிக்கப்பட்டான்" என்று அந்தக் கடை உரிமையாளர் தெரிவித்தார்.

திருட்டுத் தொடர்பில், பிடிபட்ட திருடனை பொலிஸில் ஒப்படைக்கவில்லை. அது பற்றிப் பொலிஸாருக்கு அறிவிக்கவுமில்லை - என்றும் அவர் தெரிவித்தார். (ற-ஜ-4,ரி)

## தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருட்டில் தவிக்கும் நோயாளர்கள்

வலி.வடக்கு, ஜூலை 6
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் விடுதிகளில் 150இற்கும் மேற்பட்ட மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை. 50இற்கும் மேற்பட்ட மின்விசிறிகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. இதனால் அங்குள்ள நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கடந்த சில மாதங்களாக அங்குள்ள மின்விசிறிகள் மின்குமிழ்கள் செயலிழந்துள்ளன. இரவு நேரத்தில் இருள் சூழ்ந்து காணப்படுகின்றது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு வந்த யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு விடுதிகளையும் பார்வையிட்டார். அவருடனான கலந்துரையாடலின் போதும் மேற்படி விடயம் நோயாளர் நலன்புரி சங்கத்தால் சுட்டிக் காட்டப்பட்டது.

பழுதடைந்த மின்குமிழ்களுக்கப் பதிலாக புதிய மின் குமிழ்களும், பழுதடைந்த மின்விசிறிகளைத் திருத்தியும் தருகின்றோம் என்று குறித்த பிரிவைக் கட்டுவதற்குப் பணம் சேகரித்திருந்த ட்ரெயில் நடைபாதைக் குழுவினர் தெரிவித்துள்ளனர் - என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் தெரிவித்தார். (ற-ஜ-4,25)



## கைவினைப் பொருள்களின் விற்பனை நிலையம் திறப்பு

முல்லைத்தீவு, ஜூலை 6
நெசவு மற்றும் கைவினைப் பொருள்களின் விற்பனை நிலையம் முல்லைத் தீவில் திறக்கப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இரணைப்பாலை வீதியில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கடந்த சனிக்கிழமை நிலையத்தைத் திறந்து வைத்தார்.

உள்ளூர் உற்பத்தி நிலையத்தின் கட்டடத்தைத் திறப்பதில் மகிழ்வடைகின்றேன். உற்பத்தியாளர்கள் எதுவித சலிப்பும் இன்றி இன்னும் முன்னேற்றம் காணவேண்டும். எந்தவொரு மனிதரும் ஒரே தடவையில் முன்னேறிய வரலாறுகள் இல்லை. படிப்படியாகச் சிந்தித்து முன்னேறிய வரலாறுகளே உண்டு. மனிதனுக்குத் தீங்கு விளைவிக்காத உள்ளூர் உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்துவதால் பல நோய்த்தாக்கங்களில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமாக வாழ முடியும். நாம் எவரிடமும் கையேந்த வேண்டியதில்லை. வறுமையை எதிர்கொள்ள வேண்டிய தேவையும் இல்லை - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கூறினார்.

முல்லை மாவட்ட தொழிற்றிணைக்கள உத்தியோகத்தர் சஞ்சிவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், உற்பத்தியாளர்கள், பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ஜ-21)

## இந்திய எல்லைக்குள் செல்ல முற்பட்ட மூவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஜூலை 6
அதிவேக இயந்திரம் பொருத்திய படகில் இந்திய எல்லைக்குள் செல்வதற்கு முற்பட்ட குற்றச்சாட்டில் 3 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸார்தெரிவித்தனர்.

காங்கேசன்துறைக் கடற்படையால் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

ஒருபடகில் 3பேர்பயணித்துள்ளனர். அவர்களில் 2 பேர் தொண்டமனாற்றையும், ஒருவர் கெருடாவிலையும் சேர்ந்தவர்களாவர்.

அவர்களிடமிருந்து வலை மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறினர். ஆனால் அவர்கள் என்ன காரணத்துக்காக அதிவேக இயந்திரம் பொருத்திப்பயணித்தனர்என்றோ, எதற்காக இந்திய எல்லைக்குச் செல்ல முற்பட்டனர் என்பது குறித்தோ பொலிஸாரிடமிருந்து தகவல்களைப்பெறமுடியவில்லை. (ற-ஜ-4,26)

## பயணிகள் குறைவு என்றாலும் காங்கேசன்துறை வரை சேவை

### தனியார் பஸ் சேவை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6
காங்கேசன்துறைக்கு பயணம் மேற்கொள்ளும் பொதுமக்கள் குறைவாக உள்ள போதும் பஸ் சேவைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு காங்கேசன்துறை தனியார் பஸ் சேவை உரிமையாளர் சங்கத் தலைவர் த.யோகராசா தெரிவித்தார்.

காங்கேசன்துறை வரையிலான போக்குவரத்துச் சேவை 26 ஆண்டுகளின் பின்னர் கடந்த மாதம் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. காங்கேசன்துறை வரையிலான பகுதிகள் மக்கள் பாவனைக்கு விடுவிக்கப்பட்ட பின்னர் இந்தப் போக்குவரத்துச் சேவைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

23 பஸ்கள் காங்கேசன்துறை வரையிலான சேவையில் ஈடுபடுகின்றன. 10 நிமிட இடைவெளியில் இந்தச் சேவை நடத்தப்படுகின்றது. பொது மக்கள் காங்கேசன்துறை வரையில் வருவது குறைவாக இருக்கின்றது. மக்கள் அங்கே இன்னமும் நிரந்தரமாகக் குடியிருக்கவில்லை. அவர்கள் காணிகளைப் பார்வையிடத்தான் வந்து செல்கின்றார்கள். அதற்காக எமது சேவைகளை இடைநிறுத்தாமல் நாம் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றோம் - என்று த.யோகராசா தெரிவித்தார். (ற-ஜ-5-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேவைக்கு வழங்கிய காணியை தனியாருக்குப் பகிர்ந்தளிப்பதற்கு எதிர்ப்பு

கிளிநொச்சி, ஜூலை 6

கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டதாக கூறப்படும் காணி யைத் தனியாருக்கு வழங்கும் முயற்சி பொதுமக்களின் எதிர்ப் பால் கைவிடப்பட்டது. கரைச்சிப் பிரதேச செயலகம் நேற்றுமுன் தினம் காணியை நிலஅளவை செய்ய முற்பட்டதை அடுத்தே பொதுமக்கள் இவ்விதம் எதிர்ப்பு வெளியிட் டுள்ளனர்.



கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களத்துக்குச் சொந்தமாகக் காணி இல்லை. உதய நகர் மேற்கில் 2012 ஆம் ஆண்டு திணைக் களத்துக்கு காணி ஒன்று ஒதுக்கப்பட்டது.

வலயக் கல்வித்திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் காணிக்கு சுற்று வேலி அமைக்கப்பட்டது. பிரதேச பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களால் பொது சிரமதானமும் மேற்கொள்ளப்பட்டது.

அந்தக் காணியை கால் ஏக்கர் வீதம் தனியாருக்கு வழங்குவதற்காக நில அளவைத் திணைக்களம் நில அளவை செய்ய முற்படுகின்றது என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர்.

“எங்களுடைய பிரதேசத்துக்கு பல்வேறு பொதுத் தேவைகளுக்காகக் காணிகள் தேவைப்படுகின்றன. நகரை அண்டிய பிரதேசத்தில் இனிவரும் காலங்களில் சிறுதுண்டு பொதுக் காணியும் பெற்றுகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. கல்வி வலயத்துக்காக ஒதுக்கப்பட்ட சுமார் நான்கு ஏக்கர் பொதுக் காணி தனிநபர்களுக்கு, அரசியல் அழுத்தத்தால் வழங்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. உதயநகரில் பிறந்து வளர்ந்து வாழ்கின்ற பலர் இன்றும் சொந்தக் காணியின்றி உள்ளனர். ஆனாலும் நாங்கள் இந்தக் காணியைப் பொதுத் தேவை கருதி பாதுகாத்து வந்தோம். இப்போது வேறிடங்களில் உள்ள தனிநபர்களுக்கு அதைத் தாரைவார்க்க முனைவது நியாயமற்றது. குறித்த காணியை வலயக் கல்வித்திணைக்களம் பொறுப்பேற்க விரும்பாவிட்டால், இது கிராமத்தின் அல்லது மாவட்டத்தின் பொதுத் தேவைக்கு பயன்படுத்தப்பட வேண்டும். அல்லது கிராமத்தில் காணியின்றி வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்” - என்று அந்தப் பகுதி மக்கள் கூறினர்.

மக்களின் எதிர்ப்பை அடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் தமது செயற்பாடுகளைக் கைவிட்டுச் சென்றனர்.

“இந்தக் காணி கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் ஆளுகையின் கீழ் இருந்தது. போர் முடிந்த பின்னர் கிளிநொச்சி வலயத்துக்கென காணிகள் எதுவும் இல்லை எனவலயகல்வித் திணைக்களத்தினர் கேட்டனர். 2012 ஆம் ஆண்டு அந்தக் காணி அவர்களிடம் கையளிக்கப்பட்டது. காணியை வழங்கிய பின்னர் வலயக்கல்வித் திணைக்களத்தினர் காணியைச் சுற்றி வேலி மட்டும் அமைத்தனர். அதில் எந்த அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளவில்லை. கிளிநொச்சி மத்திய ஆரம்ப பாடசாலை வளாகத்தில் தற்காலிகமாக குடியிருக்கும் மக்களுக்கு அந்தக் காணியைப் பகிந்து வழங்குவது என்று பிரதேச செயலகத்தால் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக வலயக்கல்வித் திணைக்களத்திடம் தெரிவிக்கப்பட்டது. மத்திய ஆரம்ப பாடசாலை வளாகத்தில் இருந்து மக்களை வெளியேற்றுவதாக இருந்தால் காணியைத் தருகின்றோம் என்று அவர்கள் தெரிவித்தனர். இதை எழுத்து மூலமாகவும் வழங்கியிருந்தனர். தற்போது குறித்த காணியை அளக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் உதய நகர் மேற்கைச் சேர்ந்த மக்கள் சிலர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்” - என்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் தெரிவித்தார்.

(ற-ஜ-21,ரி3,10)

# அதிபர், ஆசிரியர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

பாடசாலையில் சிறுமிகளை பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆசிரியருக்கும் அதனை மூடி மறைத்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அதிபர் மற்றும் 2 ஆசிரியர்களுக்குமான விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

யாழ். நகரில் அமைந்துள்ள பாடசாலையில் விஞ்ஞான பாட ஆசிரியர் ஒருவரால் மாணவிகள் பாலியல் தொந்தரவுக்குட்படுத்தப்பட்டனர் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரினால் யாழ்ப்பாண சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸாருக்கு முறையிடப்பட்டது. குறித்த ஆசிரியர் கடந்த 25 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பாலியல் தொந்தரவு தொடர்பில் தெரிந்திருந்தும் அதனைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தாத குற்றச்சாட்டில் அந்தப்பாடசாலையின் அதிபர், மாணவியின் வகுப்பாசிரியர் மற்றுமொரு ஆசிரியர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, அதிபர் மற்றும் ஆசிரியர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணிகள் இச்சம்பவம் தொடர்பாக கோட்டக் கல்விப் பணிமனைக்கும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் மேலதிகாரிகளினால் எதுவித பதிலும் வழங்கப்படாமையால் இந்தச்சம்பவம் தொடர்பாக

> பாலியல் தொந்தரவு தொடர்பில் தெரிந்திருந்தும் அதனை பொலிஸாருக்குத் தெரியப் படுத்தாத குற்றச்சாட்டில் அந்தப் பாடசாலையின் அதிபர், மாணவியின் வகுப்பாசிரியர் மற்றுமொரு ஆசிரியர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

முறைப்பாடு செய்ய முடியாமல் போனது. சம்பவத்தை மூடி மறைப்பதற்கு அதிபரோ ஆசிரியரோ முயலவில்லை. அவர்களைப் பிணையில் விடவேண்டும் என்று கோரின்ர். விசாரணை நடவடிக்கைகள் முடிவடையவில்லை என்று தெரிவித்த பொலிஸார், பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவித்தனர். நீதிமன்றில் முற்பட்டிருந்த சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரும் சம்பவம் தொடர்பாக அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். அதனைத் தொடர்ந்து நால்வரினதும் விளக்கமறியலை எதிர்வரும் 18ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டார் நீதிவான் சி.சதீஸ்தரன்.

(ற-4,103,10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரோதம் இருந்தால் என்னைச் சிறையில் அடையுங்கள்

### – மகிந்த

கொழும்பு, ஜூலை 6
என்னுடன் குரோதம் இருந்தால் என்னையும், எனது குடும்பத்தினரையும் சிறையில் அடையுங்கள். எனது பிரதேச – கிராம மக்களைப் பழிவாங்க வேண்டாம். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
கங்கம அத்புடுவ விகாரையில் இடம்பெற்ற மத வைபவத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு தெரிவித்ததாவது–
எமது ஆட்சிக் காலத்தில் குடிசைகள் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக வசதியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இப்போது அரசியல் ரீதியாக கைது செய்யப்படுபவர்கள் உளரீதியாக மட்டுமல்ல உடல் ரீதியாகவும் இம்சிக்கப்படுகின்றனர். நிதி மோசடி விசாரணைப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு என்பவை நாட்டு மக்களையும், அரசியல் வாதிகளையும் அடக்குமுறைக்கு உள்ளாக்கும் நிறுவனங்களாக மாறியுள்ளன.
அரசியல்வாதிகளைச் சிறையில் அடைத்து அவர்களுக்கு மன உளைச்சளை ஏற்படுத்துவது மட்டுமின்றி, உடல் ரீதியாகவும் அவர்கள் இம்சைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.
நாட்டு மக்கள் மீது அரசு அழுத்தங்களை பிரயோகிக்கின்றது. செல்வந்தர்களிடம் வரி அறவிடுவதாகத் தெரிவிக்கும் அரசு, குடிசை வாழ் மக்களிடம் வரிகளை அறவிட ஆரம்பித்துள்ளது. சாப்பாட்டுப் பொதி வாங்கினாலும், சிறு பிள்ளைகளின் இனிப்புகளை வாங்கினாலும் அவற்றுக்கும் வற் வரி அறவிடப்படுகின்றது.
எமது ஆட்சிக் காலத்தில் குடிசைகள் ஏற்படுத்தப்படவில்லை. அதற்கு பதிலாக வசதியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. ஆனால் இன்று குடிசைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.
நாடு முன்னேற்றமடைவதையே நாமும் விரும்புகிறோம். எமது பிரதேச – கிராம மக்களைப் பழிவாங்க வேண்டாம். என்னோடு இருக்கும் குரோதத்துக்காக எமது பிரதேச மக்களைப் பழி வாங்காதீர்கள். கிராமங்களை அபிவிருத்தி செய்யுங்கள்.
என்னையும் எனது குடும்பத்தாரையும் சிறையில் அடையுங்கள். மக்களை இம்சிக்க வேண்டாம் – என்றார். (ற–ஜ–5)

# ஆண்டு இறுதியில் எட்கா; இலங்கை, இந்தியா முடிவு

கொழும்பு, ஜூலை 6
பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாட்டை (எட்கா) இந்த ஆண்டு இறுதிக்குள் எட்டுவது என்று இந்தியாவும், இலங்கையும் இணங்கியுள்ளன.



பன்னாட்டு வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, இந்தியாவின் வர்த்தக, தொழிற்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரிடையே நேற்று முன்தினம் நடந்த பேச்சில் இந்த இணக்கம் எட்டப்பட்டது.
இரண்டு நாடுகளின் அமைச்சர்களும் முன்மொழியப்பட்டுள்ள எட்கா உடன்பாட்டின் முன்னேற்றங்கள் தொடர்பாக மீளாய்வு செய்தனர். வேகமாக பேச்சை நடத்தி உடன்பாடு குறித்து விரைவாக முடிவை எடுப்பது என்று தீர்மானித்தனர்.
இந்த ஆண்டு இறுதிக்குள் எட்கா உடன்பாட்டில் கையெழுத்திடுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது.
இது தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக இந்திய அரசின் உயர்மட்டக் குழுவொன்று விரைவில் இலங்கை வரவுள்ளது.
இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பாகவும், இரண்டு நாடுகளின் அமைச்சர்களும் கலந்துரையாடினர்.
இந்தியா – இலங்கை இடையிலான இருதரப்பு வர்த்தகம், 2015-16 ஆம் ஆண்டில் 6 பில்லியன் டொலராகக் குறைந்தது. இதற்கு முந்திய நிதியாண்டில் இருதரப்பு வர்த்தகம், 7.45 பில்லியன் டொலராக இருந் தது.
இருதரப்பு வர்த்தகத்தை விரிவாக்க வேண்டும் என்ற நோக்கில் எட்கா உடன்பாட்டு முயற்சிகளை இரண்டு நாடுகளும் தீவிரப்படுத்தியுள்ளன. (ற–ஜ–5)



இந்திய – இலங்கை பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் பன்னாட்டு வர்த்தக மற்றும் மூலோபாய அபிவிருத்தி அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜை இந்தியாவின் புதுடில்லியில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். இந்திய – இலங்கை பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாகவும், இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு செய்து கொள்வது (எட்கா) தொடர்பாகவும் இதன் போது பேசப்பட்டுள்ளது என்று அறிய முடிகின்றது. (ற–ஜ–5)

# சு.கவை பாதுகாக்க ஜனாதிபதி முக்கிய தீர்மானங்கள் எடுப்பார்

### கட்சியின் செயலாளர் துமிந்த கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 6
சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முக்கிய தீர்மானங்களை எடுப்பார்.
இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.
சிங்கள ஊடகம் ஒன்றுக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
எந்தவொரு சவாலையும் எதிர்நோக்க கீழ் மட்டத்திலிருந்து கட்சியைப் பலப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். ஏற்கனவே பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. புதிதாக அமைக்கப்படும் அரசியல் கட்சிகள், குழுக்கள் சுதந்திரக் கட்சிக்கு சவாலாக அமையாது. கடந்த காலங்களில் இவ்வாறு உருவாக்கப்பட்ட சக்திகள் நீர்த்துப் போயிருந்தன. ஊழல் மோசடி குற்றம் சுமத்தப்பட்ட சிறு குழுவொன்று அவற்றை மூடி மறைக்கும் நோக்கில் புதிய கட்சியை அமைக்க முயற்சிக்கின்றது.– என்றும் அவர் கூறினார். (ற–ஜ–5)

# 3 ஆயிரம் வைத்தியர்கள் தேவை

கொழும்பு, ஜூலை 6
சுகாதார சேவையை முழுமையாக வழங்குவதற்கு இன்னமும் மூவாயிரம் வைத்தியர்கள் தேவை. இந்த ஆளணிப் பற்றாக்குறை இன்னும் ஐந்து வருடங்களில் தீர்க்கப்படும்.
இவ்வாறு சுகாதார பிரதியமைச்சர் பைசல் காசிம் தெரிவித்தார்.
கொழும்பு ஊடகம் ஒன்றுக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு தெரிவித்ததாவது–
நாட்டிலுள்ள வைத்தியசாலைகளை வேறுபடுத்திப் பார்க்காது, அனைத்து வைத்தியசாலைகளையும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் கேட்டுள்ளார். அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அபிவிருத்திகளை மேற்கொள்ளும்போது, திட்டமிட்டு நீண்ட காலத்துக்கு நீடித்து நிலைக்கக் கூடிய வகையில் அவை செய்யப்பட வேண்டும்.
நாட்டில் சுகாதார சேவையை முழுமையாக வழங்குவதற்கு இன்னமும் 3 ஆயிரம் வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர். ஒரு வருடத்தில் ஆயிரம் வைத்தியர்கள் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறுகின்றனர். இவர்களில் 250க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். கிழக்கு மாகாணத்திலேயே வைத்தியர்கள் பற்றாக்குறை அதிகமாகக் காணப்படுகின்றது. இந்தப் பிரச்சினைகள் இன்னும் 5 வருடங்களின் பின்னர்தான் தீர்க்கப்படும் – என்றார். (ற–ஜ–5)

## டொலருக்காக மக்களை விற்கிறது அரசு!

### –லால் காந்த

கொழும்பு, ஜூலை 6
வெளிநாட்டு முதலாளித்துவ சமூகத்துக்கு எமது மக்களை விற்று டொலரைப் பெறுவதே அரசின் நோக்கம்.
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லால் காந்த சாடினார்.
கந்தளாயில் நேற்று இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.
"பொருள்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களைத் தடுக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.
நாடளாவிய ரீதியிலுள்ள எமது இயக்கம் மக்கள் சக்தியைத் திரட்டி கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளது. அதற்குப் பொது மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்."– என் றும் அவர் குறிப்பிட்டார். (ற–ஜ–5)

## 6 மாதங்களில் 45.7 மில். ரூபா தண்டம்

கொழும்பு, ஜூலை 6
நுகர்வோர் அதிகார சபை, வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் மேற்கொண்ட சோதனைகளில் 45.7 மில்லியன் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.
நுகர்வோர் அதிகார சபையால் பல பிரதேசங்களிலும் திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 3 ஆயிரத்து 497 சோதனை நடவடிக்கைகளும், மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 3 ஆயிரத்து 504 சோதனை நடவடிக்கைகளும், மே மற்றும் ஜூன் மாதங்களில் 3 ஆயிரத்து 145 சோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. ஜனவரி மாதத்தில் மாத்திரம் 10 மில்லியன் ரூபா வரையில் தண்டம் அறவிடப்பட்டது. (ற–ஜ–5)

## தப்பியோடிய வாகனம் மீது பொலிஸார் சூடு

கொழும்பு, ஜூலை 6
போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் வாகனத்தின் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.
பன்னிப்பிட்டிய பகுதியில் பொலிஸார் நேற்றுச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதற்கே இந்தச் சோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது. வாகனம் ஒன்றை அவர்கள் மறித்தபோது அது நிறுத்தப்படாது தப்பிச் சென் றுள்ளது. பொலிஸார் சூடு நடத்தினர். ஆனாலும் வாகனம் தப்பிச் சென்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற–ஜ–5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாடங்கள் கற்றுவிட்டே அரசியலுக்கு வருவேன்

## முன்னாள் அமைச்சர் பசில் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 6
அரசியலில் இன்னும் நான் கற்க வேண்டிய பாடங்கள் அதிகமாக உள்ளன. அனைத்தையும் கற்றுத் தெளிந்த பின்னரே எனது அரசியல் மறுபிரவேசம் பதுளையிலிருந்து ஆரம்பமாகும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது-
தற்போது அரசியலில் இருந்து சற்று விலகியிருக்கின்றேன். அரசியலைப்பற்றி நன்கு அறிந்து கொள்வதற்காகவே இப்படி இருக்கின்றேன்.

மக்களின் ஆதரவும், மாகாண சபைகள்மற்றும்உள்ளூராட்சித் தலைவர்களின் ஆதரவுகளும் எமக்குக்கிடைத்துள்ளன. எனது அரசியல் மறு பிரவேசம் விரைவில் பதுளையிலிருந்து ஆரம்பமாகும்.

நீண்ட காலமாக சேவையில் இருக்கும் தேர்தல் ஆணையாளர் தற்போது தேர்தலை நடத்துவதற்குக் கால தாமதம் எடுக்க ஏதேனும் ஒரு காரணம் இருக்கும். மேலிடத்து அழுத்தங்கள் கூட தேர்தல் நடத்துவதில் தாமதம் ஏற்படுவதற்கா ஒரு காரணம் - என்றார். (ற-ஐ-5)

# ஐ.நா. ஆணையாளர் அறிக்கைக்கு உலகத் தமிழர் பேரவை வரவேற்பு

கொழும்பு, ஜூலை 6
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனின் வாய்மூல அறிக்கையை உலகத் தமிழர் பேரவை வரவேற்றுள்ளது.

ஆணையாளர் ஹுசைன் தமது அறிக்கையில் இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட பல யோசனைகளை இன்னமும் நிறைவேற்றவில்லை என்று குறிப்பிட்டிருந்தார். இது ஆணையாளரின் கண்காணிப்பின் அடிப்படையில் வெளியிடப்பட்ட கருத்தாக அமைந்துள்ளது என்று உலகத் தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது.

உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளதாவது-
இலங்கை அரசின் அரசமைப்புத்தொடர்பானயோசனையைப் பொறுத்தவரை அது சிறந்த முன்னெடுப்பாகும். படையினர் வசம் உள்ள காணிகளைப்பொது மக்களிடம் திருப்பி வழங்கல், பயங்கரவாதத்தடைச்சட்ட நீக்கம், காணாமற் போனோர் தொடர்பான பிரச்சினைகள் என்பவை இன்னமும் தீர்க்கப்படாமல் உள்ளன. இந்த விடயங்களில் இலங்கை அரசு செயற்படும் போதே சிறுபான்மையினர் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். இலங்கையின் சட்டத்தில் நீதிக்கான பொறிமுறைக்கு இடமில்லை என்ற அடிப்படையில் போர்க்குற்ற விசாரணைகளுக்குபன்னாட்டுப் பங்களிப்புத் தேவை என்ற ஆணையாளரின் கருத்து வரவேற்கத்தக்கது. ஆணையாளரின் இந்தக் கருத்துக்களை பன்னாடும் ஏற்றுக்கொண்டுள்ளது. பன்னாடுகள் தொடர்ந்தும் இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்துக்கு உதவியளிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது- என்று தெரிவித்துள்ளது. (ற-ஐ-5)

# பலவந்தமாகப் பாடசாலை அனுமதி கோரினர் என தாய்மார் 9 பேர் கைது

கொழும்பு, ஜூலை 6
பிள்ளைகளுக்கு பலவந்தமாகப் பாடசாலை அனுமதி கோரினர் என்று கூறப்படும் ஒன்பது தாய்மார்கள் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

களுத்துறை மீகத்தென்ன ஆரம்பப் பாடசாலையில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. இந்தப் பாடசாலையில் பத்துப் பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்கு பாடசாலை நிர்வாகம் மறுத்திருந்தது.

இதற்கு எதிராக வலயக் கல்விப் பணிமனை முன்பாக பிரதியமைச்சர் தேவரப்பெரும உணவு தவிர்ப்புப் போராட்டம் நடத்தினார். அந்தப் போராட்டம் வெற்றியளிக்கவில்லை. தொடர் நடவடிக்கையாக, பாடசாலைக்குள் புகுந்து தற்கொலை முயற்சியில் தேவரப்பெரும ஈடுபட்டார்.

பத்து மாணவர்களும் பாடசாலையில் பின்னர் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். பிரதி அமைச்சரின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாடசாலை நிர்வாகத்தால் போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்றுப் பலவந்தமாக பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்க்க முற்பட்ட குற்றச்சாட்டில் ஒன்பது தாய்மார் கைது செய்யப்பட்டனர். (ற-ஐ-5)



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தனவின் விளக்கமறியலை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை நீடித்தார் கொழும்பு பிரதான நீதிவான். வர்த்தகரிடம் பலவந்தமாகப் பணம் பெற்றார் என்ற குற்றச்சாட்டிலேயே சஜின்வாஸ் குணவர்த்தன கைது செய்யப்பட்டார். (ற-5)

# 13 நாள்கள் வயதான சிசு நித்திரையில் திடீர் சாவு

பிறந்து பதின்மூன்று நாள்களேயான சிசு நித்திரையின் போது திடீரென உயிரிழந்துள்ளது என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 6.45 மணியளவில் இடம்பெற்றது.

சிசுவின் தாய் நேற்று முன்தினம் இரவு தாய்ப்பால் ஊட்டி விட்டு தூங்க வைத்துள்ளார். நேற்றுக் காலை எழுந்து பார்த்த போது சிசுவின் உடலில் எவ்வித அசைவுகளும் இல்லை. சிசுவை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். சிசு உயிரிழந்து விட்டது என்று வைத்தியர்கள் தெரிவித்தனர். (ற-ஐ-5)

# லசந்த கொலையுடன் தொடர்புடைய இருவரின் படங்கள் வெளியிடப்பட்டன

கொழும்பு, ஜூலை 6
ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவரின் மாதிரிப் படங்களை பொலிஸ் தலைமையகம் மீண்டும் வெளியிட்டது.

லசந்த விக்கிரமதுங்க படுகொலையில் நேரில் கண்ட சாட்சிகளின் தகவல்களின் அடிப்படையில் இரண்டு சந்தேக நபர்களின் மாதிரிப் படங்கள் வரையப்பட்டுள்ளன.

35 வயது மதிக்கத்தக்க முதலாவது நபர், 5 அடி 8 அங்குல உயரம் கொண்டவர். பொதுநிறமுடைய அவரது கண்கள் கபில நிறமானவை.

இரண்டாவது படத்தில் இருப்பவர் 45 வயது மதிக்கத்தக்கவர். சுமார் 5 அடி 10 அங்குலம் உயரம் கொண்டவர். சற்று பருமனாகவும் கறுப்புநிற மேனியையும் கொண்டவர்.



இவர்கள் தொடர்பான தகவல்கள் தெரிய வந்தால் தகவல் வழங்குமாறும், பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தக் கொலை வழக்கில் சந்தேகிக்கப்படும் இரண்டு பேரின் மாதிரிப் படங்கள் பொலிஸ் தலைமையகத்தால் வெளியிடப்படுவது இரண்டாவது முறையாகும். சில மாதங்களுக்கு முன்னர் இந்தப் படங்கள் வெளியிடப் பட்டன. அதில் உள்ள ஒருவர் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு அணியில் இருந்த இராணுவத்தைச் சேர்ந்த கப்டன் திஸ்ஸ விமரவீரவை ஒத்திருக்கின்றார் என்று செய்திகள் வெளியாகின.

இந்தச் சம்பவம் தொடர்பாக கப்டன்திஸ்ஸ கைது செய்யப்பட்டு இராணுவ முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்பட்டது. தற்போது மீண்டும், மாதிரிப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பின்தள்ளப்படுவதற்கு பொருளாதார நிலை காரணம்

## ரம்புக்வெல எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6
இலங்கையில் தற்போது பொருளாதார நிலை மந்தகதியில் காணப்படுகின்றது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு இதுவே காரணம்.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.



பத்தரமுல்லையில் உள்ள மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஒரு போதும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஆக முடியாது.

எதிர்க்கட்சித் தலைவர் என்பவர் முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்துபவராக இருக்க வேண்டும். ஆனால் இரா.சம்பந்தன் பக்கச் சார்பாக நடந்து கொள்கின்றார். தெற்கு சமூகத்தையும், சிங்கள மக்களையும் எதிர்க்கட்சித் தலைவர் கணக்கில் கொள்வதில்லை.

ஜனாதிபதித் தேர்தலின் போது, மகிந்தவுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள், மகிந்த அரசியலுக்கு மீண்டும் வருவார் என எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். மகிந்தவின் அரசியல் மறுபிரவேசம் என்பது நாட்டுக்குப் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை சீனாவின் ஆதிக்கத்தில் உள்ளது என்று குற்றம் சுமத்தினார்கள். குற்றம் சுமத்தியவர்கள் இன்றைய ஆட்சியில், தாங்கள் இந்தியாவின் பக்கம் சார்ந்திருக்கின்றனர் - என்றார். (ற-ஐ-5)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேக்குமரக் காடுகளை அழிக்கும் அநியாயத்தைத் தடுக்க எவருளர்

முல்லைத்தீவு -மாங்குளம் வீதியில், ஒன்பதாம் கட்டைப் பிரதேசத்தில் அமைந்துள்ள தேக்குமரக் காடுகள் இப்போது, வேகவேகமாக அழிக்கப்படுகின்றன.

ஆனால், அவை எங்கு எடுத்துச் செல்லப்படுகின்றன, எவருடைய உத்தரவின் பேரில் அவை, லொறி லொறியாக ஏற்றிச் செல்லப்படுகின்றன? அதன் சூத்திரதாரிகள் யார் என்பன குறித்து, உத்தியோகபூர்வமான தகவல் எதுவுமே தெரியவில்லை.

எல்லாமே பெரும் சூக்குமமாக உயர்ந்து எழுந்து நிற்கின்றன. தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நடப்பட்டு, வளர்க்கப்பட்ட தேக்கு மரங்களே, நல்லாட்சி அரசின் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தால் இவ்விதம் அழிக்கப்படுகின்றன; அதில் பணியாற்றும் தென்னிலங்கை உத்தியோகத்தர்களால் காசாக்கப்படுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள், மக்கள் நலன் நாடிய அரிய செயற்பாடுகளிலும் ஆர்வம் காட்டி உழைத்தார்கள் என்பது, வருங்காலச் சந்ததிக்குத் தெரிந்து விடாது மூடிமறைத்து விட வேண்டும் என்ற கபட நோக்கத்துடன், இவ்விதம் வம்புத்தனம் செய்தார்களா என்பது ஆண்டவனுக்கு மட்டுமே வெளிச்சம்!

முல்லைத்தீவு-மாங்குளம் வீதியில், ஒன்பதாம் கட்டைப் பகுதியில் உள்ள தேக்குமரக் காடுகளே, நல்லாட்சி அரசின் அனுசரணையுடன் இவ்விதம் அழிக்கப்படுகின்றனவோ என்ற பலத்த சந்தேகம் அந்தப் பிரதேசத்துத் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகிறது. அது தவிர்க்க முடியாதது.

எரிச்சல் பொறாமையாலோ, அல்லது காட்டிக் கொடுக்க வேண்டும் என்ற ஓர்மத்தாலோ, அவர்கள் அதனை எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை கிஞ்சித்தும் இருக்க வாய்ப்பில்லை. தமிழ்ப் பிரதேசத்தின் காட்டுவளம் இவ்விதம் அழிக்கப்படுகின்றதே என்ற வயிற்றெரிச்சல், மன வெப்பியாரம் அவர்களை இது விடயத்தில் வாட்டி வதைக்கிறது.

அவை எங்கு கொண்டு செல்லப்படுகின்றன; எந்தத் தேவை கருதி எடுத்துச்செல்லப்படுகின்றன என்பதை ஆராய்ந்து கண்டறியும் நோக்கம் கிஞ்சித்தும் அவர்களிடம் இல்லை என்று அடித்துச் சொல்லாம்.

மறுபுறத்தில்--

எதிர்காலச் சந்ததியினர் மீது கரிசனை கொண்டவர்களோ--

எங்கள் மண்ணின் மீது பற்றுக் கொண்டவர்களோ--

காட்டின் மீது கைவைக்க மாட்டார்கள்,

அதுவும், சுற்றுக் சூழலைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டவர்களோ--

காட்டுவளம் பேண கடின உழைப்பை நல்கியவர்களோ, எதிர்காலச் சந்ததியின் நலன் விரும்பிகளோ--

தேக்கு மரங்களை வகை தொகை இன்றி, வேண்டும் என்றே அழிப்பதற்கு மனம் இசைய மாட்டார்கள்.

தமிழ்ப் பிரதேசம் எந்த வழியிலும், எந்த வகையிலும், இயற்கையின் உதவியுடன்தானும் தன்னை பலப்படுத்தக்கூடாது; தமது பிரதேசங்களை வருங்காலக் சந்ததிகளின் நலன் கருதியேனும் அபிவிருத்தி செய்யலாகாது என்ற, நச்சு மனங்கொண்டு, பெரும்பான்மையினர் செயற்படுவதற்கு தடை போட எவருமிலரே...!

# தேசப் புயல்களால் எங்கும் வசந்தம் வீசுகிறது

**அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மனித நேயம் கொண்டவர்கள். சாவுக்கு விலங்கிட்ட மனிதர்கள்**
***-தேசியத் தலைவர் -***

திலீபன்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழ் மக்கள் மறந்திருக்க முடியாத நினைவுகளைத் தந்த மாதம் ஜூலை. பல சம்பவங்கள் நினைவாக சிறகு விரிக்கின்றபோதும் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05 ஆம் திகதி, தேசப் புயல்களின் வீர வரலாற்றை கண்ணீர் பூக்களால் சுகந்தம் செய்கின்றது. கரும்புலி கப்டன் மில்லரின் உயிர்த் தியாகம்தனை விடு தலையின் சொரூபமாக்கி உரிமை வேட்கையின் தரிசனங்களை எம்மிடையே சூட்டுகின்றது.

1987ஆம் ஆண்டு தமிழர் பிராந்தியம் எங்கும் சிங்கள இராணுவத்தின் பிரசன்னம் சூழ்ந்து அராஜகம் புரிந்து கொண்டிருந்த காலம். வடமராட்சி நெல்லியடி மகா வித்தியாலயத்திலும் சிங்களப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட லிபரேசன் ஒப்பரேசன் இராணுவநடவடிக்கையின் மூலம் தாம் பெற்றுக்கொண்ட வெற்றியின் குதூகலிப்பில் சிங்களம் திழைத்திருந்தது. வடமராட்சி வாழ் மக்கள் அகதிகளாக வெளியேறியிருந்தனர். இதற்குச் சமாந்தரமாக சிங்களத் தலைமைகள் 2009களில் பெற்ற களிப்பைப் போன்றதான ஒரு வெற்றி முழக்கத்தை கொழும்பிலும் வெறித்தனத்தின் சாட்டுதலாய் கொண்டாடி மகிழ்ந்திருந்தனர். நெல்லியடிப் படைத்தளத்தை அழித்து இந்த ஈனப் பிறவிகளின் இறுமாப்பைத் தகர்த்தெறிய வேண்டும்; எமது உறுதியை நிலைநாட்ட வேண்டும் என தேசியத் தலைவர் விரும்புகிறார். அந்த விருப்பம் தேசப்புயலாக மாறிட தியாகம் எனும் நற்பணி செயலுருவம் பெறுகிறது.

நெல்லியடிப் படைத்தளம் மீதான தாக்குதல் தொடர்பிலான அனைத்துத் தயார்ப்படுத்தல்களும் நிறைவுறுகின்றன. தேசப்புயலாக, விடுதலையின் வீரனாக கப்டன் மில்லர் தேர்வு செய்யப் பட்டான். ஜூலை 5ஆம் திகதி இரவு 7.00மணி 3 நிமிடங்கள். கப்டன் மில்லருடைய கந்தகம் சுமந்த வாகனம் முகாமுக்குள் பாய்கிறது. தியாகம் எனும் சுதேசம் எங்கும் வீசுகிறது. விடியலின் சுகந்தம் தனை தேசத்திடம் பரிசளிக்கிறது. நூற்றுக்கணக்கான இராணுவத்தினரை அழித்து பல நூறு படையினரைக் காயப் படுத்தி, ஆணவத்தின் மாயையை தீயிட்டு அழிக்கிறது. புதிய வரலாறு எழுதுகிறது.

> தேசப்புயலாக, விடுதலையின் வீரனாக கப்டன் மில்லர் தேர்வு செய்யப்பட்டான். ஜூலை 5ஆம் திகதி இரவு 7.00மணி 3 நிமிடங்கள். கப்டன் மில்லருடைய கந்தகம் சுமந்த வாகனம் முகாமுக்குள் பாய்கிறது. தியாகம் எனும் சுதேசம் எங்கும் வீசுகிறது. விடியலின் சுகந்தம்தனை தேசத்திடம் பரிசளிக்கிறது.

இப்போதும் தியாகத்தின் சுவாசமாய் எங்கும் பரந்து நல் மனிதங்களிடை சிந்தனையின் ஒளிர்வாய் சுடர்விடுகின்றது. விடுதலையின் எண்ணம் தனைச் சாதகம் செய்கிறது.


போரியல் வரலாற்றிலே அவ்வாறான தாக்குதல் ஒன்று முதன் முதலாக நிகழ்த்தப்பட்டது, அதுவே முதல் தடவை. மில்லர் கரும்புலித் தாக்குதல் நடத்தி இன்றுடன் 29 ஆண்டுகள் கடந்து விட்டுள்ளன. ஞாபகங்களிடை மீளாத வசந்தங்களை வசந்தனாக, அந்த நாமம் சூடிக்கொண்டு புனிதமாக (தியாகம் செய்கிறது.

யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்தவன் கப்டன் மில்லர். இவனது இயற்பெயர் வல்லிபுரம் வசந்தன். தமிழீழ விடுதலைப் புலிகளில் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தவன். 1966 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தாய் மண்ணில் தவழ்ந்த இவன், முதல் கரும்புலியாகி விடுதலைப்போராட்ட வரலாற்றின் திருப்புமுனையாக அமைந்து விட்டான்.

மில்லர் அவனது குடும்பத்திலே இரண்டாவது மகன். துடியாட்டமானவன். வாகனங்களை ஓட்டுவதில் திறமையானவன். தகப்பனார் வல்லிபுரம் இலங்கை வங்கியின் ஊழியராக கடமை புரிந்தவர். தேசத்தின் மீதுகொண்ட பற்றுறுதியால் வசந்தன் விடுதலைப் பயணத்திலே தன்னை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணைத்துக் கொண்டவன்.குறிப்பாக தமிழ் மக்களின் மூலதனமான கல்வியின் திருச்சொரூபமான, அறிவூட்டத்தின் பொக்கிசமான யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் மீதான தீயிடல், அதே போன்று தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக் கலவரம் என்பவை இவனை முற்றாகத் தமிழ் மக்களின் விடுதலையின் பால் ஈர்த்துவிட்டது.அதற்கான இலட்சிய உறுதி கொண்ட திடமான பாதையிலே அங்கத்துவனாகச் சேர்ப்பித்தது.

தாய் மண்மீதும், தன் மக்கள் மீதும் கொண்ட அளவற்ற பாசம் என்பதும் தன் இன விடுதலையின் மீதான நேசம் என்பதும் முகம் மறைத்து, முகவரி மறைத்து எத்தனையோ பெரும் தாக்குதல்களை நடத்தி சாதனைபடைக்கவும் தமிழன் என்ற வீரத்தின் நிமிர்வை உலக நாடுகளின் மத்தியிலே அற்புதம் செய்திடவும் ஆரம்பமாக அமைந்துவிட்டுஇவனதுஉற்கொடையெனும் தியாகம்.இதனை தமிழராய் நினைவு கொள்ளும் இந்த நன் நாள் புனிதமானது.

அந்தவகையிலே விடுதலைப் போராட் டத்தின் ஒவ்வொரு திருப்புமுனைகளி லும் கரும்புலிகளின் தியாகம் உயர்ந்து நிற்கின்றது. இவர்களின் தியாகப் பாதைகள் என்பது 2000 ஆம் ஆண்டு கட்டுநாயக்கா வான்படைத்தளம் மீதான தாக்குதலாக, தென்பகுதியில் பல நிழற்கரும்புலிப் பாய்ச்சலாக, 2007ஆம் ஆண்டு அநுராதபுரம் வான்படைத்தளம் மீது எல்லாளன் வடிவமாக, 2009 ஆம் ஆண்டு வானோடி கரும்புலிகளின் பறத்தலாக சிறந்திருக்கிறது. தமிழீழ வரலாற்றிலே தமிழனின் வீரத்தை உரிமையின் மீதான பற்றுதலாக சாட்டுதல் செய்து நிற்கின்றன.

கடந்து சென்ற மூன்ற தசாப்த காலங்களில் தமிழர்களின் எந்தவொரு கோரிக்கைகளுக்கும் பேச்சு வார்த்தைகளுக்கும் செவி சாய்க்காத இலங்கை அரச தரப்பினர், இவர்களின் உயிர்க் கொடைக்கு பயந்தனர். பேசுவதற்கென இறங்கிவந்தனர். இருந்தும் இறுதியில் சர்வதேச வல்லாதிக்கங்களின் கூட் டோடு ஒன்று சேர்ந்து திட்டமிட்ட மிகப் பெரிய இன அழிப்பை, மனித உரிமை மீறல்களை செய்து பாவங்களைச் சுமக்கின்றனர். தமிழர்களுக்கு நியாயமான தீர்வைத்தர இன்னமும் மனமின்றி பழைமை போற்றித் தங்கள் மூதாதையரின் வழி நடந்து மீண்டும் மீண்டும் துரோகங்களைச் செய்ய முனைகின்றனர். தமிழ் மக்கள் இன்னமும் தியாக குணம் கொண்டு பொறுமை காக்கின்றனர். நீண்ட நெடிய அழிவின் பாதை வழியே காத்திருப்பெனும் காத்திரம் செய்து நகர்கின்றனர்.

ஆக,இவர்களின் வீரமும், தியாகமும் இன்றும் என்றும் ஒவ்வொரு ஈழத் தமிழர்களிடமும் உள் நின்று ஒளிரும் சக்தியாக,விடுதலையின் ஊன்று கோலாக இயங்கு நிலைதரும் பெரும் விடுதலைச் சுவாசமாக உயிர்தரும் என்பதில் ஐயமில்லை.அதற்கு உலகத்தில் எந்த மிகையமில்லை.

> **இவர்களின் வீரமும், தியாகமும் இன்றும் என்றும் ஒவ்வொரு ஈழத் தமிழர்களிடமும் உள் நின்று ஒளிரும் சக்தியாக,விடுதலையின் ஊன்றுகோலாக, இயங்கு நிலைதரும் பெரும் விடுதலைச் சுவாசமாக உயிர் தரும் என்பதில் ஐயமில்லை.**

தமிழர் விடுதலைப் போராட்டத்தின் தடைநீக்கிகளாக,உயிராயுதமாக, இலட்சியத்தின் இரும்பு மனிதர்களாக, உடலோடு கந்தகம் சுமந்து எதிரியின் ஆணவத்தைத் தகர்த்தழித்த இந்த மனிதர்களை மறந்துவிட முடியாது.இவர்கள் புரிந்த சாதனைகளை நினைந்து அற்புதம் காணவேண்டும். அழியாத சுடர்கள் எங்கும் ஒளிர்கின்றன திருமுக தரிசனம் தருகின்றன.நினைவு கூர்ந்து விடியலின் பாதைகளை சீர்செய்ய முன்னகர வேண்டும்.

எமது நாட்டில் எமது இராணுவம் நிலை பெறும்வரை எமது சுதந்திரத்தை எவரும் உறுதிப்படுத்தமுடியாது. அதற்காகத் தான் நாம் போராடிக்கொண்டிருக்கிறோம்.தமிழீழம் என்பது சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்த சமதர்ம சோஷலிஸ தேசமாகத் தான் மலரும்.எமது மக்கள் அழிக்கப்படும் நிலை தோன்றினால், நாம் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடுவோம்.

# ஆசிரியர்கள் ஒரு சிலரின் போக்கு வேதனை தருவதாக உள்ளதே...!

"ஆசிரியர் விட்டார் அறை, செவிப்பறை கிழிந்தது" இது அண்மைய உதயன் பத்திரிகையின் செய்தித் தலைப்பு. இதற்கு அடுத்த நாள் உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகத்தில் மாணவர்களை நல்வழிப்படுத்துவதே ஆசிரியரின் நோக்கமாகும் என்ற தலைப்பில் உதயன் பத்திரிகையை எச்சரிப்பதாக, மிரட்டுவதாக அமைந்த வாசகர் ஒருவரது கடிதம். பாடசாலை மாணவர்கள் மாமரத்துக்கு கல் எறியக் கூடாது என பாடசாலை ஒழுங்கு விதி இருந்திருக்கலாம். இது தொடர்பாக விசாரித்த இரண்டொரு ஆசிரியர்கள், குறித்த மாணவர்களை எச்சரித்த நிலையில் முன்றாமவர் காது கிழிய அடிப்பதில் என்ன நியாயம் இருக்கின்றது. இது நீதிமன்றம் வரை போய்விட்டதால் நீதி தனது வேலையைச் செய்யட்டும்.

'அடியாத மாடு படியாது' என்றொரு பழமொழியுண்டு. அதனை எம்மவர்கள் பலர் தவறாகக் கருதிக் கொண்டு மாணவர்களுக்கு அடிபோடவேண்டும் என நியாயப்படுத்துகின்றார்கள். அந்தப் பழமொழியின் கருத்து வேறு. உழவனொருவன் மாடுகளைப் பயன்படுத்தி உழவுத் தொழிலைச் செய்யும் போது ஒரு கரத்தில் கலப்பையின் மேழியையும் மறு கரத்தில் ஒரு தடியையும் வைத்திருப்பான். தடியை மேல் நோக்கி உயர்த்தியபடியே மாடுகளுக்கு கட்டளையிடுவான். உழவு சாலின் வழியைத் தொடர்வதனால் திரும்புகின்ற இடத்தில் காலுக்கை, காலுக்கை என்று வெளிப்புறத்து மாட்டின் மீது தடியினால் தட்டுவான். (அடிப்பான்) அடுத்த உழவுசால் கட்டும்போது நேனா நேனா என்று உட்புற மாட்டின் மீது தட்டுவான் (அடிப்பான்). இதனால் உழவனின் கட்டளைக்கு மாடுகள் படிந்து செல்லும். உழவன் சிறப்பாக தனது உழவைச் செய்து முடிப்பான். தடியினால் மாட்டுக்கு அடிக்காத வரை அவனது கட்டளைக்கு மாடுகள் படியாது. இதுவே 'அடியாத மாடு படியாது' என்பதன் பொருள். மாணவர்களை மாடாக மதிக்கக் கூடாது.

அந்த நாள்களில் எமது மாணவப் பருவத்தையும் எமது ஆசான்களையும் நினைத்துப் பார்க்கிறேன்.

ஒரு நாள் மாணவர்களான எங்களில் இருவர் மாமரத்தில் மாங்காய் பிடுங்குவதற்காக பாடசாலை சீருடையுடனே ஏறிவிட்டோம். கீழே மூன்று மாணவர்கள் நின்றார்கள். மாமர உரிமையாளர் வர கீழே நின்றவர்கள் ஓடிவிட்டார்கள். நாங்கள் இருவரும் மாமரக் குழைகளில் மறைந்து கொண்டோம்.

மாமர அடியில் வைத்த எங்கள் இருவரது புத்தகப் பைகளையும் அவர் எடுத்துச் சென்று விட்டார். அதன் பின்னர் இருவரும் மரத்தால் இறங்கி வீடு சென்றோம். புத்தகப் பை இல்லாமைக்கு, வீட்டில், மழை தூறியதால் வகுப் பில் வைத்துவிட்டு வந்தோம் என ஒரு பொய் சொல்லித் தப்பித்துக்கொண்டோம்.

மறுநாள் பாடசாலைக்குள் நுழையும்போது நண்பர்களின் அரைவாசிப் புத்தகங்களை கையில் வாங்கிக் கொண்டு உள்நுழைந்தோம். சிறுநேரத்தில் எமது புத்தகப் பையுடன் மாமரச் சொந்தக்காரர் வந்தபோது எமது வகுப்பாசிரியர் எதிர் கொண்டு விடயத்தை அறிந்து கொண்டு எங்கள் இருவரையும் அழைத்தார். பயத்தால் வியர்த்து சேர்ட் நனைந்து விட்டது. (காற்சட்டை நனையாத குறை) கிட்டச் சென்றோம். தனது இரு கைகளாலும் எங்கள் இருவரையும் தனது இரு பக்கங்களிலும் அணைத்த வண்ணம், வந்தவரைப் பார்த்து 'சிறுபிள்ளைகள் தெரியாமல் செய்து விட்டார்கள், அதற்காக இவர்கள் சார்பில் உங்களிடம் நான் மன்னிப்புக் கேட்கின்றேன்' எனத் தனது இரு கரங்களையும் கூப்பி மன்னிப்புக் கேட்டார்.

நாங்கள் இருவரும் விம்மி விம்மி அழுதுவிட்டோம். எமது முதுகில் தட்டி அழாதீர்கள் என்று ஆறுதல் கூறினார் மாமரத்தின் சொந்தக்காரர். 'நான் இவர்களைக் குற்றவாளிகளாக்கித் தண்டனை பெற்றுக்கொடுக்க வரவில்லை. படிக்கிற பிள்ளைகளுடைய புத்தகப் பைகளைத் தருவதற்காகவே வந்தேன் என்று கூறி எமது ஆசிரியரை இரு கரம் கூப்பி வணங்கி விடைபெற்றார்.

"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்". அன்றைய அணுகுமுறைக்கும் இன்றைய அணுகுமுறைக்கும் ஏணி வைத்தாலும் எட்டாத நிலையில் ஆசிரியர்கள் மறியல் வீட்டை நிரப்புவது வேதனையாக உள்ளது

**தயாளன், வடமராட்சி.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரேசில் விமான நிலையத்தில் பொலிஸார் பெரும் போராட்டம்

## கடும் நெருக்கடியில் ஒலிம்பிக்

றியோ டி ஜெனிரோ, ஜூலை.6
பிரேசிலின் றியோ டி ஜெனிரோ நகரில் கலியோ சர்வதேச விமான நிலையத்தில் பொலிஸார் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் அங்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. பிரேசில் அரசு பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில், பொலிஸாருக்கான சம்பளம் வழங்கப்படாததைக் கண்டித்து, அரசுக்கு எதிராகப்பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நரகத்தை வரவேற்கின்றோம் எனும் பாதாகைகளுடன் விமான நிலையத்தில் பொலிசார் ஆர்ப்பாட்டம் செய்தனர். இவ்வாறான பதாகைகள் அங்கு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளை அதிர்ச்சியில் உறைய வைத்தன. ஒலிம்பிக்குக்கு இன்னமும் ஒரு மாத காலம் இருக்கும் நிலையில் உலகின் பல்வேறு பாகங்களில் இருந்தும் மக்கள் பிரேசிலுக்குப் பயணிக்க ஆரம்பித்துள்ளனர். இந் நிலையில் அரசுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் பொலிஸார் இந்த ஆர்ப்பாட்டத்தைத் திட்டமிட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், 100 க்கும் மேற்பட்ட அவசர உதவிக்குழுப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். உலகம் முழுவதும் இருந்து 5 லட்சம் சுற்றுலாப் பயணிகள் பிரேசிலுக்கு வருகை தருவார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், அவசர உதவிப் பிரிவினருக்குச் சம்பளம் வழங்காத நாடு உங்களுக்குப் பாதுகாப்பானது அல்ல எனவும் பொலிஸார் பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

> "அவசர உதவிப் பிரிவினருக்குச் சம்பளம் வழங்காத நாடு உங்களுக்குப் பாதுகாப்பானது அல்ல எனவும் பொலிஸார் பதாகைகளைத் தாங்கியிருந்தனர்."

பல்வேறு காரணங்களுக்காக இந்த வருடத்தில், 50 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர் எனவும், ஆர்ப்பாட்டத்தில் அவற்றை வெளிப்படுத்தும் வகையில் பொம்மைகளை இறந்தவர்கள் போன்று உடுத்திக் காட்சிப்படுத்தினர் எனவும் கூறப்பட்டது.

தாம் பிரேசிலின் உண்மை முகத்தைக் காட்டுவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பொலிஸார் தெரிவித்தனர். தமது நிலமை இவ்வாறு உள்ளபோது, தாம் எப்படிப் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது எனவும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

கடந்த வாரம் வேறொரு விமான நிலையத்திலும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. அத்துடன் வீதிகளிலும் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரேசில் அரசு, அவசர உதவிக் குழு, ஆசிரியர்கள், மருத்துவ ஊழியர்கள் மற்றும் சிறைச்சாலைப் பணியாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்குவதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த நிலையில், குற்றச் செயல்களை எவ்வாறு பிரேசில் அரசு கட்டுப்படுத்தப் போகின்றது எனவும் கேள்வி எழுந்துள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் இருந்து பிரேசிலில் கொலைக் குற்றம் 15 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது. இந்த நிலையில் பிரேசில் அரசுக்கான பாதுகாப்பு நலிவடைந்துள்ளது. வன்முறை, ஊழல், அரசியல் பிணக்குகள் ஒலிம்பிக் நிகழ்வுகளுக்கு அதிக சவாலைக் கொடுத்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (த-ரி4)

# 5 போராளிகளுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றியது ஈராக்

பக்தாத் குண்டுத் தாக்குதலின் எதிரொலியாக



பக்தாத், ஜூலை 6
ஈராக் தலைநகர் பக்தாத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் 5 போராளிகளுக்கு நேற்று முன்தினம் ஈராக்கின் நீதி அமைச்சு சாவுத் தண்டனை நிறைவேற்றியுள்ளது.

தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 220 ஐ எட்டியதுடன், 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. கராடா பகுதில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 35 பேர் காணாமற்போயுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சமீபத்தில் ஈராக் படைகள் பலூஜா நகரைக் கைப்பற்றியதை அடுத்து, ஈராக் பிரதமர் ஹைடர் அல்-அபாடி, ஐ.எஸ்ஸுக்கு எதிரான வெற்றியை அறிவித்தார். இதனை அடுத்து ஐ.எஸ். அமைப்பு ஈராக்கைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிரதமர் அபாடி அரசுத் தலைமைகளுடன் தாக்குதல் தொடர்பில் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலில் தேசிய பாதுகாப்புப் படை, உளவுத்துறை, உள்துறை அமைச்சு அதிகாரிகள் கலந்து கொண்டனர். தாக்குதல் இடம்பெற்றதற்கான சாத்தியக் கூறுகள் தொடர்பில் முன்னாள் பொலிஸ் அதிகாரி விளக்கமளிக்கையில்,

ஐ.எஸ். அமைப்புக்கான ஆதரவாளர்கள், போராளிகள் பக்தாத், பஸ்ரா மற்றும் குர்திஸ்தானின் அனைத்துப் பாகங்களிலும் பரவியுள்ளனர். வீட்டுக்கு ஒருவர் அவர்களது ஆதரவாளர்களாக உள்ளனர். எனவே இராணுவத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் இவற்றை முறியடிக்கும் வகையில் அமையவேண்டும்-என்றார்.

இராணுவத்தினரின் பலவீனமான பாதுகாப்புத் திட்டத்தால், அவர்களது வாகனங்களுக்குக் கற்கள், செருப்புகளைப் பொதுமக்கள் வீசி எறிந்ததாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் தலைநகர் பக்தாத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்தும்படி பிரதமர் உத்தரவிட்டுள்ளார். பக்தாத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்குப் பதிலடியாக, ஈராக்கின் நீதி அமைச்சினால் 5 போராளிகளுக்கு நேற்று முன்தினம் சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. (த-ரி4)

# சவூதி பள்ளிவாசல் உட்பட 3 இடங்களில் தாக்குதல்கள்

ரியாத், ஜூலை.6
சவூதி அரேபியாவின் மதீனாவில் அமைந்துள்ள பள்ளிவாசலில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்லாமியர்களின் புனித இடங்களில் இரண்டாவதாகக் கருதப்படும் பள்ளிவாசலில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் உயிரிழந்தவர்கள் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் எனப் பள்ளிவாசலின் பாதுகாப்புத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

குறித்த பள்ளிவாசலில் தீர்க்கதரிசி முகமது புதைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நேற்று முன்தினம் மாலை, நோன்பு முறித்தவேளை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. நோன்பு முடிவுற்ற பின்னர், உணவு உண்ணும் நிகழ்வில், 18 வயது நிரம்பிய இளைஞர் மக்களுக்கு உணவு வழங்குவதில் உதவினார். குறித்த இளைஞராலேயே இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்த்தப்பட்டது என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



குண்டுவெடிப்பு இடம்பெற்று ஒரு மணிநேரத்தின் பின்னர், ஆயிரக்கணக்கான பக்தர்கள் மீண்டும் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகையில் ஈடுபட்டமை மன நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.தாக்குதலின்போது பலமான சத்தம் எழுந்தது என்றும், அதன் அதிர்வுகள் மிகப் பலமாக இருந்தன எனவும்,பள்ளிவாசலில் இருந்து கரும் புகை எழுந்தது என்றும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

முதலில் கலாசார நிகழ்வு எனக் கருதியபோதும் குண்டுவெடிப்பால் ஏற்பட்ட அதிர்வுகள், மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது.

தீர்க்கதரிசி முகமதுவின் பள்ளிவாசலை இஸ்லாமியர்கள் சிறிய மக்காவாக மதிப்பது குறிப்பிடத்தக்கதாகும். குறித்த பள்ளிவாசலில் இடம்பெற்ற தாக்குதல், 24 மணிநேரங்களில் அரங்கேறிய மூன்றாவது தாக்குதல் ஆகும்.

முன்னதாகக் குவாட்டிப் பகுதியில் ஷியாப் பிரிவினர் வசிக்கும் இடத்தில், தற்கொலைக் குண்டுதாரி வாகனத் தரிப்பிடத்தில் குண்டுவெடிப்பை நிகழ்த்தினார்.

பின்னர் அமெரிக்கத் தூதரகம் அருகில் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றது. இதன் பின்னர் முகமது பள்ளிவாசல் தாக்கப்பட்டது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல்களுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. சவூதி அரேபியாவில் ஒரே தினத்தில் 3 தற்கொலைத்தாக்குதல்கள் இடம்பெற்றமை பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. (த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமெரிக்காவின் சுதந்திரதினம் நேற்று முன்தினம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பொதுமக்கள் தமது வாழ்த்துக்களைப் பகிர்ந்ததுடன், சுதந்திர தினச் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. வீதி ஊர்வலங்கள், வாண வேடிக்கைகள், விசேட வழிபாடுகள் என்பனவும் நடந்தன. ஒவ்வொரு மாகாணத்திலும் கண்கவர் அணிவகுப்புகளும் இடம்பெற்றன. (த-ரி4)

## ஒலிம்பிக் அலங்காரப் பணியின்போது உயரத்தில் இருந்து விழுந்த 2 பேர் சாவு

பிரேசில், ஜூலை.5

பிரேசிலில் மிக உயரமான ஒலிம்பிக் வளையங்கள் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இரு தொழிலாளர்கள் தவறி விழுந்து உயிரிழந்துள் ளனர்.



கடந்த ஞாயிற்றுக் கிழமை, போய்ருவா பகுதியில் 28 பேர் கொண்ட குழுவினர் 5 ஒலிம்பிக் வளையங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது தவறி விழுந்த இரு பணியாளர்கள் நிலத்தில் மோதுண்டு காயமடைந்தனர். மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் அவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர் எனத் தீயணைப்புத் துறையினர் தெரிவித்தனர்.

குறித்த பணியாளர்கள் பயன்படுத்திய உயிர்காப்புச் சாதனங்கள் மற்றும் கருவிகளை ஆராயப் பொலிஸார் திட்டமிட்டுள்ளனர். மூளைச் சேதம் காரணமாக உயிரிழப்பு இடம் பெற்றதாகத் தெரிவிக்கப் பட்டது. (த-ரி4)

## இஸ்லாமாபாத்தில் முதன்முறையாக இந்துக்கோவில்

இஸ்லாமாபாத், ஜூலை.6



பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில், முதன் முறையாக இந்துக் கோவிலும், மயானமும் அமைக்க அந்த நாட்டுத் தேசிய சமய விவகா ரக் குழு நேற்று முன் தினம் அனுமதி வழங்கியுள்ளது. பாதுகாப்புப் பிரச்சினைகள் இடம்பெற லாம் என்ற அச்சுறுத்தல் இருந்த போதும், சிறு பான்மையினரால் கோவில் கட்டப்படுகின்றது. இஸ்லாமாபாத்தில் 500 இந்துக்கள் வசிக்கின்றனர் எனப் பதிவிடப்பட்டிருந்தபோதும், இதுவரை மயானம், கோவில் அமைக்கப்படாதமை அதிர்ச்சியளிப்பதாகத் தேசிய சமய விவகாரக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் இறுதிச் சடங்குகள், ஏனைய சமய வழிபாடுகளை நடத்த இந்துக்கள் ராவல்பிண்டிக்குச் செல்வதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்துக்களுக்கான அடிப் படை உரிமைகள், பாதுகாப்புப் பிரச்சினை கருதி நாடாளுமன்றத்தால் மறுக்கப்பட்டபோதும், இந்துக்களால் கோவில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனாலும், ஹோட்டல்களுக்கான பாதுகாப்பு அரசினால் வழங்கப்படும் போது, இந்துக் கோவிலுக்கு வழங்கப்படக் கூடாதா என அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். கிறிஸ்தவர்களின் ஆலயத்தைப் புதுப்பிக்கவும், இந்துக் கோவிலை அமைக்கவும், தேசிய சமயக் குழுவில் உள்ள நிதி மூலம் கட்டுமானம் ஆரம் பிக்கப்படவுள்ளது. (த-ரி4)





## அமெரிக்காவில் பன்றி இறைச்சி உண்ணும் போட்டி

அமெரிக்காவின் கொனே ஐலண்ட்டின் புரூக்ளின் பகுதியில், வருடாந்த பன்றி இறைச்சி உண்ணும் பந்தயம் இடம் பெற்றுள்ளது. நாதன் நிறுவனத்தின் 100ஆவது பன்றி இறைச்சி உண்ணும் போட்டி நடத்தப்பட்டது. அமெரிக்காவின் சுதந்திர தினத்தை கொண்டாடும் வகையில் இந்தப் போட்டியைப் பார்வையிட ஆயிரக்கணக்கானோர் கடற்கரையில் குழுமியிருந்தனர். 10 நிமிடத்தில் எத்தனை பன்றி இறைச்சிப் பார்சல்களை உண்கிறார்கள் என்பதுதான் அந்தப் பந்தயம். கலிபோர்னியாவைச் சேர்ந்த 32 வயதான, ஜோயி செஸ்நட் 1 நிமிடத்தினுள் 11 பன்றி இறைச்சிப் பார்சல்களை உண்டார். 10 நிமிடங்களுள், 70 பன்றி இறைச்சிப் பார்சல்களை உண்டு போட்டியில் வெற்றி பெற்றார். (த-ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூலை மாத ராசி பலன்கள்



## மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை-1 ஆம் பாதம்)

கடின உழைப்பால் வாழ்க்கையில் முன்னேறும் மேட ராசியினரே! உங்களுக்குத் திடீரென்று வரும் கோபத்தைக் கட்டுப்படுத்தினால் வெற்றி நிச்சயம். இந்த மாதம் சூரியன் - புதன் -சுக்கிரன் தைரிய ஸ்தானத்திலும், பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குரு-ராகுவும், அஷ்டமஸ்தானத்தில் வக்ர நிவர்த்தி பெற்ற ராசிநாதன் செவ்வாயும்-சனியும், லாபஸ்தானத்தில் கேதுவும் சஞ்சாரம் செய்கிறார்கள். தைரிய ஸ்தானத்தில் புதன் ஆதித்ய யோகம் பெறுவதால் புத்திக்கூர்மையுடன் செயல்களை செய்து எதிலும் வெற்றி பெறுவீர்கள். வசதிகள் அதிகரிக்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். ஆனால் வீண்செலவுகள் உண்டாகும். மனதுக்குப் பிடிக்காத இடத்துக்குச் சென்று வரவேண்டி இருக்கும். தொழில் ஸ்தானாதிபதி சனியின் சஞ்சாரத்தால் தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் சென்று வரவேண்டி இருக்கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலைச் சந்திப்பார்கள். குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகலாம்; கவனம் தேவை.

குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே தேவையற்ற மன வருத்தம் உண்டாகலாம்; கவனம் தேவை. மருத்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம். ஆயுதம், நெருப்பு ஆகியவற்றைக் கையாளும்போது கவனமாக இருப்பது நல்லது.

பெண்கள் புத்திக் கூர்மையுடன் செயற்பட்டு காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். வீண்அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

மாணவர்கள் சக மாணவர்களுடன் பழகும்போது கவனம் தேவை. கூடுதல் நேரம் ஒதுக்கிப் பாடங்களைப் படிப்பது நல்லது.

**பரிகாரம் :** முருகனுக்கு அலரிப்பூச் சாற்றி அர்ச்சனை செய்து வணங்கி வழிபட மனக்கவலை தீரும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும்.

**அச்சுவினி**

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அவசரப்படாமல் நிதானமாகப் பணிகளைக் கவனிப்பது நல்லது. குடும்பத்தில் சிறு சிறு மனவருத்தங்கள் ஏற்படும் வகையில் சூழ்நிலை இருக்கும். கணவன், மனைவிக்கிடையில் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் முன்னேற்றத்தில் தடை தாமதம் ஏற்படலாம்; கவனம் தேவை. பொருள்களைக் கவனமாகப் பாதுகாப்பது நல்லது.

**பரணி :**

எந்த வாக்குறுதியும் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. கோபத்தைக் குறைப்பது நன்மை தரும். நண்பர்கள் திடீர் பதற்றத்தை உண்டாக்குவார்கள். உறவினர்களிடம் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். நீண்ட நாள்களாக வாங்க வேண்டும் என்று எண்ணிய பொருள்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கார்த்திகை - 1 ஆம் பாதம்**

தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டுக் காரியங்களைச் செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள்.

(தொடரும்)

# இனியவாழ்வு இல்லத்தில் கவிதை நூல் வெளியீடு









முல்லைத்தீவு, வள்ளிபுனம் இனியவாழ்வு இல்லத்தில் கவிதை நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. முத்தையன்கட்டு வலதுகரை பாடசாலை அதிபரும், வன்னி குறோஸ் கலாசாரப் பேரவையின் முல்லைமாவட்டத் தலைவருமான சி.நாகேந்திரன் தலைமையில் கடந்த 26ஆம் திகதி கவித்தென்றல் ஏரூர் எழுதிய - "இரவுகள் தொலைத்த எழுத்துக்கள்" எனும் இந்தக் கவிதை நூல் வெளியிட்டுவிழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மருத்துவர் சி.சிவமோகன் கலந்துகொண்டு கவிதையின் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பெறப்பட்ட நிதியை வள்ளிபுனம் இனிய வாழ்வு சிறார்களின் நலனுக்காக அதன் முகாமையாளர் திருச்செல்வத்திடம் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கையளித்தார்.

இந்த நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கவிஞர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுத்தறிவு கொண்டு உணவை உண்டால்
# ஆரோக்கியமாக வாழலாம்

பழனித்துரை தர்மகுமாரன்

பசியைப் போக்க உண்ணுவதும் உணவு நோயைப்போக்க உண்ணுவதும் உணவு என்பதற்கு அமைய, பசியைத் தீர்த்து உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதும் உணவு. உடலில் ஏற்படும் நோயைக் குணப்படுத்த உதவுவதும் உணவு. எனவே மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக விளங்கும் உணவை சுவைக்காக உண்ணாது ஆரோக்கியத்துக்காக உண்ணுதல் வேண்டும். நாவுக்கு சுவை, உடல் நலத்துக்கு கேடு. இந்த மாதம் போசாக்கு மாதமாக பிரகடனப்படுத்தப் பட்டதற்குரிய காரணமே இன்றைய காலத்தில் அதிகரித்து வரும் தொற்றா நோய்களே ஆகும். இந்த நோய்கள் ஏற்படுவதற்குரிய அடிப்படையாகக் கருதப்படுவது, உணவுப் பழக்க வழக்கங்களே. எமது பண்பாட்டு உணவுகள் ஒதுக்கப்பட்டு நவீனமுறையிலான உணவுகள் கவர்ச்சிகரமாக அறிமுகப் படுத்தப்படுகின்றன. இதில் மோகம் கொண்டுள்ள மக்கள் தமது வேலைகளை இலகுவாக்குவதற்கும் நேரத்தை மீதப்படுத்துவதற்கும் விரைவு உணவுகளைத் தயாரித்துக்கொள்வதற்கு ஆர்வம்காட்டிவருவதுடன், உண்ணுவதற்கு இலகுவாகவும் சுவையாகவும் இருப்பதால் குழந்தைகள் தொடக்கம் முதியோர் வரை அந்த வகையான உணவுகளையே விரும்புகின்றனர்.

இதனால் விரைவுணவு விரைவான உயிர் பறிப்பையும் மேற்கொள்கின்றது. இதன்மூலம் தொற்றாநோய்களான உயர்குருதி அமுக்கம், நீரிழிவு, கொலஸ்ரோல், இதயநோய், பாரிசவாதம், புற்றுநோய் போன்ற நோய்களை விரைவாக ஏற்படுத்துகின்றது. தற்போது எங்கள் நாட்டில் வைத்தியசாலை, வைத்திய பரிசோதனை நிலையங்கள் நோயாளரால் நிரம்பி வழிகின்றன. இங்கு வயது வேறுபாடின்றி எல்லோரும் உடலில் வியாதிகளுடன் அல்லற்பட்டு, வைத்தியசாலையில் இடம் இல்லாத அளவுக்கு நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. எமது மூதாதையர்கள் உழுதுண்டு, வலுக் கொண்டு வலையிழுத்து, மண்ணையும், கடலையும் நம்பி வாழ்ந்தவர்கள். ஒரு பொழுதும் தம்மை நோய் பற்றிக்கொள்ளாது, உணவின் மூலமே பாதுகாத்து வந்தனர். நீர்வளம் உண்டு, நிலவளம் உண்டு, உணவு வளம் உண்டு. நிம்மதி ஒன்று தான் இல்லை என்று வாழ்ந்தவர்கள். இன்று எல்லா வளங்களும் தொலைக்கப்பட்டு நிம்மதியும் தொலைக்கப்பட்டு நாதியற்றவர்களாக வாழ்ந்து வருகிறோம். இதற்கான காரணம் நாம் உண்ணும் உணவிலும், பருகும் நீரிலும் அதிகளவு இரசாயனப் பொருள்கள் கலக்கப்பட்டு காணப்படுவதால் நாம் பசிக்கு உணவை உண்ணும் போதும் தாகத்துக்கு நீரை அருந்தும் போதும் உடலுக்கு நன்மை கிடைக்கும் அதேயளவு பங்கு தீமையையும் ஏற்படுத்துகின்றது.

அதாவது போர், விவசாய இரசாயனப் பாவனை, அழகுசாதனப் பாவனை (உடலில் பூசுவது) நிறமூட்டிகள் போன்றவற்றின் தாக்கங்கள் உடலை நோய் நிலைமைக்கு உள்ளாக்குகின்றன. இதில் முக்கியமானது போர் பெரியளவு எமது மாகாணத்தை பாதிப்படையச் செய்துள்ளது. ஆனால் அதற்குரிய முக்கிய நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. அதிலே குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயம் சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்படாமை. உலக நாடுகளிலே இயற்கை இடராக இருந்தாலென்ன, செயற்கை இடராக இருந்தாலென்ன உடனடியாக செய்து முடிப்பது சுகாதாரப்பிரச்சினைகளையே, ஆனால் இங்கு ஏற்பட்ட போரில் நலன்புரி முகாம்களில் மக்களை வைத்திருந்தார்களேதவிர, பாதிக்கப்பட்ட சமூக சுற்றுப்புறச் சூழலையும் பாதிக்கப்பட்ட மக்களையும் தனித்தனியாக உடல் பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை. இதனால் பெரியளவு மக்கள் நோய்கள் உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர்.

அது மட்டுமன்றி மண்வளமும், கடல் வளமும் பாதிக்கப்பட்டதனால் சிறந்த உணவுகளை உற்பத்தி செய்யமுடியாமற் போவதுடன், பொருளாதாரமும் பின்நோக்கி தள்ளப்படுகின்றது. மண்வளம் சிதைக்கப்பட்டதால் மரக்கறி வகைகளுக்கு தம்புள்ள சந்தையையே நம்பியிருக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதுடன், அந்த மரக்கறிகள் எவ்வளவு நம்பகத் தன்மை வாய்ந்தவை, ஆரோக்கியமானவை என்பதை அறியாமல் மக்களும் பசியை போக்குவதற்கு அவற்றையே உணவாக்கி உண்ணுகின்றனர். இவற்றைத் தவிர்த்து எமது சொந்த மண்ணிலேயே மரக்கறி உற்பத்திகளை மேற்கொண்டு, வீட்டுக்கொரு வீட்டுத்தோட்டத்தை உருவாக்கி, பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, நம்பகத் தன்மையான, ஆரோக்கியமான, இயற்கையான முறையில் உணவுகளைத் தயாரித்து உண்பதன் மூலம் சிறந்த ஆயுள்காலத்தை உருவாக்குவதுடன், நோய்களுக்கான பணச் செலவைக்கட்டுப்படுத்தி அதனைக் குடும்ப அபிவிருத்தித் தேவைக்கு பயன்படுத்த முடியும். அதுமட்டுமன்றி எமது பணம் எமது மாவட்டத்துக்குள்ளேயே பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கும். இதன் மூலம் எமது மாவட்டமும் சிறந்த அபிவிருத்தியை அடைந்து தன்னிறைவடையும்.

பசி எனப்படுவது, ஆற்றொணாக் கொடுநோய்.

நோய் எனப்படுவது உண்மையில் பெரும் தீனி உண்பது தானே.

உடலுக்குத்தீங்குதராதநல்லஉணவை அளவோடு ஒருவன் உண்டால் அவன் உயிருக்குத் தீமையில்லை. மாறுதலாக உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய விலையுயர்ந்த அழகிய உணவுகளை அதிகம் உண்டால், உயிருக்கு எப்போதும் அச்சுறுத்தலே. அதாவது, உண்ணும்போது மீண்டும் உண்ணத் தூண்டும் உணவுகள் நாவுக்கு சுவையாகவும் நலனுக்குக் கேடாகவுமே இருக்கும். ஆனால், நாவுக்குச் சுவையைக் கொடுக்காத உணவுகள் உடல் நலத்தைச் சிறப்பாகப் பாதுகாக்கின்றன. அந்த வகையிலான உணவுகளை நாம் விரும்பியும், தெரிவு செய்தும் உண்ணுவதில்லை. பல மக்கள் பசியைப் போக்குவதற்கு உணவுக்காக ஓடி ஓடி உழைக்கின்றனர். சில மக்கள் தமது உடலை குறைப்பதற்கு ஓடி ஓடி இழைக்கின்றனர். ஏழ்மை நிலையில் உள்ளவன் உடலை வளர்க்க அல்லற்படுகிறான். பணம் உள்ளவன் உடலை குறைக்க அல்லற்படுகிறான். எனவே, 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' என்பதற்கு அமைய எதனையும் அளவோடு செயற்படுத்த வேண்டும். எமது உடற்தேவைகளையும் வசதி வளங்களையும் அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான உணவுகளைத் தெரிவு செய்தல் இன்றியமையாததாகும். ஆனால், அனேகமானோர் ருசிக்கு முன்னுரிமை கொடுத்து உணவுகளை தெரிவு செய்கின்றனர். நாம் உண்ணும் உணவுகளில் எந்தவிதமான உணவுக்கூறுகள் எவ்வளவு விகிதத்தில் அடங்குகின்றன என்பதை அறியாதவர்களாகப் பலர் இருக்கிறோம். ஆனால் ஆலயங்களிலே சிறந்த போசாக்கு முறை கடைப்பிடிப்பதை அறிவின் ஊடாக அறியாவிட்டாலும், ஆன்மிகத்தின் ஊடாக அறிகின்றோம். அதாவது ஆலயத்தில் வழங்கப்படும் பஞ்சாமிர்தம், வடை, மோதகம், சாதம் என்பவை நிறைந்த போசனையை தருவதாக அமைவதுடன், உடலுக்குத் தேவையான சகல ஊட்டச்சத்துக்களையும் வழங்குகின்றன. அதுமட்டுமன்றி பஞ்சாங்க நமஸ்காரம், அட்டாங்க நமஸ்காரம், அங்கப் பிரதிஷ்டை போன்றவற்றின் மூலம் தொற்றா நோய் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இதன் மூலம் ஏழைகள், பணக்காரர்கள் என்ற வேறுபாடின்றி ஆலயங்களுக்கு ஆன்மிகத்துடன் செல்லும் அனை[illegible] வரும் ஆரோக்கியமானவர்களாகவே காணப்பட்டனர். பொருளாதார வசதி குறைந்தவர்களில் போசாக்கின்மை கூடுதலாகக் காணப்படுவது உண்மையாக இருப்பினும், இது முழுமையான பொருளாதாரப் பிரச்சினையாக மட்டு[illegible] அமையமாட்டாது. எனவே இருக்கு[illegible] வசதி வளங்களுக்கு அமைவாகவு[illegible] வசதிக்குட்பட்ட வகையிலும் உண[illegible] களைத் தேர்ந்தெடுத்தல் இன்றியமை[illegible] யாத தொன்றாகும். இதனைக் கரு[illegible] தில் கொண்டு போசாக்குத் தொடர்பா[illegible] கல்வி சமூக மட்டத்தில் இடம்பெற[illegible] அவசியமே.

இன்றைய தமிழ் மக்களின் அ[illegible] விருத்திப் பயணத்துக்கு ஆயுட்கால[illegible] மிக முக்கியமானதாகும். எனவே இயற்கை உணவுகளைத் தெரிவு செய்[illegible] செயற்கை வாசனைத் திரவியங்களி[illegible] பயன்பாட்டைத் தவிர்த்து, ஆரோக்[illegible] மான உணவுகளை உட்கொண்[illegible] ஆயுள்காலத்தை அதிகரித்து எம[illegible] நிகழ்காலத்தை வென்றெடுப்போம்.

*கட்டுரையா[illegible]*
*ஆசிரி[illegible]*
*உடுவில் மகளிர் கல்லூ[illegible]*



எமது மூதாதையர்கள் உழுதுண்டு, வலுக் கொண்டு வலையிழுத்து, மண்ணையும், கடலையும் நம்பி வாழ்ந்தவர்கள். ஒரு பொழுதும் தம்மை நோய் பற்றிக் கொள்ளாது உணவின் மூலமே பாதுகாத்து வந்தனர். நீர் வளம் உண்டு, நிலவளம் உண்டு, உணவு வளம் உண்டு நிம்மதி ஒன்று தான் இல்லை என்று வாழ்ந்தவர்கள். இன்று எல்லா வளங்களும் தொலைக்கப்பட்டு நிம்மதியும் தொலைக்கப்பட்டு நாதியற்றவர்களாக வாழ்ந்து வருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் கடவுள்களாகிய மன்மதனும் கியூபிட்டும்

■ சாமஸ்ரீ, தேசமான்ய கலைஞர் பா.பாலச்சந்திரன்


கியூபிட் - வீனஸ்

எமது புராணங்களில் காதல் கடவுள்களாகிய காமனும் ரதியும் போல, கியூபிட்டும் பிசிக்ஸ்ஸும் ரோமானியப் புராணக் கதைகளில் காணப்படுகின்றனர். இந்த இரு பகுதியினருக்கும் இடையில் அவர்களின் ஆயுதங்களில், செயற்பாடுகளில் பல ஒற்றுமைகள் உண்டு. கியூபிட்டும், பிசிக்ஸ்ஸும் எமது கலாசாரத்தை மட்டும் அறிந்தவர்களுக்கு சுவை மிக்க இலக்கியச் செய்தியாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே இந்த ஒப்பீடு தமிழ் இலக்கிய உலகத்துக்கு அணிசேர்ப்பதாக அமையும்.

முன்னவர் கிழக்கில் காதல் கடவுளாகப் போற்றப்படுகின்றார். பின்னவர் மேற்குலகின் காதற் கடவுளாவார். இருவரும் அழகுக்குப் பெயர் பெற்றவர்கள். ஊர் வழக்கில் அழகான ஆணை மன்மதன் எனவும், அழகான பெண்ணை ரதி என்றும் கூறுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். புராணங்களின்படி காம தேவன் பிரம்ம தேவனின் மானசீக புதல்வன் ஆவார். சில புராணங்களில் இவர் திருமாலின் மகனாகவும் கருதப்படுகிறார். திருமால் கண்ணனாக அவதரித்தபோது காமதேனு கண்ணன் ருக்மிணியின் மகன் பிரதுயும் மகனாக அவதரித்தார். இவரை பிரம்மாவின் தம்பி என்று கூடக் கூறுகிறார்கள்.



காமம் என்பது ஆசையையும் குறிக்கும். இலத்தீன் மொழியில் Cupido என்றால் ஆசை (desire) என்பதே கருத்தாகும். கியூபிட்டுக்கும் காமனுக்கும் உள்ள கருத்தொற்றுமையையும் நோக்குங்கள்.

கியூபிட்டின் தாய் வீனஸ் தந்தை மாஸ் இருவரும் தேவ சாதியினர். கியூபிட் மனித வடிவமாக இருப்பினும் இரு இறகுகள் உடையவராகக் காணப்படுகின்றார். காமன் சாதாரணமாக மனித உடலை உடையவர். கியூபிட் சிறுவனைப்போல், பிறந்த மேனியுடன் காணப்படுபவர். இருவரும் மனிதரை ஆசை ஊட்டி காதல் வசப்பட வைப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள். இருவருக்கும் அம்பு வில்லே ஆயுதம். காமனுக்கு ஐந்து வாசமலரினால் ஆன மலர்க் கணைகள் உண்டு. வில் கரும்பால் ஆனது. நாண் தேனீக்களால் ஆனது. கியூபிட்டுக்குமூன்று விதமான அம்புகள் உண்டு. ஒன்று தங்கம், இரண்டாவது ஈயம், மூன்றாவது வெள்ளி, தங்க அம்பு தைத்தால் இலகுவாகக் காதல் தோன்றும், வெள்ளி அம்பு தைத்தால் சற்று அதிகமாகக் கட்டாயப்படுத்தும், இரும்பு அம்பு தைத்தால் காதல் புண் ஆறவே ஆறாது. இவருக்கும் தீவட்டியும் கையில் உண்டு. ஏனெனில் இவர் அம்பினால் காயப்படுத்தி தீயினால் சுடுவார். அதாவது காதலை ஏற்படுத்தி வதைப்பார் என்பதே அதன் விளக்கம். அதோடு இவர் தேன் பிரியர். கிருஷ்ணின் வெண்ணெய் திருடுவதுபோல இவர் தேனைத் திருடுவார். தேனீயால் குத்துப்பட்டு தாய் வீனஸ்ஸிடம் முறைப்படுவார். அந்தச் சின்ன பிராணி குத்தி உனக்கு ஒன்றும் செய்யாது என்று தாய் கூறுவாராம்.


கியூபிட் - பிசிக்ஸ்

காமனுக்குக் கிளி வாகனம். கியூபிட்டுக்கு டொல்பின் வாகனம். சிவபிரான் காமனை எரித்த கதையில், தேவரைக் காக்க சிவனுக்குப் புத்திரன் தோன்ற வேண்டும். அதற்கு சிவனின் தியானத்தைக் கலைக்க இந்திரன் காமனை சபிப்பேன் என்று பயமுறுத்திக் கட்டளை இட, காமன் இவனுடைய சாபத்துக்கு ஆளாகாது சிவனால் கொல்லப்படுதல் மேல் எனக் கூறி சிவன் மீது மலர்க் கணை தொடுக்க, சிவனின் கோபத்துக்கு ஆளாகி காமன் எரிந்து போகிறான். பின்பு ரதி அழுது புலம்ப அவளுக்கு மட்டும் தெரிவான் என்றும், காமத்துக்கு உரு இல்லாததுபோல காமனுக்கும் உரு இல்லை எனவும் கூறியதாகவும் தெரிகின்றது. நாம் ஆரம்பத்தில் பார்த்ததுபோல கண்ணனுக்கும் ருக்மணிக்கும் மகனாகப் பிறக்கும்போது உடம்பைப் பெற்றான் எனவும் ஒரு கதை உண்டு. இங்கே முக்கியமான விடயம் உருவம் தெரியாது வாழ்ந்ததுதான். இதேபோல கியூபிட்டும் காதலியான பிசிக்ஸ்ஸுக்குத் தோன்றாது இருந்த சம்பவம் உண்டு.

வீனஸின் அழகு பெயர் பெற்றது. அவளும் காதல் தேவதைதான், அவளுக்குப் போட்டியாக பிசிக்ஸ் வருவதை விரும்பாத அவள், கியூபிட்டை பிசிக்ஸிடம் அனுப்பி பழிவாங்க முயல்கிறாள். அவளிடம் சென்ற கியூபிட் அவள் மீது ஆசை கொண்டான். தன்னை மறந்தான் தன் நாமம் கெட்டான். அவளைத்தனது அரண்மனைக்கு கொண்டு செல்லத் திட்டமிடுகிறான். இரவில் தனது காதலியிடம் வந்து போகும் கியூபிட், தன்னை பார்க்க விரும்ப வேண்டாமென பிசிக்ஸிடம் கூறிவைத்தான். இவளிடம் பொறாமை கொண்ட சகோதரிகள் அவன் கண்ணுக்குப் புலப்படாத ஒரு பூதமென அவளை நம்பவைத்தனர். அதன் காரணமாக அவள் அவனைப் பார்க்கக் கூடிய விதமாக ஒரு விளக்கை ஏற்படுத்தினாள். அதன் உதவியுடன் அவனைக் கண்டு திடுக்கிட்ட அவள் அந்த விளக்கின் சுடு எண்ணெயை அவன் மீது கொட்டும்படி செய்ய, அவன் எழுந்து இவளைக் கைவிட்டு ஓடினான். பின்பு இவள் அவனை உலகம் முழுவதும் தேடிக் காணாது அவனுடைய தாய் வீனஸிடம் கீழ்ப்படிந்தாள். வீனஸ் இவளைக் காத்தவராயன் கதையில் பலதைத் தேடும்படி சொல்லி பரீட்சை வைத்தது போல, இவளுக்குப் பல சோதனைகள் வைத்தாள். அவற்றை தெய்வீக உதவியுன் பிசிக்ஸ் வென்றாள். இறுதியானதில் வென்று வந்த இவள் ஆர்வக் கோளாறு காரணமாக திறக்கக் கூடாத நேரத்தில் பெட்டியை திறந்து மயங்கிக் கிடக்க, அங்கு வந்த கியூபிட்டு இவளைக் காப்பாற்றி, அந்த உறக்க சக்தியைத் திரும்பவும் பெட்டிக்குள் செலுத்தி இவளை மீட்டு அழியா வரம் கொடுத்து, அவளை மணந்தான். காதல் கடவுளர்களின் வாழ்விலும் சோதனைகள்தான். அவர்கள் மற்றவர்களைச் சும்மா விடுவார்களா? இருவரும் வசந்த காலத்துக்கு உரியவர்களாகவே கூறப்பட்டுள்ளனர்.

கிழக்குக்கும் மேற்குக்கும் காதல் கடவுளர் விடயத்தில் உள்ள ஒற்றுமை வியப்பைத் தருவதாக இருப்பதோடு, இலக்கியச் சுவை உள்ளவையாகவும் இருக்கின்றது. இந்த ஒற்றுமை ஏற்படக் காரணமென்ன? ஒரே தலைமையின் கீழ் சிறு வித்தியாசமாக இயங்கும் இரு கிளைகளா? ஒரே விடயம் மருவி வந்ததா? எனப் பல கேள்விகள் மனதில் எழுவது உண்மையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கத் திறனும் இலக்கியத் தரமும் தற்போதைய கல்வியில் காணப்படவில்லை

## மனம் திறக்கிறார் மூத்த கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி

நேர்காணல்
இரா.ஜெயக்குமார்

ஈழத்துத் தமிழ்க் கவிதை மரபில் தனக்கென்று தனி முத்திரை பதித்தவர் கல்வயல் வே.குமாரசாமி. சிறு வர் இலக்கியங்களிலும் இவரது பங்களிப்பு அளப்பரியது. இவர் மும்மொழிப் புலமை பெற்றவர். ஆசிரியர், அஞ்சல் அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் எனப்பல பதவிகளைவகித்தவர். இவர் தற்போது தனது எழுபத்தொராவது வயதில் பாரிசவாத நோயால் பீடிக்கப்பட்டு சாவகச்சேரி பெரிய அரசடி வீதியில் உள்ள தனது இல்லத்தில் வசித்து வருகிறார். இலக்கிய உலகில் பரந்த அனுபவம்மிக்க இவரைச் செவ்வி கண்டபோது;

**கேள்வி** : உங்களை இலக்கியத் துறைக்கு ஈர்த்த இளமைக்கால அனுபவங்கள் பற்றிக் கூறுங்கள்.

**பதில்** : நான் சாவகச்சேரியில் கல்வயல் பகுதியில் வேலுப்பிள்ளை-மங்கையர்க்கரசி தம்பதியினருக்கு நான்காவது பிள்ளையாக 1944 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியன்று பிறந்தேன். கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாசாலையில் தரம் 11 வரை கற்றேன். க.பொ.த உயர்தரக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கற்றேன். பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்றேன்.

எனது மாணவப் பருவத்தில் எனது உறவினராகிய கவிஞர் முருகையன் எழுதிய கவிதைகளைப் படிப்பேன். இதனால் கவிதைகள் எழுதுவதில் ஆர்வம் ஏற்பட்டது. கவிஞர் முருகையன் மூலம் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதுகளில் மகாகவி து.உருத்திரமூர்த்தி, கவிஞர் முருகையன், இ.அம்பிகைபாகன் (அம்பி), சில்லையூர் செல்வராசன் முதலானவர்களின் தலைமையில் இடம்பெற்ற பல்வேறு கவியரங்கங்களில் பங்கு பற்றினேன். இந்தக் கவியரங்குகளில் பா.சத்தியசீலன், ஆ.சி.சிவநேசச்செல்வன், வி.கந்தவனம், காரை சுந்தரம்பிள்ளை, க.கி.நடராஜன், இ.நாகராஜன் முதலான கவிஞர்கள் என்னுடன் பங்குபற்றினர்.

**கேள்வி**: உங்களது இலக்கிய நூல்கள் பற்றிக் கூறுங்கள்:

**பதில்**: எனது கவிதைத்தொகுதியான சிரமம் குறைகிறது, பேராசிரியர் க.கைலாசபதியின் முன்னுரையுடன் 1981ஆம் ஆண்டு வெளிவந்தது. 'மரண நனவுகள்' எனும் கவிதைத் தொகுதி யாழ். வெளியீடாக வெளிவந்தது. இவற்றைவிட வெற்றிமணி, ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த சிறுவர் கவிதைகள் தொகுக்கப்பட்டு பாப்பாப்பா, பாடுபாப்பா, பாலர் பா எனும் நூல்களாக வெளிவந்தன. இவை தொகுக்கப்பட்டு யாழ்.தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாகவும், சவுத் ஏசியன் பதிப்பக வெளியீடாகவும், கல்வயல் வே.குமாரசாமியின் பாப்பாப் பாடல்கள் எனும் பெயரில் நூலாக வெளிவந்தது. இவற்றைவிட மணியப்பா எனும் சிறுவர் கவிதை நூலும் வெளிவந்துள்ளது. இவற்றைவிட முறுகல் சொற்பதம் எனும் நூலும் 2010ஆம் ஆண்டு வெளிவந்தது.

**கேள்வி**: உங்களது இலக்கிய முயற்சிகளுக்குக் கிடைத்த விருதுகள் பற்றிக் கூறுங்கள்.

**பதில்** : 2000ஆம் ஆண்டு இந்து சமயப் பேரவையால் கவிமாமணி விருது வழங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கலாபூஷணம் விருது வழங்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு அகில இலங்கைக் கம்பன் கழகத்தால் மகரந்தச் சிறகு எனும் விருது வழங்கப்பட்டது. 2012ஆம் ஆண்டு கொழும்பு தமிழ்ச் சங்கத்தால் உலகத் தமிழ் இலக்கிய மாநாட்டு விருது வழங்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் முதலமைச்சர் விருது வழங்கப்பட்டது. 2016ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள், அமைச்சும் கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து கொழும்பில் காவ்யபிமானி விருது (தங்க மயில்விருது) வழங்கிக் கௌரவித்துள்ளன.

**கேள்வி** : இன்றைய காலகட்டத்தில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பாடநூல்கள் முதலானவற்றில் வெளிவருகின்ற இலக்கியங்கள் பற்றிக் கூறுங்கள்.

**பதில்**: பாடசாலைகளில் அடிப்படைத்தமிழ் இலக்கணம் நல்ல முறைகளில் புகட்டப்படுவதில்லை. பெரும்பாலான ஆசிரியர்களும் தமிழ் மொழி தொடர்பாக ஆழமான அறிவு, இலக்கியப் பரிச்சயம் குறைந்தவர்களாக உள்ளனர். பாடநூல்களை ஆக்கும் குழுவிலும் தமிழறிவு குறைந்தவர்கள் தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி இடம் பெற்று விடுகின்றனர்.

பல்கலைக்கழகங்களில் நூல்களைத் தேடிப் படிக்காமல் விரிவுரையாளர்களின் குறிப்புக்களைப் பூர்த்தி செய்து பட்டப்படிப்புக்களைப் மனனம் செய்து விடுகின்றனர். இதனால் முழுமை பெறாத கல்வியே இவர்களிடம் உள்ளது.

ஆக்கத்திறனும் இலக்கியத்தரமும் மிக்க கல்வி இல்லாமற் போய்விட்டது. இதனால் மொழியில் செறிவு ஊட்டமற்ற உணர்ச்சிப் பாங்கு குன்றிய கவிதைகளாக வெளிவருகின்றன.



> **எனது கவிதைத் தொகுதியான "சிரமம் குறைகிறது" பேராசிரியர் க.கைலாசபதியின் முன்னுரையுடன் 1981ஆம் ஆண்டு வெளிவந்தது. 'மரண நனவுகள்' எனும் கவிதைத்தொகுதி யாழ். வெளியீடாக வெளிவந்தது. இவற்றைவிட வெற்றிமணி, ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்த சிறுவர் கவிதைகள் தொகுக்கப்பட்டு பாப்பாப்பா, பாடு பாப்பா, பாலர் பா எனும் நூல்களாக வெளிவந்தன.**

கல்விச் செயற்பாடுகளிலும் உரையாடல், நகைச் சுவை என்பவற்றில் தென்னிந்திய சினிமாவின் சாயலையே காணமுடிகின்றது. சிறுவர் இலக்கியம் பற்றிய ஆழமான அறிவின்றி, குழந்தை உளவியல் பற்றிய ஆழமான அறிவைக் கொண்டிராமல், குழந்தை உளவியல் பற்றிய எண்ணக் கருக்களுக்குப் பொருந்தாத வகையில் சொற் களஞ்சியம், சந்தம் ஓசை குன்றிய கவிதைகள் வெளிவருகின்றன. பத்திரிகைகள் நல்ல கவிதைகளை ஏற்காததனால் சிறு சஞ்சிகைகளே இந்தப் பங்களிப்பைச் செய்கின்றன.

**கேள்வி**:கவிதை இலக்கியத்துறையில் ஈடுபட விரும்பும் இளம் படைப்பாளிகளுக்கு உங்கள் ஆலோசனை?

**பதில்** : இளம் படைப்பாளிகள் முன்னோர்களின் படைப்புக்களைக் கற்று விளங்கிக் கொள்ளவேண்டும். அன்னிய சிந்தனைகளை இரவல் வாங்காது, சுயத்தையும் ஆற்றலையும் இழக்காது இலக்கியங்களைப் படைக்க வேண்டும். கவிதை வேறு, பாட்டு வேறு. வெறும் சொற்குவியல்கள் கவிதையாகாது. கவிதைக்கு உணர்ச்சி, கர்ட்சிப்படுத்தல், சந்தம், ஓசை, நயம் உவமைகள் உருவகங்கள் என்பவை இன்றியமையாதவை. குழந்தைக் கவிதைகள் படைப்பவர்கள் குழந்தை உளவியலைப் புரிந்து கொண்டு ஏற்ற மொழிநடையில் கவிதைகள், பாடல்கள் என்பவற்றை அமைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுவில் தெற்கு அ.மி.த.க. கலவன் வித்தியாலயத்தில் வர்ண விருதுகள் பொழுது - 2016

தென்னவன்

பாடசாலைகளில் சாதனை படைக்கும் மாணவர்களைக் கௌரவிக்கும் பொறுப்பு அந்தந்தப் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந் தாகும். அந்த வகையில் மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தில் கடந்த எட்டு வருடங்களாக வலய, மாவட்ட மாகாண தேசிய மட்ட நிலைகளில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டி தென்மராட்சி கல்வி வலயத்தில் சாதனை கள் படைத்த மாணவர்களைக் கௌரவித்து விருதுகள் வழங்கும் வர்ணவிருதுகள் பொழுது நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி வித்தியாலய மண்டபத்தில் பாடசாலைச் சமூகத்தினரால் நடத்தப்பட்டது. தடகளப் போட்டிகள் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் பல நிலைகளில் வெற்றியீட்டிச் சாதனை படைத்த மாணவர்களே வர்ண விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்களாவர்.

இந்த மாணவர்களைச் சாதனையாளர்களாக மாற ஊக்குவித்த முன்னைநாள் தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி, யாழ்.கல்வி வலயத்துக்கு இடமாற்றல் பெற்றுச் சென்று ஓய்வுபெற்ற கந்தையா குமாரசாமியை நன்றி மறக்காமல் அழைத்து வர்ணவிருது வழங்கிக் கௌரவித்தமை பாராட்டத்தக்கது. ஒருவர் சேவையிலிருந்து இடமாற்றல் பெற்றுச் சென்றாலோ அல்லது ஓய்வுபெற்றுச் சென்றாலோ அவரை முற்று முழுதாக மறந்துபோகும் சமூகத்தில், இடமாற்றல் பெற்றுச்சென்று பல வருடங்களாகியும் மறக்காமல் குறித்த ஆசியரை அழைத்துக் கௌரவித்தமை வித்தியாலய அதிபரின் நன்றி மறவா நிலையை எடுத்துக்காட்டுகிறது.

கடந்த 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையில் வித்தியாலயத்தின் சார்பில் கலந்து கொண்டு தட களம் மற்றம் கரப்பந்தாட்டம் ஆகியவற்றில் பங்குபற்றி வெற்றிகள் பல ஈட்டி சாதனைகள் புரிந்த வீர, வீராங்கனைகள் மற்றும் கரப்பந்தாட்ட ஆண், பெண் அணிகளில் பங்குபற்றியோரை விழாவுக்கு அழைத்து வர்ணவிருதுகள் வழங்கிக் கௌரவித்தமை வித்தியாலயத்தின் தற்போதைய மாணவர்களுக்கு எதிர்காலத்தில் வித்தியாலயத்துக்கு பெருமை சேர்க்கும் விதத்தில் பல போட்டிகளில் சாதனைகள் படைக்க ஓர் முன்னுதாரணமாகவும் வழிகாட்டலாகவும் அமைந்துள்ளது எனலாம்.

ஒரு வருடத்தில் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஐந்து அணிகள் (3 பெண்கள் அணி 2 ஆண்கள் அணி) கலந்து கொண்டு ஐந்து அணிகளும் வெற்றியீட்டியமை பாடசாலைகள் வரலாற்றில் முதலாவதாக இடம் பெற்றுள்ளதெனலாம். மூன்று பெண்கள் அணிகள் முதலாமிடத்தையும் இரண்டு ஆண்கள் அணிகள் மூன்றாமிடத்தையும் வலய மட்டத்தில் பெற்றுச் சாதனை படைத்துள்ளன. இந்தச் சாதனை எந்தவொரு பாடசாலையாலும் இதுவரை நிகழ்த்தப் படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அணிகளுக்கும் தடகள வீர, வீராங்கனைகளுக்கும் பயிற்சியாளராக வித்தியாலய விளையாட்டுப் பொறுப்பாசிரியராக இருந்ததோடு அதிபர் வே.சுந்தரலிங்கமும் அதிக அக்கறை செலுத்தியிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது இவ்வாறு வீர, வீராங்கனைகளுக்கு போதிய பயிற்சிகளை வழங்கி அவர்களைச் சாதனையாளர்களாக மாற்றியிருந்தமையும் பாராட்டத்தக்கது.

அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்விபிரதீபாகிருஷ்ண பிள்ளையும், கௌரவ விருந்தினராக வலய உடற்கல்வி சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீகாந்தாவும் கலந்து கொண்ட னர்.

குறைந்த அளவு மாணவர்களைக் கொண்ட இந்த வித்தியாலயம் வருடாவருடம் விளையாட்டு நிகழ்வுகளில் அதிக அளவு மாணவர்களைப் பயிற்றுவித்து, கலந்து கொள்ளச் செய்வதாகவும் விருந்தினர்களால் தெரிவிக்கப்பட்டது.













# அதிர்ஷ்ட நிறங்களின் ஆற்றல்

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

அதிர்ஷ்ட நிறங்களால் மனச்சோர்வு நீங்கும், மனம் பூரிப்படையும், மற்றவர்களை வசீகரிக்கும். நிறங்கள் வெளியிடும் கதிர் வீச்சு உடலைப் பாதுகாக்கும், மந்தத் தன்மையைப் போக்கும், காரிய வெற்றிக்குத் துணை நிற்கும். ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு குணமுடையது. அடிப்படை நிறங்களான (Vibgyordviolei, indigo, blue, green, yellow, orange,red) ஏழுநிறங்களும் கலக்கும்போது புதுப்புது நிறங்கள் உருவாகின்றன. தனித்தனிக் குணங்களுடன் செயற்பட்டுவரும் வீடு, வாகனம், அன்றாட உபயோகப் பொருள்கள், அலுவலகம், பேனா, பென்சில், அழைப்பிதழ்கள், ஆடைகள், அணிகலன்கள், யாவும் அதிர்ஷ்ட நிறத்தில் இருப்பது சிறப்பானது. அதிர்ஷ்ட நிறமுடைய அறையில் உறங்குவதால் நிம்மதியான தூக்கம் வரும், ஆரோக்கியம் மேம்படும்.



அதிர்ஷ்ட நிறத்துக்கு மனதை மாற்றும் சக்தி உண்டு. நீலவானம், நீலக்கடல் ஆகியவை மனதைத் தெளிவாக்கும். கண், கண்ணாடி, சட்டை பட்டன் யாவும் உரிய நிறத்தில் இருத்தல் சிறப்பு. அதிர்ஷ்ட நிற ஆடையில் பவனி வந்தால் மற்றவர்களின் மனதையும் கொள்ளை கொள்ள முடியும். சூரிய ஒளியில் வெளிப்படும் 7 வகையான நிறங்களின் பிரதிபலிப்பு 9 வகையான முறைகளில் கலந்து பஞ்சபூதத் தத்துவப்படி இயங்கி வருகின்றது. சிவப்பு நிறம், குங்குமம், செங்கல், செம்மண், செந்நிற மலர்கள் யாவும் ஆவலைத் தூண்டும். பிறருக்கு அனுப்பும் கடிதங்கள், முக்கிய ஒப்பந்தங்கள், செயற்றிட்டங்கள் கையெழுத்து ஆகியவற்றில் அதிர்ஷ்ட நிறங்களைப் பயன்படுத்தின் காரிய வெற்றிதான்.

கைக்கே அணிவது கன்னலும்
பூவும், கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து
மாலை அபிராமி அந்தாதி 37
மண்களிக்கும்பச்சை வண்ணமும்
ஆகி மதங்கர் குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு
மாட்டிதன் பேரழகே *(அபிராமி அந்தாதி 70)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விளையாடுவோம், கற்போம், செயற்படுவோம்

# பாலர் பள்ளிப் படிகள்

கே.தருமன்

முன்பள்ளிப் பருவமானது, சிறார்களின் வாழ்வில் விளையாட்டுக்கள் மூலம் மகத்தான கல்வி அனுபவங்களைத் தோற்றுவிக்கும் இனிய பருவமாகும். இந்தக்கால அனுபவங்கள் ஆயுள் முழுவதையும் வளப்படுத்தி முன்னெடுத்துச் செல்லும் வலுவுடையன. முன்பள்ளிப் பருவச்சிறார்கள் விளையாட்டில் மிகுந்த விருப்பமுடையவர்கள். வெறுமனே ஓரிடத்தில் இருக்க மாட்டார்கள். ஒரே செயற்பாட்டில் தொடர்ந்து ஈடுபடவும் மாட்டார்கள். இவர்களுக்கேற்ற விளையாட்டுக்களை ஒழுங்குபடுத்தி சிறந்த கற்றல் அனுபவங்களை வழங்க முடியும். பெற்றோர்களுடன் அதிக நேரத்தைக் கழிக்கும் இந்தச் சிறார்களுக்கு அவர்களின் தனியாள் வேறுபாடுகள், விருப்பங்களுக்கு ஏற்ப விளையாட்டு அனுபவங்களை வழங்க வேண்டும். அசைதல், நடத்தல், பாய்தல், ஓடுதல், கெந்துதல் போன்றவை பிள்ளைகளின் இயற்கையான செயற்பாடுகளாகும். இதனால் சிறார்களின் தலை, கை கால்கள், உடல் தசைநார்கள் வலுவுற்றதாகவும், உறுதியானவையாகவும் விருத்தியடைகின்றன. இதற்கு மணல் விளையாட்டுகள் வழிசெய்கின்றன.

நல்ல உடல் நல்ல உள்ளமாகும். சிறந்த உடல் விருத்தி, சிறார்களின் ஏனைய விருத்திகளுக்கு வழிவகுக்கின்றது. தசைநார்கள் விருத்தியடைந்த பிள்ளைகள் எதையும் திறமையாகக் கையாளும் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வார்கள். எனவே பிள்ளையின் முழுமையாக பயன்தரு உடல் அபிவிருத்திக்குரிய பல்வேறு செயற்பாடுகளைத் திட்டமிட்டு, பிள்ளையின் வயது வளர்ச்சிக்கேற்ப விளையாட்டுக்கள் என்பவை மூலம் சிறந்த அனுபவங்களைவழங்குவதற்கு உதாரணமாக இந்த விளையாட்டு விழாவில் சைக்கிள் ஓட்டம், வரிசை பலூன் நடை விளையாட்டுக்கள் என்பவை எல்லோரையும் கவர்ந்தன.

ஒரு பிள்ளை இந்த உலகில் பிறந்த கணத்திலிருந்து கற்கத் தொடங்குகின்றது. தம்மைச் சூழவுள்ள சூழலில் காண்பவைகள், கேட்பவைகள், சுவை, மணம், விளையாட்டு அனுபவங்கள், பெற்றோர், ஆசிரியர்களுடன் கொண்டுள்ள தொடர்புகள், அவற்றை அனுபவிக்கும் விதம் போன்றவற்றினூடாக இயல்பான விருத்தியை அனுபவிக்கின்றனர். இவர்கள் சூழலைத் தழுவிக் கொள்வது போன்று தாம் பெறும் சகல அனுபவங்களையும் ஒழுங்கமைத்துக் கொள்கின்றனர். உடல் வளர்ச்சியோடு புலன்களின் வளர்ச்சியும் சீராக அமையும் போது பிள்ளையின் இயக்கம் ஓர் ஒழுங்குக்கு வருகின்றது. விளையாட்டுக்கள் மூலம் முதன்முதல் பிள்ளை தனது உடலில் மீது ஆட்சி புரியக் கற்றுக்கொள்கிறது. நிற்றல், நடத்தல், ஓடுதல், பாய்தல், பேசுதல், ஆடுதல், பாவனை செய்தல் என்பவற்றினூடாக சீரான இயக்கத்திறன்களைப் பெறுகின்றார்கள்.





முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுத் திறன்கள் விருத்தியடையும் போது அவர்களின் பன்முக ஆளுமை விருத்தியடைகின்றது. தாம் பெற்ற விளையாட்டு அனுபவ தூண்டல்களுக்கு ஏற்ப துலங்கல்களைக் காட்ட முற்படுவர். மகிழ்ச்சி, உற்சாகம், ஊக்கம், அன்பு, பாசம், ஆற்றல், மேன்மை, உயர்வு, உதவி போன்ற மனவெழுச்சிகளை நேரானதாக வெளிக்காட்டுவர். சேர்ந்திருப்போர் சேர்ந்து விளையாடுவோர் நண்பர்கள் மத்தியில் பொருத்தமான உறவுகளைப் பேணுதல், நல்ல தீர்மானம் எடுத்தல் என்பவை அந்த பிள்ளையை சுயாதீனமானவராக மாற்றுகின்றது. உளச் சமூக விருத்திக்கு இது உயர்ந்த உந்துதலை வழங்குகின்றது. தமது ஆற்றல்களை முழுமையாக வெளியிட சந்தர்ப்பங்களை வழங்குகின்றது.

விநோத உடையில் திருஞானசம்பந்தர்

முன்பள்ளிச் சிறார்களின் அறிவு எல்லையற்றது. அவர்களின் விளையாட்டுத்திறன் விருத்தியடைய அந்த அறிவு உடலியல், உளவியல் ரீதியாகப் பரிணாமமடைகின்றது. காலங்களின் மாறுபாடுகளை விளங்கிக் கொள்ளுதல், தமது ஆற்றல்களை வெளிக்காட்டுதல் பல்வேறு விடயங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் புலக்காட்சிகளினூடாக எண்ணக்கருக்களை சரியாகக் கற்றுக் கொள்ளுதல். மேலும் விளையாட்டுப் புலக்காட்சிகள் மூலம் நினைத்துப் பார்த்தல், ஞாபகத்தில் இருத்தல் போலச் செய்தல் போன்றவற்றோடு அந்தச் சிறார்களின் கற்பனையும், கவனமும் விருத் தியடைகின் றன. இவை யாவும் விளையாட்டுச் சூழலிலிருந்து, பெற்றுக் கொள்ளும் அனுபவங்களுக்கும் உந்தல்களுக்கும் ஏற்பவே வெளிப்படுத்தப்படும் என்பதனை இந்தச்சிறுவர் பூங்கா முன்பள்ளியின் விளையாட்டு விழா சிறப்பாக எடுத்தியம்பியது.

விளையாட்டு உணர்ச்சி சிறார்களிடம் இயற்கையாகவே காணப்படுகின்றது. விளையாட்டுக்களைச் சிறார்கள் தங்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பிரதான கருவியாகப் பயன்படுத்துகின்றனர். சிறார்களின் புலன்களுக்கு விளையாட்டுக்கள் சிறந்த அனுபவங்களை வழங்குகின்றது விளையாட்டில் ஈடுபடும் பிள்ளைகளின் சிறிய தசை நார், பெரும் தசைநார் ஆகியவை விருத்தியடைகின்றன. அத்துடன் உடல் உள வளர்ச்சி சிந்தனைத்திறன் ஆராயும் தன்மை, தலைமைத்துவம், முன்னின்று செயற்படும் திறன் சிறார்களிடம் இயல்பாகவே ஏற்படுகின்றன.

முன்பள்ளிச் சிறார்கள் கல்வி கற்கின்றோம் என்ற எண்ண[illegible] ஏற்படாதவாறு விளையா[illegible] டுக்கள் ஊடாகக் கல்வி [illegible] கின்றார்கள். சிறார்களுக்[illegible] விளையாட்டானது வாழ்க்[illegible] யில் ஆயத்தமாகும் என்[illegible] தனை இந்த விளையா[illegible] விழா நடைமுறைகள் எ[illegible] குப் பாடமாக உணர்த்தின. பெற்றோ[illegible] ஆசிரியர் நிர்வாகத்தினர் உயிர்த்துடிப்[illegible] இயங்கியமையால் ஒரு மிகச் சிற[illegible] மாதிரி விளையாட்டு விழாவாக [illegible] அமைந்தது. ஒவ்வொரு நிகழ்ச்சி[illegible] மிகக் கவர்ச்சியாக சுவாரஸ்ய[illegible] இருந்தது. சிறந்த திட்டமிடலு[illegible] எடுத்துக் காட்டாக அமைந்தது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













# யாழ்ப்பாணத்தில் களிமண் சிற்பப் பயிற்சி நெறி

திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக்கூடம், வடமாகாணத்தின் முதலாவது ஓவியக் கூடமாக யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டு, மூன்றாவது ஆண்டில் நடைபயின்று கொண்டிருக்கின்றது. இந்தவேளையில் அதன் முதலாவது சான்றிதழ் பயிற்சி நெறியாக "களிமண் சிற்ப ஓராண்டுப் பயிற்சி" கடந்த மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை காலையில் இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவம் திருமறைக் கலாமன்றத்தின் ஊடக இணைப்பாளர் கி. செல்மர் எமில் தலைமையில் இடம்பெற்றது. மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில், திருமறைக் கலாமன்ற நிர்வாக இயக்குநர் அருட்பணி எம்.ஜெறோ செல்வநாயகம், பேராசிரியர் சரத் சந்திரஜீவா, மூத்த ஓவியர் ஆசை இராசையா, பேராசிரியர் சரத் சந்திரஜீவாவுடன் வருகைதந்த அவரது குழுவினரான லலித்லன்சக்கர, றஞ்சித் பெரேரா, ஜனகஹெரத், அனோமா ஜெயசிங்க மற்றும் பயிற்சியாளர்கள் சார்பாக ந.ஜெயதீபன் ஆகியோர் மங்கல விளக்கை ஏற்றி வைத்தனர். தொடர்ந்து வரவேற்புரையையும், ஆசியுரையையும் கலைத்தூது அழகியல் கல்லூரியின் உப அதிபர் அருட்பணி செ.அன்புராசா அடிகள் ஆற்ற, சிறப்புரையை, பயிற்சி நெறியை வழிநடத்திச் செல்லும் கொழும்பு கட்புல, ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக பட்டப் படிப்புகள் கற்கைநெறியின் பீடாதிபதி பேராசிரியர் சரத் சந்திரஜீவா நிகழ்த்தினார். அதன்பின்னர், திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் நிறைவுரையைத் தொடர்ந்து பயிற்சி நெறி ஆரம்பமாகியது.

ஓவியக்கூடம் ஆரம்பித்து வைக்கப்பட்டது முதல் ஈழத்து ஓவியர்களின் ஓவியக்காட்சிகள் நிரந்தரமாகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன், மேலதிகமாக அவ்வப்போது தனிநபர் ஓவிய, சிற்பக்காட்சிகள், கருத்தரங்குகள், மாணவர்களுக்கான ஓவியப் பயிற்சிகள், ஓவிய வட்டத்தின் ஒன்றுகூடல்கள் எனப் பல நிகழ்வுகள் இடம்பெற்று வந்தன. இந்த நிலையில் இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்பத்துடன் மற்றுமொரு புதிய தடத்தை ஓவியக்கூடம் பதித்துள்ளது. ஓவியக் கூடத்தின் செயற்பாடுகளைத் திருமறைக் கலாமன்றப் பணியாளரான திருமதி ஸ்ரெலா எட்மன் முன்னெடுத்து வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் முதற்றடவையாக என்று கூறத்தக்க அளவுக்கு சிறப்பு மிக்கதாக அமைகின்ற களிமண் சிற்ப பயிற்சிநெறி. தொடர்ந்து மாதத்தின் இறுதிக் கிழமைகளில் வரும் சனி,ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது. இதனைக் கொழும்பில் இயங்கும் கட்புல, ஆற்றுகைக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்புகள் கற்கை நெறியின் பீடாதிபதி பேராசிரியர் சரத் சந்திரஜீவாவும் அவரது குழுவினரான லலித்லன்சக்கர, றஞ்சித் பெரேரா, ஜனகஹெரத், அனோமா ஜெயசிங்க ஆகியோரும் வழிநடத்தவுள்ளனர். கடந்த சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிநெறியில் ஓவிய ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட, பலதரப்பட்ட நிலையிலுள்ள 25 பேர் மட்டும் இணைத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியுடன் விளையாட்டும் அவசியம்

சி.நற்குணலிங்கம்



சின்னஞ்சிறு வயதுப் பிள்ளைகள் ஓடி ஆடி மகிழ்ச்சியாக படிக்க வேண்டிய பருவத்தில் பெற்றோரால் பரீட்சைகளை நோக்கி குவியப் படுத்தப்பட்டுள்ளனர். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் தரம் ஒன்று முதலே தனியார் வகுப்புக்களுக்கு அனுப்புகிறார்கள். பிள்ளை பாடசாலைவிட்டு வந்த பின்னர் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கிறார்கள். பின்னர் பாடரீதியாக பிரத்தியேக வகுப்புக்களில் கற்றலில் ஈடுபடுகின்றனர்.

சிறார்களுக்கு மேலதிகமான கல்விச் சுமைகளை பொருத்தமற்ற விதத்தில் வழங்குவதால் பிள்ளைகள் விளையாட்டின் மூலம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளை இழந்து விடுகிறார்கள்.

கல்விச் சுமை அதிகரிப்பினால் அவர்கள் விளையாட நேரம் இல்லாமற் போய்விடுகிறது. இதன் விளைவாக இன்று பெரும்பாலான பிள்ளைகள் சிந்திக்கும் திறன் இன்றி, நோய் எதிர்ப்புச் சக்தி இன்றி நோய்களின் பிறப்பிடமாக வாழ்கின்றனர்.

இதனைப் பெற்றோர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய உலகில் பல நோய்களைத் தீர்க்கக் கூடிய சக்தி கல்வியில் உண்டு. ஆனால் அந்தக் கல்வியை ப் பெற்றோர் பிள்ளைகளுக்குச் சுமையாக்கி வருவதால், அந்தக் கல்வி காரணமாகவே பலர் நோயாளிகளாக மாறுகின்றனர். சிறு பராயத்தில் கல்வியுடன் விளையாட்டும் பிள்ளைக்கு அவசியம். ஆனால் இன்று மாலை முழுவதும் விளையாட்டு என்ற பாரதியின் கூற்று மாறிவிட்டது. இதனை மீண்டும் ஓரளவுக்காவது ஏற்படுத்த வேண்டும். ஆரோக்கியமற்ற உடலால் கல்வியை மட்டுமல்ல எதிர்கால ஆரோக்கிய வாழ்வையே இழக்க நேரிடும். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்

பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு விளையாட்டுக்கான மனோபலத்தை வளர்க்க உதவ வேண்டும். சிறந்த ஒரு விளையாட்டு வீரனால் கல்வியிலும் சாதனை படைக்க முடியும். விளையாட்டில் ஈடுபட்டால் அது பிள்ளையின் கல்வியை எதிர்காலத்தில் பாதிக்கும் என நினைத்து, பெற்றோர் சிறுபராயம் முதலே பிள்ளைகளை விளையாட்டில் ஈடுபட விடாது அவர்களது கல்வியிலேயே கண்ணாக. இருக்கிறார்கள். இது தவறான பாதையாகும்.

விளையாட்டின் மூலம் குருதிச் சுற்றோட்டம் வலுப் பெறவும், தசைநார்கள் வலுப்பெறவும் எலும்புகள் விரைவாக வளர்ச்சியுறவும், உற்சாகமாகக் கல்வி கற்பதற்கும், மூட்டுவலி, இருதய உபாதை, குருதி அழுத்தம் போன்ற நோய்கள் உடலில் சேராது இருக்கவும் வழிசமைத்து உடல் ஆரோக்கியம் பெறுகின்றது.

இவைதவிர வாழ்க்கைக்குத் தேவையான மனப்பாங்குகளான சகிப்புத் தன்மை, வெற்றி தோல்விகளை சமமாக மதிக்கும் பண்பு, விட்டுக் கொடுத்தல், தலைமைத்துவம், பொறுமை, தன்னம்பிக்கை, சவால்களை எதிர்கொள்ளல், இலகுவில் எதனையும் சாதிக்கும் மனோவலிமை, உள ஆரோக்கியம் என்பவை விளையாட்டின் மூலம் எம்மை வந்து சேர்கின்றன. வெற்றி என்னும் குறிக்கோளை மனதில் கொண்டு அதனை அடையும் மன உறுதியைப் பெறுகின்றோம். தோற்றாலும் மனம் தளராது தோற்பதும் ஓர் இயல்புதான் என்பதை மனம் புரிந்துகொள்ளும், தோல்வியை ஏற்கின்ற பக்குவம் உண்டாகும். விளையாட்டு ஆர்வத்தை வளர்ப்பதுடன் வாழ்க்கையின் வெற்றிக்கு அவசியமான தன்னம்பிக்கையை ஏற்படுத்தித் தருகிறது. சகபாடிகளுடன் ஒற்றுமையாக இருப்பதன் அவசியத்தையும் விளையாட்டு உணர்த்துகிறது. அத்துடன் குழுவாக செயற்படுதல் மூலம் குழு மனப்பான்மையும் தோற்றம் பெறுகின்றது.

விளையாட்டின் மூலம் ஆளுமை வெளிப்பாடு, விவேகம், சுறுசுறுப்பு போன்ற சிறந்த மனோபக்குவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். எமது சமூகத்தில் முன்னிலையில் வந்துள்ளவர்கள் அனைவரும் விளையாட்டினால் பெற்றுக்கொண்ட பண்புகளாலேயே உயர்ந்த நிலையை அடைந்துள்ளனர். விளையாட்டு மனிதனைப் பூரண மனிதன் ஆக்குகின்றது. இது பிள்ளையின் எதிர்கால வாழ்வு ஒளிவீச உதவும் என்பதை மறந்து விடாதீர்கள்.











## நீர்வை பொன்னையனின் நூல் ஆய்வும் ஏனைய படைப்புக்களின் கண்ணோட்டமும்

நீர்வை பொன்னையனின் 'பாஞ்சான்' சிறுகதைத் தொகுதியின் நூல் ஆய்வும் ஏனைய படைப்புக்களின் கண்ணோட்டமும் நீர்வேலி தெற்கு மாதர்சங்க மண்டபத்தில் கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் நீர்வை கலை இலக்கிய பேரவையால் நடத்தப்பட்டது. துரை எங்கரசு தலைமையில் நடைபெற்ற இந்த நூல் ஆய்வை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச. லலீசன் மேற்கொண்டார்.

ஏனைய நூல்கள் பற்றிய கண்ணோட்டத்தில் நீர்வைப் பொன்னையன் எழுதிய ஒன்பது நூல்கள் கண்ணோட்டத்துக்கு உள்ளாகியன. அந்த வகையில் 115 சிறுகதைகள் கொண்ட ஒன்பது நூல்களின் கண்ணோட்டம் மேற்கொள்ளப்பட்டது .

கிராம அலுவலர் வட கோவை வரதராசன் 'மேடும் பள்ளமும்', 'கால வெள்ளம்', 'உறவு' ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் இ. குணநாதன் 'உதயம்', 'பாதை' 'நிமிர்வு' ஆகிய மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் [illegible] 'வேட்கை', 'நீர்வைப் பொன்னையனின் சிறுகதைகள்' ஆகிய மூன்று நூல்களையும் கண்ணோட்டத்துக்கு உள்ளாக்கினர்.

'அதிதிகள் பார்வையில் நீர்வைப் பொன்னையன்' என்ற தலைப்பில் மருத்துவர் எம்.கே. முருகானந்தன், பொ. சோதிலிங்கம், வை. கருணைநாதன், த. பரராசசிங்கம் ஆகியோர் உரையாற்றினர். (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னவன்



# தென்மராட்சி கல்வி வலய சப்தஸ்வரங்களின் சங்கமம்

# ஏழிசை மாலை 15

இசைக்கு முக்கியமானதும் உன்னதமாகவும் உள்ள அம்சம் இராகமாகும். இராகம் ஸ்வரங்களால் அழகு பெற்று கேட்போர் மனதில் இன்பமூட்டுகின்றது. ஆதி ராகத்தில் இசையின் தொன்மையும் பெருமையும் பேசப்படுகின்றன. தொல்காப்பியத்தில் முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை என்ற ஐந்து வகை நிலங்களுக்குமுரிய பண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலக்கண நூல்களால் அமைக்கப்பட்ட இசை சப்த சுரங்களாக மாறி கேட்போர் மனதைக் குளிர வைப்பதுடன் உலகின் அனைத்துப் பகுதியிலும் அது பரவிவருகிறது. இவை வாழ்வின் அடிநாதம்.இசையானது வாழ்வின் உள்ளார்ந்த உணர்வுகளை தன் வசப்படுத்தும் வல்லமை கொண்டது. தற்காலத்தில் இசையினால் நோய்களைக் குணமாக்கும் முறைகளும் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இசை பல்வேறு இடங்களில் பல்வேறு வகைகளில் ஆதிக்கத்தைச் செலுத்திவருகின்றது. ஆலயங்களில் கூட வழிபாட்டு முறைகளிலும் இசையின் மகத்துவம் உணரப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

தென்மராட்சிப் பிரதேசம் இசை உலகில் பல சேவைகளை வழங்கிய பூமியாகும். இன்றும் கூட பல இடங்களில் இசையின் பெருமைகளை எடுத்தியம்பும் பல்வேறு நற்காரியங்கள் இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றன. தென்மராட்சிப் பிரதேசத்தில் புகழ்பூத்த இசை வல்லுநர்கள் வாழந்துள்ளமைக்கு, அவர்களால் இங்கு நடத்தப்பட்டுள்ள பல்வேறு இசை நிகழ்ச்சிகள் சான்று பகர்கின்றன. திருமதி பூமணி இராசரத்தினம், நடேசன், கி.ஏரம்பமூர்த்தி உள்ளிட்ட இசையாசிரியர்கள் இசையை பரிணமிக்கச் செய்துள்ளனர். இன்றும் கூட சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீவாமதேவன் பிரதேச இசை வளர்ச்சிக்குப் பெரிதும் தன்னாலான சேவைகளை வழங்கி வருகின்றார். இசை உலகுக்கு தென்மராட்சி மக்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர் என்பதை பிரதேசத்தில் உள்ள அறநெறிப் பாடசாலைகள் மூலம் அறியமுடிகிறது .இசைக் கலைஞர்களை வெளிஉலகுக்கு தெரியப்படுத்தும் வகையில் தென்மராட்சி கல்வி வலயத்தினர் மாதாந்தம் அவ்வாறான இசை நிகழ்ச்சிகளைப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் நடத்தி இசையின் மகத்துவத்தை உணர்த்திவருவதுடன், இசைத்துறையில் பணியாற்றக் கூடிய கலைஞர்களை உருவாக்கி வருகின்றனர் என்றால் அது மிகையாகாது. ஓவ்வொரு பாடசாலையிலும் உள்ள இசை ஆசிரியர்கள் மாணவர்கள் மூலம் இசை நிகழ்ச்சிகளை ஏழிசை மாலை என்னும் பெயரில் நடத்தி வருவது பாராட்டத்தக்கது. இந்த நிகழ்வின் 15 ஆவது நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.







பாடசாலைகளில் நடத்தப்படும் மூன்று ஏழிசை மாலை நிகழ்வுக்குப் பின்னர் நான்காவது நிகழ்வு வலயத்தின் நிகழ்வாக அமைவது வழமை. அந்த வகையிலான வலயத்தின் நிகழ்வுதான் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கொடிகாமத்தைச் சேர்ந்தவரும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவியும், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைமாணிப் பட்டம்பெற்ற செல்வி க.யோகேந்திரராஜாவின் இசைக் கச்சேரி இடம்பெற்றது.

ஆயிரம் இசைக்கருவிகள் தமது இசை வடிவத்தை வெளிக்கொணர்ந்தாலும் குரல் வழியாக கிடைக்கும் இசைக்குத்தனிமகிமையுண்டு. பாடகரின் குரல்வளம், ஆண்டவன் கொடுத்த வரம் என்றே கூறவேண்டும். ஆயிரம் இசைக்கருவிகளின் ஒலியை ஒரு தனி மனிதனின் குரல் அடக்கிவிடும் என்பது நாடறிந்த உண்மை .அதீதமான குரல்வளம் அனைவருக்கும் கிடைப்பதில்லை.அவ்வாறான குரல் வளம் பெற்றவர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்துவதுமில்லை அந்த குரல்வளத்தை எவரும் மேம்படுத்த முன்வருவதுமில்லை, என்பது பெரும் குறையாகவே இசைத் துறையைப் பொறுத்த வரையில் காணப்படுகிறது.

அவ்வாறான இனிமையான குரல்வளத்தை நேரில் கேட்கும்போது, அதன் ரசனையை ரசிக்கும்போது தான் ஒருவரின் குரல் வளத்தைத் தெளிவாகக் கண்டுபிடிக்க முடிகிறது.அவ்வாறான குரல்வளத்தைக் கேட்டு ரசிக்கும் பேறு பெற்றமையையிட்டுப் பெருமையடைகின்றேன். 50 வருடங்களுக்கு முன்னர் இசை உலகின் முடிசூடா அரசிகளாகத் திகழ்ந்த எம்.எஸ்.சுப்புலட்சுமி மற்றும் வி.கே. பட்டம்மாள் போன்ற இசைஞானிகளின் குரல் வளத்தை இசைத்தட்டுக்கள் மூலம் கேட்டுப் பரவசமடைந்த நான், இசைத்தட்டுகளில் கேட்ட அதே குரல் வளத்தை நேரில் கேட்டு வியப்படைந்தேன்.அவ்வாறான இனிமையான குரல் வளத்தைக் கொண்ட செல்வி க.யோகேந்திராஜாவின் இசை ஞானம் நிகழ்வைப் பார்த்துக்கொண்டிருந்த அனைவரையும் கவரவைத்தது. தனக்கு வழங்கப்பட்ட நேரத்தை இரத்தினச் சுருக்கமாகக்கொண்டு அனைவரையும் கவரக்கூடிய வகையில் பாடல்களை இசைத்தமையைக் கலந்து கொண்ட அனைத்து ரசிக உள்ளங்களாலும் பாராட்டாமல் இருக்கமுடியாது. அருமையான குரல்.இளவயதில் இவ்வாறான அருமையான பாடல்களை இசைவடிவில் வீழங்கும் செல்வி கஜேந்திராவுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். இவரது பாடல்களுக்கு அணிசேர் கலைஞர்களாக செயற்பட்ட மூத்த விரிவுரையாளர் கலாநிதி லயஞானவாருதி சி.மகேந்திரன் (மிருதங்கம்) சுருதி ஞான திலகம் அ.ஜெயராமன் (வயலின்) ஆகியோரின் இசைவடிவம் செல்வியின் குரலுக்கு பெரும் இதமளிப்பதாக இருந்தது. ஒவ்வொரு நிகழ்விலும் ஒவ்வொரு பாடலுக்கும் தமது திறமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களை மகிழ்வித்தனர் மிருதங்க வித்துவானும் வயலின் வித்துவானும்.

அடுத்து மேடைக்கு அழைக்கப்பட்டது மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலய குழுப்பாடல் ஒன்றுக்கான அணி. இன்றைய காலத்தில் ஒரு நிகழ்வில் மேடையேறுவதென்றால் அணிமணிகள் எத்தனை, ஆடை அலங்காரங்கள் எத்தனை என்று தமது செல்வாக் கைக் காட்ட முயலும் கலைஞர்கள் மத்தியில் மிக எளிமையான உடையில் மேடையில் அமர்ந்த ஏழு மாணவர்களின் இசையும் மனதைக் கவர்ந்தன. அவர்கள் ஒவ்வொருவரும் ஒரே குரலில் பாடியமை பாராட்டத்தக்கது. ஆண்கள் வெறும் பார்வையாளர்களாக இருக்கி றார்கள் என்பதற்கு மாறாக இசையை எவரும் முறையாகப் பயின்றால் சிறப்பாக வழங்க முடியும் என்பதற்கு சான்றாக மாணவர்களின் இசை வடிவம் அமைக்கப்பட்டிருந்தது.

அடுத்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளின் குழப்பாடல் இடம்பெற்றது. ஏழு மாணவிகள் இதில் கலந்து கொண்டனர். இவர்களின் ஒட்டுமொத்த ஒரே குரலில் ஓலித்த காற்றினிலே வரும் கீதம் மற்றும் பாரதியார் பாடல்கள் காதுகளில் கேட்டவண்ணம் உள்ளன. அவ்வளவு அருமையான குரல் இசையாக இது அமைந்திருந்தது.

அடுத்து அயல் பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியைகளின் கூட்டிசை.வயதுகள் வேறுபாடான நிலையில்காணப்பட்ட போதிலும் இவர்களின் குரல்வளம் ஒரே மாதிரி அமைந்திருந்தமை வியப்பைத் தந்தது.இசையின் ஆழத்தை இவ்வாறான நிகழ்வுகளிலேயே காணமுடியும். ஓவ்வொரு பாடலையும் ஒரேவிதமான வகையில் பாடியமை நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் ரசிக்க வைத்தது. அதன் இசையில் மயங்கும் நிலையில் பாடல்களை இசைத்தனர். இவர்கள் ஆசிரியர்களாகக் காணப்பட்டதால் தமது திறமைகளை அருமையாக வெளிப்படுத்தி தம்மால் பல இசை மாணவர்களை உருவாக்கி இசை உலகுக்கு சேவைகளை வழங்கமுடியம் என்பதைத் தமது குரல் வளத்தால் நிரூபித்தனர்.

வழமைபோல் வலயத்தின் ஏழிசை மாலை நிகழ்வாகக் காணப்பட்டபோதிலும் வலயக் கல்விப் பணிப்பாளர் பார்வையாளராக கலந்து கொண்டு இசையை ரசிக்க பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமை வகித்தார்.

நிகழ்வின் சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் இசையுடன் தொடர்புடைய ஆசிரியப் பணியைத் தொடர்வதால் அவர்களின் உரைகள் இசையின் மகத்துவத்தைக் குறிப்பிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிளாஸ்ரிக் பூக்கள்





**இது புதுசு**

அலங்காரத்துக்குப் பயன்படும் பெரிய பிளாஸ்ரிக் பூக்கள் அறிமுகமாகியுள்ளன. வெல்வெட் துணியில், மினுக்கல் வேலைப்பாடுகளுடன் இவை உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு பூச்செண்டின் விலை 300 ரூபா தொடக்கம் 400 ரூபா ஆகும்.



## நேற்றைய கடலுணவு

### விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | – | – |
| பாரை | 550 | 500 | 500 | 650 | 700 | 530 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 700 | 500 | 700 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 400 | 200 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 500 | – | – |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 500 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | – | 400 |
| திரளி | 300 | 200 | 200 | 200 | 200 | 200 | 300 |
| நகரை | 250 | 200 | – | 300 | 300 | 200 | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 150 | – |
| ஓட்டி | 300 | 150 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 350 | 300 | – | 200 |
| மதனம் | 150 | 200 | 180 | – | 250 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 200 | 250 | 400 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | – | 300 | 200 | 200 |

## ஆரோக்கிய சமையலுக்கு...

* கடையிலிருந்து பிளாஸ்ரிக் கவரில் வெண்ணெய் வாங்கி வந்தால் அப்படியே குளிர்சாதனப் பெட்டியில் இரண்டுமணி நேரம் வைத்திருந்து பின்னர் எடுத்தால் கையில், கவரில் வெண்ணெய் ஒட்டவே ஒட்டாது.
* ரவையை வெறும் சட்டியில் போட்டுச்சிவக்க வறுத்து ஆறவிட்டு கொட்டி வைத்துக் கொண்டால், வண்டு வராமல் இருக்கும். உப்பு மா, கேசரி செய்ய வேண்டுமென்றாலும் உடனே எளிதாகச் செய்து விடலாம்.
* தக்காளியை சிறிது வேகவிட்டுத் தோல் உரித்து மிக்ஸியில் மெதுவாக அரைத்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் கொண்டால் (உப்பு, மிளகாய்ப்பொடி, மிளகுத் தூள் சேர்த்து கொதிக்கவிட்டு பின் ஆற வைத்து) தக்காளி சோஸாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம். தக்காளி இல்லாத சமயத்தில் சாம்பார், ரசத்துக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



## நாளை

**ஆனி-23**

வியாழக்கிழமை - 07.07.2016
திதி: திருதியை பி.ப.03.18 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.இ.08.09 வரை
ராகுகாலம்: 01.28-02.58 வரை
சுபநேரம்: 07.28-08.58 வரை

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 160 | 80 | 120 | – | 40 |
| கத்தரி | 100 | 80 | 120 | 120 | 100 | 120 | – | 60 |
| கரட் | 200 | 200 | 250 | 140 | 200 | 240 | – | 180 |
| மரவள்ளி | 120 | 80 | 100 | 100 | 100 | 100 | – | 50 |
| பயிற்றை | 100 | 80 | 100 | 100 | 120 | 100 | – | 80 |
| பாகல் | 200 | 80 | 220 | 280 | 200 | 240 | – | 240 |
| கருணைக்கிழங்கு | 150 | 120 | 140 | – | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 90 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 120 | 160 | 140 | 160 | – | 100 |
| பூசணி | 70 | 120 | 140 | 140 | 110 | 140 | – | 100 |
| தக்காளி | 180 | 240 | 260 | 160 | 260 | 250 | – | 160 |
| வாழைக்காய் | 100 | 80 | 120 | 120 | 140 | 140 | – | 50 |
| கீரை | 15 | 30 | 30 | 20 | 20 | 20 | – | 10 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 35 | – | 10 |
| பச்சை மிளகாய் | 500 | 600 | 600 | 600 | 500–600 | 600 | – | 45 |
| புடோல் | 60 | 80 | 80 | 80 | 60 | 100 | – | 60 |
| கோவா | 180 | 140 | 160 | 140 | 140 | 100 | – | 120 |
| வெண்டி | 120 | 80 | 120 | 220 | 100 | 120 | – | 60 |
| போஞ்சி | 200 | 180 | 240 | 240 | 200 | 240 | – | 20 |
| லீக்ஸ் | 150 | 140 | 160 | 160 | 140 | 240 | – | 190 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 25–30 | 30 | 28– 30 | – | 2 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | – | 12 |
| தேசிக்காய் | 200 | 160 | 160 | 150 | 150 | 200 | – | 10 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 15 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 320 | 200 | 240 | 340 | 240 | – | 25 |
| இராசவள்ளி | 160 | – | – | 300 | – | 180 | – | 12 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 400 | 250 | 300 | 280 | – | 30 |

## தேவையானவை

கோதுமை மா - ஒரு கப்
கடலைப் பருப்பு - ஒரு கப்
வெல்லம் - கால் கிலோ
தேங்காய் - ஒன்று
ஏலக்காய் - 4
நெய் - சிறிது
நல்லெண்ணெய் - சிறிதளவு
மஞ்சள் தூள் - ஒரு சிட்டிகை
சீனி - ஒரு தேக்கரண்டி

## வெல்லப் போளி



## செய்முறை

கோதுமை மாவுடன் மஞ்சள் தூள், உப்பு, சீனி, நெய் சேர்த்துத் தண்ணீர் ஊற்றி ரொட்டி மாப்போல சற்றுத் தளர்ச்சியாகப் பிசைந்து வைக்கவும். பிசைந்தபின் மேலே சிறிது நல்லெண்ணெயை ஊற்றி 3 மணி நேரத்துக்கு அப்படியே வைத்திருக்கவும். கடலைப் பருப்பை முக்கால் பதத்துக்கு வேகவைத்து எடுக்கவும். இதனுடன் வெல்லம் சேர்த்துத் தண்ணீர் தெளிக்காமல் மிக்ஸியில் ஒன்றும் பாதியுமாக அரைத்து எடுக்கவும். அதில் உப்புச் சேர்த்துக் கலக்கவும். தேங்காயைத் துருவி நெய்யில் வதக்கி அரைத்து வைத்துள்ள பருப்பு, வெல்லக் கலவையுடன் சேர்த்து சிறிது ஏலக்காயையும் சேர்த்துக் கலந்து சிறு சிறு உருண்டைகளாய் உருட்டி வைத்துக் கொள்ளவும். அதன் பின்னர் பிசைந்து வைத்த மாவை எண்ணெய் தடவிய பூரிப் பலகையின் மேல் சிறிது சிறிதாக உருட்டி எடுத்து கையால் விரித்து விடவும். அதன் நடுவில் கடலைப்பருப்பு, வெல்லம், தேங்காய்ப்பூ உருண்டையை வைத்து மூடவும். மீண்டும் அதை கையால் தட்டி அல்லது கட்டையால் உருட்டி விரித்து விடவும். இதனைத் தோசைக் கல்லில் போட்டு, நெய் ஊற்றி இருபுறமும் சிவந்து வெந்ததும் எடுக்கவும். சுவையான போளி தயாராகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | 8 | 5 | | | |
| | | | | 6 | | 8 | | 4 |
| | | | 2 | | | 9 | 5 | 7 |
| | | | | | | 7 | 8 | 1 |
| | | | | | | | | |
| 4 | 9 | 1 | | | | | | |
| 5 | 2 | 3 | | | 7 | | | |
| 1 | | 6 | | 9 | | | | |
| | | | 1 | 5 | | | 2 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 6 | 1 | 2 | 9 | 8 | 7 | 3 |
| 7 | 2 | 9 | 8 | 4 | 3 | 6 | 5 | 1 |
| 8 | 1 | 3 | 6 | 7 | 5 | 2 | 9 | 4 |
| 2 | 5 | 7 | 4 | 3 | 6 | 9 | 1 | 8 |
| 1 | 3 | 4 | 9 | 8 | 2 | 5 | 6 | 7 |
| 6 | 9 | 8 | 7 | 5 | 1 | 4 | 3 | 2 |
| 3 | 6 | 2 | 5 | 1 | 4 | 7 | 8 | 9 |
| 4 | 7 | 5 | 3 | 9 | 8 | 1 | 2 | 6 |
| 9 | 8 | 1 | 2 | 6 | 7 | 3 | 4 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3x3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றைப் பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




உன் அறிவு பாத்து நான் வியக்கிறேன்!



உண்மை விளம்பி

கண்மூடித்தனமான தேடலெல்லாம் இளமை இருக்கும்வரை மட்டுமே . காலம் செலவான பின் உண்பது செரிப்பதே சாதனையாகி விடுகிறது.

# கௌதமின் வித்தியாசமான இயக்கம்



சிம்புவின் 'அச்சம் என்பது மடமையடா' படத்தின் இறுதிக்கட்ட வேலைகளில் இருக்கும்போதே, தனுஷுடன் இணைந்து 'எனை நோக்கிப் பாயும் தோட்டா' படத்தின் வேலையையும் ஆரம்பித்துவிட்டார் இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன். தற்போது இந்தப் படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்றுவருகிறது. ஏற்கெனவே துருக்கியில் பாடல் காட்சி ஒன்றையும் படமாக்கியுள்ளார் கௌதம்.

கௌதம் படம் என்றாலே, அதில் ஆங்காங்கே முக்கிய நட்சத்திரம் ஒன்றின் குரல் ஒலித்துக்கொண்டே இருக்கும். ஆனால், 'எனை நோக்கிப் பாயும் தோட்டா'வைப் பொறுத்தவரை மொத்தப் படமும் குரலை மையமாக வைத்து நகரும்படி திரைக் கதையை அமைத்திருக்கிறாராம். முதல் பாதியில் காதல், இரண்டாம் பாதியில் அதிரடி என நகரும் இந்தப் படத்தில் நாயகி மேகா ஆகாஷுக்கு சினிமா நடிகை பாத்திரமும், நடிகர் தனுஷுக்கு இரண்டு பாத்திரங்களும் கொடுத்திருக்கிறார் கௌதம். இந்தப் படத்தில் இதுவரை தனுஷ் தோன்றாத புதுவித வேடத்தில் நடிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மனைவி:
என் சாதகப்படி எனக்கு அறிவு அதிகமாம்.
கணவன்:
இப்ப புரியுதா, நான் ஏன் சாதகத்தை நம்புவதில்லை என்று!!



**மேடம் :** உற்சாகமான மனநிலையில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் அதிகரிக்கும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருளை வாங்குவர். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**இடபம் :** பணிகளில் கவனக் குறைவாகச் செயற்பட நேரிடலாம். தொழிலில் குறுக்கிடும் தடைகளைச் சரிசெய்வது நல்லது. பிறருக்குத் தெரியும்படி, அதிக செலவு செய்ய வேண்டாம். உடல் நலனுக்காக மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம்.

**மிதுனம் :** உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை நிறைவேற்றுவீர்கள். வருமானம் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**கடகம் :** சுய இலாபத்துக்காகச் சிலர் உங்களுக்கு உதவ முன்வருவர். தொழிலில், விற்பனை அதிகரிக்கக் கூடுதல் முயற்சி தேவைப்படும். பெண்கள் வீட்டுச் செலவைச் சமாளிக்கத் திணறுவர்.

**சிங்கம் :** திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். மனதில் புத்துணர்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் உயரும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி :** அந்தஸ்து மிக்கவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழிலில், எதிர்பார்த்த ஆதாயம் வர வாய்ப்புண்டு. குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள். பெண்கள் ஆடை, அணிகலன் வாங்குவர்.

**துலாம் :** எதிரியிடமிருந்து சமயோசிதமாக விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். நிர்ப்பந்தத்தின் பேரில் கடன் வாங்க வேண்டாம்.

**விருச்சிகம் :** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் புதிய இனங்களில் செலவு ஏற்படலாம். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**தனுசு :** மனதில் உற்சாகமும் செயலில் நேர்த்தியும் உருவாகும். தொழில், வியாபாரத்தில், பணவரவு அதிகரிக்கும். சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு, விரும்பிய பதவி கிடைக்க வாய்ப்புண்டு.

**மகரம் :** எதிரியும் விலகிச் செல்லும் சூழ்நிலை உருவாகும். தொழிலில், எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பணக்கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கும்பம் :** குடும்பச் சிரமம் குறித்து, பிறரிடம் பேச வேண்டாம். தொழிலில், குறுக்கிடும் தடைகளைச் சரிசெய்வது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**மீனம் :** நண்பரின் அலட்சியமான பேச்சு, வருத்தம் அளிக்கலாம். தொழில், வியாபாரத்தில், வருமானம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொத்துக்குண்டு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முறைப்பாடுகளில் மாத்திரமே இவை பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவை வீசப்பட்டாலும்கூட பன்னாட்டு சட்டத்துக்கு முரணானது இல்லை என்றார்.

கொத்துக் குண்டுகள் இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையே ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் பரணகமவின் கருத்து வெளிக்காட்டுகிறது.

இது தொடர்பில் பக்கச் சார்பற்ற பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இதனை வலியுறுத்தினார். உண்மையில் நல்லிணக்கத்தைக் கொண்டுவரவேண்டும் என அரசு நினைக்குமானால், இது பற்றி பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடத்தி, சகல மக்களுக்கும் உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

'கோத்தா முகாம்கள்' என்ற சித்திரவதை முகாம்கள் இருப்பதாக நாம் சுட்டிக் காட்டிய போதும் அவை மறுக்கப்பட்டன. ஐ.நா. அதிகாரிகள் இங்கு வந்தபோது அவற்றைப் பார்வையிட்டிருந்தனர். இதுபோன்ற விடயங்களில் அரசு பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்துவதே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழிவகுக்கும் - என்றார்.

(வ-5)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் - மகேந்திரராசா

(மகேந்திரம் மாஸ்டர்)



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்டிருந்த சுப்பிரமணியம் மகேந்திரராசா (இளைப்பாறிய ஆசிரியர்) 02.07.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்லமுத்துவின் அன்புக் கணவரும், கிருபாகரன் (கனடா), கிரிகரன் (ஐக்கிய இராச்சியம்), கருணாகரன் (கனடா) ஆகியோரது அன்புத் தந்தையாரும், மாதவி, யாழினி, கல்பனா ஆகியோரது அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பண்டிதர் வேலுப்பிள்ளை (சு.வே), தங்கலட்சுமி, கண்மணி, நடராசா மற்றும் சரஸ்வதி ஆகியோரது அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், முருகையா, வீரசிங்கம் மற்றும் மனோரஞ்சிதம், நாகமுத்து, முத்துராசா, காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் அருளானந்தம், காலஞ்சென்றவர்களான நடேஸ்வரன், தயாளன் ஆகியோரது அன்பு மைத்துனரும், விசாகன், ஓவியா, வைசாலி, வைஷிகா, சஹானா, சாயனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிணமுருங்கை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்கக்கடை ஒழுங்கை,**
**கேரதீவு வீதி, நாவற்குழி.**
**தொ.பே.021 205 0959**

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### கலாபூஷணம் லெட்சுமணன் கெங்காதரன் ஆச்சாரி



யாழ்ப்பாணம், சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லெட்சுமணன் கெங்காதரன் ஆச்சாரி நேற்று (05.07.2016) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லெட்சுமணன் ஆச்சாரி - முல்லையம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் ஆச்சாரி - லட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வசந்தமல்லிகாவின் அன்புக் கணவரும், அன்னலட்சுமி, காலஞ்சென்றவர்களான பக்கீர்சாமி, வேணுகோபால் ஆச்சாரி மற்றும் அம்புஜம், கமலவள்ளி, ராஜேஸ்வரி, ஜெகநாதன் ஆச்சாரி, மகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவலிங்கம், காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் சித்திராதேவி, சத்தியலிங்கம், சண்முகலிங்கம் (அப்புக்குட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜிதகலா, லதா, சுதாகர், சிவகௌரி, மணிமேகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிநாத், கோலத்துளசி, கஜன், நிதூஷன், சஜீவன், விதுஷன், தர்ஷினி, நிகேதினி, பிரசாத், பிரவீனா, பிரியங்கா, சிந்துஜா, தேவசுகன்ஜா, சிந்துஜா, செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2016) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**314, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம். (சிவன்கோயிலடி)**

(J/2672)
(11,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 222 8415, 077 248 7843**

## மரண அறிவித்தல்



**தோற்றம்**
**23.09.1956**

**மறைவு**
**03.07.2016**

### செல்லையா குணபாலசிங்கம்

### (பொன்ராசா)

### (காணிவெளிக்களப் போதனாசிரியர் - பிரதேச செயலகம் - ஒட்டுசுட்டான்)

மன்னகுளம், மாங்குளத்தைப் பிறப்பிடமாகவும், முதலாம் வட்டாரம், முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குணபால சிங்கம் 03.07.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீ.செல்லையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னமலரின் (ஆசிரியை- மு/கலைமகள் வித்தியாலயம்) அன்புக் கணவரும், தர்சனின் (பேராதனைப் பல்லைக்கழகம்) அன்புத் தந்தையும், ஜெ.பரமேஸ்வரி (மாமூலை), செ.தனபாலசிங்கம் (கச்சேரி, முல்லைத்தீவு), செ.மாணிக்க நடராஜா (வ/தமிழ் மத்திய வித்தியாலயம்).செ.ஜெயபாலசிங்கம் (அதிபர்), செ.சூரியபிரகாசம் (லண்டன்), செ.பாலகிருஷ்ணன் (அதிபர்), செ.கிரிஜா (ஆசிரியை) ஆகியோரின் சகோதரரும், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற கந்தசாமி, கனகையா (அமெரிக்கா), தர்மலிங்கம் (அமெரிக்கா), காலஞ்சென்ற இராசமணி ஆகியோரின் அன்பு மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2016) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் நாவற்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(c/24112)
(11,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சிவசம்பு மாணிக்கவாசகர்



பிறப்பு 07.03.1927 இறப்பு 04.07.2016

செம்மலை, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு மாணிக்கவாசகர் 04.07.2016 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், வையந்திமாலா, விஜயகுமார் ( ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்), காலஞ்சென்ற ஜெயக்குமார் (பிரான்ஸ்), இராசகுமார் (ஓய்வுபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்), காலஞ்சென்ற அபிமன்னகுமார் (பிரதேசசபை உத்தியோகத்தர்), ஜீவகுமார் (லண்டன்), உதயகுமார் (அதிபர்), குசலகுமார் (லண்டன்), மோகனகுமார் (லண்டன்), ரதிக்குமார் (ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற பொன்னம்பலம், வசந்தராணி, ஜெயராணி (பிரான்ஸ்), அனந்தநாயகி, இந்திராணி, இராஜசௌந்தரி, நகுலா (லண்டன்), ஜெயந்தினி (லண்டன்), மணிமாலா, நடேஜினி (ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும், மாலதி (பிரான்ஸ்), வசந்தி, சுமதி, அன்பழகன் (பிரான்ஸ்), நவனீதன் (ஐ.நா. அதிகாரி லைபீரியா), நவரூபன் (நோர்வே), மதிவதனன் (நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்), மதிவண்ணன் (லண்டன்), மதிமாறன், விஜயன், கஜன், ஜெயன் (பிரான்ஸ்), கஸ்தூரி (நோர்வே), துசியந்தன் (லண்டன்), வித்தியா (பிரான்ஸ்), தர்சன், சம்சியா, ஜதுர்சியா, விதுசியா, கஜானன், கீர்த்தனா, சேரலாதன், இங்கிதன்,இனிதினி, அவனி, பிரான்சிகா, தர்சிகா, பிரதியா (லண்டன்), சாத்வீகன், லுசிந்தன், பவதாரணி, அஜிந்தன், கிருந்திகன், ருலக்சன் (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேரனும், அருந்ததி,பானுமதி, ரவிவர்மன், தமியா, தனுசன், தஞ்சுதா, துஸ்யந்தி, சகிலன், நிறோஜன், இனியவன், சாதுஜன், ஆத்விகா,இலக்கியன், துலக்சி, காவியன், அபிதன் ஆகியோரின் அன்புப் பூட்டனும், அகரா, நிகிதா,முகிலன், சுருதி, ஜாசுவன் ஆகியோரின் கொப்பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2016) வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(K/96)
(11,17,18)

தகவல்: குடும்பத்தினர்.

077 321 1180

**UNIVERSITY COLLEGE OF JAFFNA**
**UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY**
**MINISTRY OF SKILLS DEVELOPMENT AND VOCATIONAL TRAINING**

## VACANCIES

Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna.

### 1.LECTURER (PROBATIONARY) IN MECHATRONICS TECHNOLOGY

**Qualifications:**

1. A Degree with specialization in a relevant subject with First Class or Second Class (Upper Division) Honours.

**OR**

2. A degree with specialization in a relevant subject with Second Class (Lower Division) Honors and at least 01 year of experience in teaching /research/professional work in recognized mercantile establishment /postgraduate studies in a recognized University or Higher Education Institution;

**OR**

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other general degree with at least Second Class Honors,

**AND**

(b) A Postgraduate Degree with duration of at least 02 academic years in the relevant subject with a research component by way of thesis/dissertation;

**OR**

4. (a) A Degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka in the relevant subject.

**AND**

(b) One year Master Degree in the relevant subject or equivalent further professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka.

**AND**

(c) Five (5) years professional experience after graduation or after securing professional qualification given in 4(a).

**OR**

5 (a) A degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by Act of parliament of Sri Lanka in the relevant subject.

**AND**

(b) Eight (8) years professional and/ or teaching experience after graduation or after securing professional qualification given in 5(a)

**Age Limit** - 22 – 60yrs
**Selection Procedure:** Through an Interview.
**Salary Scale:** U-AC 3 (IV) - 2006A- Rs. 27,775 – 10 x 645 - 13 x790 – 8 x 1050 – 52895 p.m
**Nature of Appointment** :Permanent with entitlement to EPF & ETF

### 2. DEMONSTRATOR – BUILDING SERVICES TECHNOLOGY

**Qualification:**
o A Degree in the relevant field
**Age Limit**- 22 – 45yrs
**Selection Procedure:** Through an Interview.
**Salary Scale:** U-AC-1 2006A Rs.21,370 p.m (Fixed)
**Nature of Appointment** :Temporary with entitlement to EPF & ETF


**Other Government Approved Allowances**

- Specimen Application form and further details are available atwww.ucj.lk. Duly filled applications forms indicating academic and professional qualifications should be sent to **"The Assistant Registrar, University College of Jaffna, No 29, Brown Road, Kokuvil, Jaffna"** by Registered post on or before **15thJuly 2016.**
- Desired **post applied** should indicate clearly on the top left hand corner of the envelope
- Applicants from Higher Education Institutions, Government Departments and Government Corporations should apply through the Heads of such Institutions. Applications which do not conform to this requirement will be rejected. Such applicants are strongly advised to submit an **advance copy** to the address given above.
- Only short listed applicants will be called for the interview.

**Assistant Registrar**
**University College of Jaffna**
**06.07.2016**

# மரண அறிவித்தல்

## பண்டா இராசவேல்



மண்கும்பாண் 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 37/26, 1ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, (அன்னசத்திரலேன்) யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டா இராசவேல் நேற்று (05.07.2016) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டா மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி பவளம் தம்பதியரின் அன்பு மருமகனும், ரூபநந்தினியின் (சுசி) பாசமிகு கணவரும், வடிவேல், பரமேஸ்வரி (கமலம்), ராஜேஸ்வரி (குமுதம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரி, குணரெத்தினம் (ரவி), கந்தசாமி (ரவி), ரூபரஞ்சினி (விஜி- பிரான்ஸ்), ரூபரஞ்சிதன் (பாபு-பிரான்ஸ்), ரூபஜெயந்தன் (ராஜா), ரூபகாந்தன் (பிரபா), , ரூபரஜனி (ராஜி-கனடா), ரூபராஜன் (டினேஸ் -பிரான்ஸ்), ஆகியோரின் மைத்துனரும், சந்திரசேகரம் (ஜெயராஜ்- பிரான்ஸ்), சிவாஞ்சலி (பிரான்ஸ்), வாசுகி, கவிதா, பகீரதன் (ஜெயா -கனடா), சாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2016) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்கும்பாண் சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

37/26, 1ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
(அன்னசத்திர லேன்), யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறைபாடுகளுடன்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைச் சீர்செய்யுமாறு வாகனப் பரிசோதகர் அறிக்கையிட்டார்.

வாகன உருவமைப்பு (பொடி) உக்கிய நிலையில் காணப்படுகிறது, வாகன நிறம் மங்கியுள்ளது, விபத்துக்குப் பின்னர் உரிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை, இருக்கைகள் அசுத்தமாக உள்ளன, வாகனத்தின் முன்பகுதியில் தேவையற்ற பொருள்கள் பொருத்தப்பட்டுள்ளன ஆகிய குறைபாடுகள் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

ஆனால் அந்த அறிக்கையைப் பொருட்படுத்தாமல் வாகனச் சாரதி அந்த அரச வாகனத்தைப் பயன்படுத்தினார். குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு அறிக்கையிட்டபோதிலும், அவற்றைச் சீர்செய்யாமல் வாகனத்தைப் பயன்படுத்தியதாக வாகனச் சாரதி மீது குற்றம் சாட்டப்பட்டது. சாரதிக்கு எதிராக மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவு பரிசோதகரினால் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஊடாக சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போது குறித்த வாகனத்துக்குரிய திணைக்களத் தலைவரும் வாகனச் சாரதியும் மன்றில் முன்னிலையாகினர்.

குறித்த வாகனம் திருத்தவேலைக்காக கராஜில் விடப்பட்டுள்ளது என்று திணைக்களத் தலைவரால் மன்றில் அறிவிக்கப்பட்டது. அதனையடுத்துத் திணைக்களத் தலைவரையும் வாகனச் சாரதியையும் எச்சரிக்கை செய்த நீதிவான், அவர்களை வழக்கிலிருந்து விடுவித்தார்.

படையினர், பொலிஸார், உட்பட அரச திணைக்களம் எதுவாக இருந்தாலும்சரி அரச வாகனங்கள் குறை பாடுகளுடன் வீதியில் பயன்படுத்த முடியாது. அவ்வாறு ஈடுபட்டால் அவற்றுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படும் பட்சத்தில் உரிய திணைக்களங்கள் வாகனங்களைத் திருத்துவதற்குரிய நிதியை வழங்குவார்கள் எனப் பொலிஸாருக்கு கட்டளையிட்டார் நீதிவான். (வ-4,9)

## பிரதி அமைச்சர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட பெற்றோரை விடுதலை செய்து தம்மைக் கைதுசெய்யுமாறு மத்துகம பொலிஸாரிடம் பிரதியமைச்சர் தேவரப்பெரும கோரிக்கை விடுத்தார். இதையடுத்து, அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்த பொலிஸார், அதன் பின்னர் கைதுசெய்து மத்துகம நீதிவான் மன்றில் முற்படுத்தினர். இதன்போதே அவரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். மீகாதென்ன பாடசாலையில் ஆரம்ப பிரிவு மாணவர்களை இணைத்துக் கொள்ளும்மாறு போராட்டம் நடத்திய பிரதியமைச்சர், அதன் பின்னர் தூக்கிட்டு தற்கொலை செய்ய முயற்சித்தார். (வ-4,5)

(மற்றொரு செய்தி 11ஆம் பக்கத்தில்)

## கீரிமலைத்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்களை காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனக் காணியில் குடியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு அவற்றை துப்புரவு செய்யும் செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குடியேற்றப்படும் மக்களுக்கு, அந்தப் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தத் துறைமுகம் கீரிமலை புண்ணியபூமி பிரதேசத்தினுள் வருவதனால், துறைமுகம் அங்கு அமைவதை விரும்பவில்லை என்று இந்து அமைப்புக்கள் தெரிவித்தன.

இந்த விடயம் யாழ்.மாவட்டச் செயலாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. கீரிமலை புண்ணியபூமி பிரதேசத்திற்கு வெளியில், துறைமுகத்தை நிர்மாணிக்க மாற்று ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. (வ-5)

## வல்லை – அராலி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 25ஆம் திகதி விடுவிக்கப்பட்டது. வல்லை – அராலி வீதியில், கட்டுவன் சந்திப் பகுதி இந்த விடுவிப்பில் உள்ளடக்கப்படவில்லை. இதற்குப் பதிலாக, பொது மக்களின் தனியார் காணியின் ஊடாகப் பாதை அமைக்கப்பட்டது.

காணிகளின் உரிமையாளர்கள், பாதை அமைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். தமது காணியை பாதையாகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க முடியாது என்று குறிப்பிட்டனர். இந்த விடயங்கள் தொடர்பில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியுடன், அதிகாரிகளால் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. இதன் போது, கட்டுவன் சந்தி வரையிலான வீதியை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் சாதகமான முடிவை வழங்கினர். விரைவில் அந்த வீதி விடுவிக்கப்படும் என்று யாழ்.மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5)




## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

### திருமதி அன்னம்மா பரமநாதன்

(செல்லாக்கா, மில்லர் அக்கா)



தோற்றம் 1944 . 02 . 08

மறைவு 2016 . 07 . 05

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா பரமநாதன் (செல்லாக்கா, மில்லர் அக்கா) நேற்று (05.07.2016) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் பரமநாதனின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான ஐயாத்துரை - பாக்கியம் தம்பதியரின் இரண்டாவது புத்திரியும், காலஞ்சென்றவர்காளான கந்தையா -மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், சத்தியதாசன், ஜெயதாசன் (பிரான்ஸ்), ஜெயரஞ்சினி, பாலரஞ்சினி, காலஞ்சென்ற நிமலதாசன் (பிரான்ஸ்) மற்றும் பிரஸ்ரீரஞ்சினி (பிரான்ஸ்), சிவரஞ்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், தனபாலசிங்கம், பத்மலோசினி, பிரகலதன், சசிகலா (பிரான்ஸ்), சண்முகம் (பிரான்ஸ்) சுபாநந்தினி (பிரான்ஸ்), பார்த்தீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற தட்சணாமூர்த்தி (பிரான்ஸ்) மற்றும் தர்மகுலசிங்கம் (பிரான்ஸ்), அன்னலட்சுமி, குமாரகுலசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கால்சென்றவர்களான கருணாநிதி, தட்சணாமூர்த்தி (பிரான்ஸ்), இந்திராணி தர்மகுலசிங்கம் (பிரான்ஸ்), அரியமலர் குமார குலசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கந்தசாமி ஆகி யோரின் மைத்துனியும், டினோஜன் (பிரான்ஸ்), தனோஜன், லக்ஷிகா, வினோக்ஷியா, பிரணவன், பிரவீனன், பிரதுக்ஷன், துளசிகன், சந்தோஷ், ஜசிந்தன், ஜெனுஷன், சஞ்சய், நிலோஷ், நிருஷன், நிருஷிகா, ஜெனனி, அரிஷ் ஆகியோரின் பாட்டியும், சௌந்தர்ராஜன் (பிரான்ஸ்), தர்மராஜா (சுவிஸ்), மோகனராஜா (பிரான்ஸ்), சிவகுமார், கிருஸ்ணகுமார் (பிரான்ஸ்), தனலட்சுமி, தேவராஜா, பாரதி தேவராசா ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சண்டிலிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### தங்கமுத்து முருகேசு




கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து முருகேசு நேற்று (05.07.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் முருகேசுவின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும் தவமலர், (ஓய் வுபெற்ற ஆசிரியர்), ஜெயதரன் (ஓய்வு பெற்ற அதிபர்), ஜீவமலர், காலஞ்சென்ற ஜெயக்குமார், லதாமலர், ஜெயச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.07. 2016) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 231 6577

### நாகலிங்கம் கந்தசாமி



யாழ் தச்சன் தோப்பு கைதடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கந்தசாமி கடந்த (03.07. 2016) ஞாயிற்றுக்கிழமை சிவபதம டைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா- கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், நாகபூபதியின் அன்புக் கணவ ரும், சிறீகரன் (லண்டன்), சுதாகரன் (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), பிரதீபா (கனடா), ரஜிதீபா (லணடன்) ஆகி யோரின் பாசமிகு தந்தையும், சிவபாக்கியம், காலஞ்சென்ற இரத்தி னேஸ்வரி, காலஞ்சென்ற பொன்னுத்துரை, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, ஜெகதீஸ்வரன், யோகேஸ்வரன், யோகாம்பிகை, சிவனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பூங்கோதை, கிரிஜா, மாலதி, கருணாகரன், மதன் மோகன் ஆகியோரின் மாமனாரும், காயத்திரி, கார்த்திகன், சாரு ஜன், பிரித்திகன், கபிசன், கெரிஷா, தஸ்வினி, கரிஷினி ஆகி யோரின் அன் புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2016) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வத்தளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
011 2981855,
077 5340825

தகவல்: குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### கலாபூசணம் லெட்சுமணன் கெங்காதரன் ஆச்சாரியார்

பிறப்பு 18.02.1944
இறப்பு 05.07.2016

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாஸ்கரன் ஆச்சாரி, கஜேந்திரன் ஆச்சாரி
பாஸ்கரன் சிற்பாலயம்,479, கஸ்தூரியார் வீதி, யாழ்.

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### சின்னப்பிள்ளை வேலுப்பிள்ளை



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை வேலுப்பிள்ளை 106 ஆவது வயதில் நேற்று (05.07. 2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ் சென்ற சங்கரப்பிள்ளை வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-நாகாத்தை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, அன்னப்பிள்ளை, அம்பலவாணர், அன்னமோனை ஆகியோரின் சகோதரியும் குணரத்தினம், ச.வே.பஞ்சாட்சரம், பரமேஸ்வரி, ஞானேஸ் வரி, கம லேஸ்வரி, ஈஸ்வரி, வைகுந்தவாசன் ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற பாலாம்பிகை மற்றும் விவேகானந்த சிவம், கார்த்திகேசு, சண்முகநாதன் , தவராசா, திருநா வுக்கரசு, இரட்ணேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.07.2016) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"வேல்மனை"
இணுவில் மேற்கு,
இணுவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப்பிள்ளைகள்.

திருமதி

### தங்கலட்சுமி முருகேசு

இணுவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கலட்சுமி முருகேசு நேற்று (05.07.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்ற முருகேசு (ஓய்வு பெற்ற பதில் முகாமையாளர் இலங்கை வங்கி) அன்பு மனைவியும் கிருபாகரன்(கனடா), தவராணி, லலிதாதேவி (கனடா), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஞானேஸ்வரி காலஞ்சென்ற தியாக ராசா மற்றும் செல்வலட்சுமி(ஓய்வுபெற்ற ஆசி ரியை ) காலஞ்சென்ற கமலாதேவி, விமால தேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோ தரியும் கலாறஜனி(கனடா), சூரியகுமாரன்( ஓய்வு பெற்ற பிரதி பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்களம்), தெய்வேந்திரன்(கனடா), தயாளினி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆதித்தன், ஆதித்யா, செந்தூரன், மதுரன், கிருஷன், அனுஷன், மாதுளா, மாதுளன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

K.K.S வீதி,
இணுவில்.

தகவல்:
மகள் தவராணி
சூரியகுமாரன்

077 492 5974 , 021 224 2053


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிர்சா - கிங்கிஸ் இணை விம்பிள்டனில் முன்னேற்றம்

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் தொடரில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியது மிர்சா - கிங்கிஸ் இணை.

பெண்கள் இரட்டையர் பிரிவில் முதல்தரக் கூட்டணியான இந்தியாவின் சானியா மிர்சா - சுவிற்சர்லாந்தின் கிங்கிஸ் இணையை எதிர்த்து ஜப்பானின் ஹோசுமி மியூ கட்டா இணை மோதியது. ஆட்டத்தின் முதல் செற்றை 6:3 என்று கைப்பற்றியது மிர்சா - கிங்கிஸ் இணை. இரண்டாவது செற்றிலும் வெற்றிபெற்றால் நேர் செற்றில் வெற்றி பெறலாம் என்ற நிலையில், அந்தச் செற்றையும் அவர்கள் 6:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி, 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர். (ம)






## ஜேர்மனி - பிரான்ஸ் மோதல்; ஐ.எஸ். அமைப்பு அச்சுறுத்தல்

யூரோ கிண்ணத் தொடரில் பிரான்ஸ் - ஜேர்மனி அணிகளுக்கு இடையில் நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தை ஐ.எஸ். அமைப்பினர் தமது இலக்காகக் கொண்டிருக்கலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

நடப்பு வருட யூரோ கிண்ணத் தொடர் பிரான்ஸின் பரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது. தொடர் அரையிறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இரண்டாவது அரையிறுதி ஆட்டம் ஜேர்மனி - பிரான்ஸ் அணிகளுக்கு இடையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெற வுள்ளது. இந்த ஆட்டம் சர்வதேச அளவில் பெரிதும் எதிர்பார்க்கப்படும் ஆட்டமாக உள்ளது. கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்தை வென்று உலகச் சம்பியனாக வலம்வரும் ஜேர்மனியை எதிர்த்து பிரான்ஸ் சொந்த மண்ணில் களமிறங்குகிறது. இதுவே இந்த எதிர்பார்ப்புக்களுக்கு பிரதான காரணம். 80 ஆயிரத்துக்கும் அதிகமான ரசிகர்கள் இந்த ஆட்டத்தை பார்வையிட வரலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் ஐ.எஸ். அமைப்பினர் இந்த ஆட்டத்தை தமது இலக்காகக் கொண்டிருக்கலாம் என்றும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. பரிஸ் நகர் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்டம் நடைபெறவுள்ள மைதானத்தில் மட்டும் 30 ஆயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

பரிஸ் நகரில் சில மாதங்களுக்கு முன்னர் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். இதனால் அந்த நகரில் நடைபெற்றுவரும் யூரோ கிண்ணத் தொடருக்கு அதியுயர் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வின்சி 'அவுட்'

விம்பிள்டன் தொடரில் இருந்து அதிர்ச்சிகரமாக வெளியேற்றப்பட்டார் முன்னணி வீராங்கனையான வின்சி.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் ஆறாம் இடத்திலுள்ள வீராங்கனையான இத்தாலியின் வின்சியை எதிர்த்து தரப்படுத்தலில் முதல் ஐம்பது இடங்களுக்குள் இல்லாத கோசோ பலப்பரீட்சை நடத்தினார். முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய கோசோ இரண்டாவது செற்றையும் 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வின்சிக்கு அதிர்ச்சியைக் கொடுத்தார். (ம)

## வேண்டும் பொதுவிடம் –மோர்கன்

பங்களாதேஷுக்கு எதிரான தொடரை அந்த நாட்டில் அல்லாமல் பொது இடத்தில் நடத்த வேண்டும் என்று இங்கிலாந்தின் அணித் தலைவர் மோர்கன் வலியுறுத்தினார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் பங்களாதேஷுக்குச் சென்று ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரில் விளையாடவிருந்தது. இந்த நிலையில் டாக்காவில் கடந்த வெள்ளிக்கிழமை ஐ.எஸ். அமைப்பினர் நடத்திய தாக்குதலில் பலர் சாவடைந்தனர். இதனால் இங்கிலாந்து அணியின் பங்களாதேஷ் பயணம் திட்டமிட்டபடி நடைபெறுமா? என்பதில் சந்தேகம் எழுந்தது. இத்தகைய பின்னணியிலேயே மோர்கன் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார். பாதுகாப்பு மிகப் பெரிய விடயம். பங்களாதேஷுக்கு எதிரான தொடரை பொதுவான இடத்தில் நடத்தினால் வசதியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இந்த விடயத்தில் இங்கிலாந்து கிரிக்கெட் வாரியம் தான் முடிவெடுக்க வேண்டும் என மோர்கன் மேலும் தெரிவித்தார். (ம)



கும்ளே பயிற்சியாளராகப் பொறுப்பேற்ற அடுத்த ஓராண்டு காலத்தில், இந்திய அணியின் செயற்பாடு குறித்து திட்டமிடுதல் தொடர்பான உயர்மட்டக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ம)

## தீவுகளே கும்ளேயின் இலக்கு கருத்துத் தெரிவித்தார் பின்னி



தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவதே கும்ளேயின் பிரதான இலக்கு என கருத்துத் தெரிவித்தார் ஸ்ருவேர்ட் பின்னி.

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள கும்ளேவுக்கு இந்த மாதம் நடைபெறவுள்ள மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரே முதலாவது தொடர். இதனால் தொடரைக் கைப்பற்ற கும்ளே கடினமாக முயன்று வருகிறார். இந்த நிலையிலேயே பின்னி மேற்கண்டவாறு தெரிவித்தார்.


தலைமைப் பயிற்சியாளர் அனில் கும்ளே, வீரர்களுடன் இணைந்து கடினமாக உழைத்து வருகிறார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை எப்படிக் கைப்பற்றுவது என்பதில்தான் அவரது முழுக் கவனமும் உள்ளது. அதற்குரிய திட்டங்களை வகுத்து வருகிறார். அவரது பயிற்சியில் இந்திய அணி மேலும் பலம்பெறும் என்பதில் சந்தேகமில்லை என பின்னி மேலும் தெரிவித்தார். (ம)

## மரையோ கோமிஸ் விலகல்; ஜேர்மனிக்குப் பின்னடைவு

ஜேர்மனியின் நட்சத்திர வீரரான கோமிஸ், பின்தொடைத் தசைநார் கிழிவு காரணமாக யூரோ கிண்ணத் தொடரின் எஞ்சிய ஆட்டங்களில் இருந்து விலகினார்.

யூரோக் கிண்ணத் தொடர் அரையிறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் ஜேர்மனி, பிரான்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

ஜேர்மனி தனது காலிறுதி ஆட்டத்தில் இத்தாலியை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்தில் நட்சத்திர வீரரான கோமிஸ் காயமடைந்தார். அவருக்கு பின்தொடைத் தசைநார் கிழிவு ஏற்பட்டமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து கோமிஸ் குறைந்தது நான்கு வாரங்கள் ஓய்விலிருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், அரையிறுதி ஆட்டத்தில் பலம் வாய்ந்த பிரான்ஸுக்கு எதிராக அவர் களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது ஜேர்மனிக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

**யாழ். தாச்சித் தொடர்**

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை காந்தி சன சமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்குஇடம்பெறும்அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஆனந்தா அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து அணி மோதவுள்ளது.

**கழுகுகளின் தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடப்பு வருடத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

# வென்றது ஆனந்தா

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஆனந்தா அணி வெற்றி பெற்றது.

அரியாலை காந்தி சன சமூக நிலைய மைதானத்தில் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் ஆனந்தா அணியை எதிர்த்து இருபாலை விக்னேஸ்வரா அணி மோதியது. இதில் ஆனந்தா அணி 9:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வென்றது. (ம-23)

# வலைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தினால் நடத்தப்படவுள்ள அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான வலைப்பந்தாட்டத் தொடர் நாளையும் நாளை மறுதினமும் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத் தில் நடைபெறவுள்ளது. (ம-422)

# கபடி, துடுப்பாட்டம் இன்று ஆரம்பம்

மாகாணமட்ட கபடிப் போட்டியும், துடுப்பாட்டத் தொடரும் இன்று ஆரம்பமாகின்றன. இருபாலாருக்குமான கபடித் தொடர் மன்னார் உள்ளக அரங்கில் இன்று ஆரம்பமாகிறது.

பெண்க்ளுக்கான துடுப்பாட்டத் தொடர் பள்ளிமுனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ம-23)



# சரஸ்வதியின் கால்பந்தாட்டம்; றோயலுக்கு இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 6

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் றோயல் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணி மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 55 ஆவது நிமிடத்தில் றோயலின் சார்பாக நிதர்சனின் உதவியுடன் முதல் கோல் பதிவானது. அடுத்த நான்கு நிமிடத்தில் நிதர்சன் பிறிதொரு கோலைப் பதிவுசெய்து றோயலை 2:0 என முன்னிலை பெற வைத்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது றோயல். (ம-23)



# இளந்தளிர், உருத்திரபுரம் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 6

முரசுமோட்டை விளைபூமி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இளந்தளிர், உருத்திரபுரம் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

விளைபூமி விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் வலைப்பாடு சென். ஆன்ஸ் அணியும் வட்டக்கச்சி இளந்தளிர் அணியும் மோதின. இதில் இளந்தளிர் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இரண்டாவது காலிறுதியில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணி மோதியது. இதில் உருத்திரபுரம் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



மன்னார் திருக்கேதீஸ்வரம் கிராமத்தில் வசிக்கும் பொருளாதரத்தில் மிகவும் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனைகளான எஸ். பிரியதர்சினி, எஸ். தேனுசா சகோதரிகளுக்கு மன்னார் மாவட்ட அரச அதிபர் எம். வை.எஸ். தேசப்பிரிய தனது சொந்த நிதியிலிருந்து தடகளப் பாதணிகளை கொள்வனவு செய்து வழங்கினார். (ம




வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தனது பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருந்து மன்னார் உப்புக்குளம் அல் பதா விளையாட்டுக் கழகத்துக்கு நிதி உதவியும் சீருடையும் வழங்கினார். (ம-56)

# மாகாண மட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

மாகாண மட்ட மூன்றாம் கட்டப் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறவுள்ளன.

சனிக்கிழமை நடைபெறவுள்ள, கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவு ஆட்டங்கள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், ஆண்கள் பிரிவு ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியிலும் நடைபெறும்.

இருபாலாருக்குமான ஹொக்கித் தொடர் யூனியன் கல்லூரி மைதானத்திலும், இருபாலாருக்குமான சதுரங்கத் தொடர், கரம் தொடர் என்பன கொக்குவில் இந்துக்கல்லூரியிலும் ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடர் ஸ்ரான்லிக் கல்லூரியிலும் நடைபெறும்.

ஞாயிற்றுக்கிழமை நடத்தத் திட்டமிட்டுள்ள பளுதூக்கல் போட்டி யாழ். இந்துக் கல்லூரியிலும் மல்யுத்தப் போட்டி யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்திலும் இடம்பெறும். (ம-23)

# காலிறுதிக்குத் தகுதி பெற்றார் முர்ரே

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதிபெற்றார் இங்கிலாந்தின் முர்ரே.

தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற காலிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் முர்ரேயை எதிர்த்து மோதினார் ஆஸ்திரியாவின் நிக். ஐந்து செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் செற்றில் நிக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார். இதனால் 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தியே முர்ரே வெற்றிபெறவேண்டியதாயிருந்தது. இரண்டாவது செற்றில் முர்ரேயின் ஆதிக்கமே மிகுந்திருந்தது. 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றி 2:0 என்று முன்னிலை வகித்தார் முர்ரே.

மூன்றாவது செற்றிலும் முர்ரே வெற்றிபெற்றால் அவர் நேர் செற் வெற்றியைப் பதிவு செய்யலாம். எனவே இந்த செற் நிக்கை பொறுத்தமட்டில் வாழ்வா? சாவா? நிலையாக அமைந் தது. 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய முர்ரே 3:0 என்ற நேர் செற் கணக்கில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார். காலிறுதியில் முர்ரேயும் சோங்காவும் மோது கின்றனர். பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலி டத்தில் உள்ள வீரரும், விம்பிள்டனின் நடப்புச் சம்பியனு மான ஜோகோவிக் நடப்பு வருடத் தொடரிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் முர்ரே, பெடரர் இருவருக்குமே [illegible] வெல்ல அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகிறது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட இந்திய காசி யாத்திரை

**ஆரம்பம்: 06.08.2016** **நாள்கள்: 19** **யாத்திரீகர்: 15 பேர்**

**செல்லுமிடங்கள் :** **டெல்லி,** அட்ஷயதாம் நாராயணர் கோயில் உட்பட சுற்றிப்பார்த்தல். **ஆக்ரா** தாஜ்மகால் செங்கோட்டைபார்த்தல். **அலகாபாத்** திருவேணி சங்கமம், புனித நீராடல் **ஹரித்துவார்** சுற்றிப்பார்த்தல். கங்காபூசை தரிசனம். **ரிஷிகேஸ்** தொங்குபாலம் உட்பட சுற்றிப்பார்த்தல் சிவானந்த ஆச்சிரமம் உட்பட **குருச்சேத்திரம்** பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம். வேறு இடங்களும் பார்த்தல். சீத்தாமடி **காசியில்** 3 நாள்கள். 15 இடங்கள் பார்த்தல். கங்காபூசை, காசிவிஸ்வநாதர். அன்னபூரணி உட்பட **மதுரா** கிருஷ்ணஜென்ம பூமி **இராமேஸ்வரம், மதுரை, திருப்புலானி, நவபாஷாணம், உத்திரகோசமங்கை, திருப்பதி, திருத்தணி, அலமேலுமங்காபுரம், காளகஸ்திரி** உட்பட ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

**பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை:**
பயணம் 5 விமானம் வரும் மற்றய பயணம் A.C பஸ். உணவு மடப்பள்ளி சமையல் ஆள்கள் சமைத்த மூன்றுவேளை உணவு. ஒரு நாளைக்கு ஒரு லீற்றர் குடிநீர். சுகாதாரமான 2 பேருக்கு ஒரு குளியலறை இணைந்த அறைகள். காலை, மாலை, கஃபி, ரீ உட்பட விருப்பமுடையவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். மடப்பள்ளி சமையல் ஆள்கள் சமைப்பதால் கோயில்களில் பணிபுரிவோரும் தயக்கமின்றிக் கலந்து கொள்ளலாம். விவரம் கேட்டறிந்து பதிவுசெய்யவும் வயதானவர்கள் பாதுகாப்புடன் அழைத்துச்சென்று அழைத்துவரப்படுவார்கள்.

**மேலதிக விவரங்களுக்க**
**கலாநிதி ஸ்ரீரெங்கநாதன் (மகன் ராஜன்)**
**59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு - 11**
**தொ.பே. 077 768 0102, 077 736 2154**
Facebook: sridevisriranganathan.thuraiappa
(சி.22155)
(13.18)

## உடனடி வேலைவாய்ப்பு உயர்தர உணவகத்தில்(Chinese Restaurant)

**Job Opportunities**
1) Restaurant Manager
2) Supervisors (02)
3) Chief Cook (Chinese)
4) Pizza Maker
5) Indian Cook
6) Kitchen Assistants
7) Waiter/Cleaner
8) Light Vehicle Driver
9) Food Delivery Boys(With driving licence)
10) Technical Officer (Electrical&Plumbing)

Jaffna's YELLOW PAGES
0767302881
www.jaffnaonline.info

நேர்முகத்தேர்வு(06-10/July-10 am-1.00 pm

சுயவிபரக்கோவையுடன்,அண்மையில் எடுத்த பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் நேரில் வரவும். நல்லூர் முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் நேர்முகத்தேர்வுகள் மேற்குறித்த திகதிகளில் நடைபெறும்

Jobs.jaffnaonline.info

Jaffnaonline- North's First and Biggest Job Bank
வடக்கின் வேலைவாய்ப்பு வங்கி


## 300 கிராண்ட்ஸ்லாம் வெற்றிகள் செரீனா வில்லியம்ஸ் சாதனை

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் தனது 300 ஆவது வெற்றியைப் பதிவு செய்தார்.

விம்பிள்டன் தொடர் லண்டன் நகரில் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ஜேர்மனியின் அன்னிகா பெக்கை எதிர்கொண்டார். இதில் செரீனா நேர்செற் வெற்றி பெற்றார். இந்த வெற்றி செரீனாவுக்கு 300 ஆவது கிராண்ட்ஸ்லாம் வெற்றியாக அமைந்தது.

(ம)


## SPOKEN ENGLISH

இளைஞர் யுவதிகள், O/L, A/L எழுதியோர்,தொழில் தேடுவோர் அரச தனியார் ஊழியர்கள், வெளிநாடு செல்வோர் இணையமுடியும்.

ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்கள்கூட 3 மாதங்களில் எம்முடன் இணைந்து தமிழ்போல சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 09. 07. 2016
1. காலை 08.00-10.00 2. காலை 10.00-12.00

வாரநாள் வகுப்புகள் (செவ்வாய்,வியாழன்)
காலை 10–12

09.07.2016 வரை பதிவுகளை மேற்கொள்ளமுடியும்! ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்!

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## BAJAJ
Bajaj Electricals Ltd.
Inspiring Trust

வடமாகாணத்தில்

பஜாஜ் எலக்ரோனிக்கல் அப்லைன்ஸ் and எல். ஈ.டி லைட்ஸ் வாகன விற்பனை மேம்படுத்தல்

* விசேட விலை கழிவு......!
* மேலதிக சலுகைகள்......!

| Date | 8.00am - 10.30am | 12.00pm - 2.30pm | 4.00pm-6.30pm |
|---|---|---|---|
| 06/07/2016 | Jaffna Town | Jaffna Town | Jaffna Town |
| 07/07/2016 | Manipay | Chankanai | Chunnakam |
| 08/07/2016 | Achchuveli | Nelliady | Pointpedro |
| 10/07/2016 | Poonakary | Paranthan | Viswamadu |
| 11/07/2016 | Puthukudiiiruppu | Mullativu | Oddisudan |
| 12/07/2016 | Mankulam | mallavi | Kanakarayankula |

ஏக விநியோகஸ்தர்
ஜினசேன பிரைவேற் லிமிட்டெற்
186, எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு-8
யாழ் கிளை : 174, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு
071 0366631
071 1249046

## வேலையாள்கள்

சுன்னாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள புடைவைக் கடையின் (ஷொப்பிங் மால்) கிளை ஒன்றுக்கு மின் உபகரணங்கள்.Fancy Items புடைவை ஆகியவற்றில் முன்னனுபவமிக்க முகாமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தேவை.

தொடர்பு:- 0777 251143

## உடனடி வேலை வாய்ப்பு

**WIRING** வேலைக்கு
வேலையாட்கள் தேவை
நேரடியாக
**நளின் நிறுவனத்துக்கு**
சமூகமளிக்கவும்

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT)LTD.
195/4, Parameswara Junction,
Palaly Road, Jaffna.
0777 667 975 / 021 222 11 21

## A/L பொருளியல்

**MCQ BOOK - 5** ரூபா 130

அரச பொருளியல் &சர்வதேச பொருளியல் - புதிய சென்மதி நிலுவை. புதிய தரவுகள். தகவல்கள். புதிய வடிவமைப்புடன் மூன்றாம் பதிப்பு

முழுப்பாடத்திட்டமும் அடங்கிய 2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெற வழிவகுத்த 11 கட்டமைப்பு வினா விடைகள் & 6 MCQ BOOKS

ஆசிரியர்:
**வே. கருணாகரன்**

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை

GATEWAY Language Centre

## JOHN KEELLS FOUNDATION மற்றும் GATEWAY LANGUAGE CENTRE

இணைந்து வழங்கும்

## ஆங்கில புலமைப்பரிசில் - அனுமதி 2016/17

JOHN KEELLS FOUNDATION

John Keells நிறுவனத்தின் சமூக பொறுப்பாண்மை செயற்றிட்டத்தின் கீழ் Gateway மொழிகள் மற்றும் தகவல் தொடர்பாடல் கற்கைகள் நிலையத்தினால் பாடசாலை மாணவர்களுக்காக வருடாந்தம் வழங்கப்படும் ஆங்கில மொழிக் கல்விக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பயில விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சிக் காலம் :**

தெரிவுப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 2016 ஆவணி முதல் 2016 மார்கழி வரையான நான்கு மாத காலம் முற்றிலும் இலவசமாகப் பயிற்சி வழங்கப்படும். இறுதிப் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு அடுத்த கட்ட கற்கைக்கான புலமைப்பரிசிலும் வழங்கப்படும்.

**யார் விண்ணப்பிக்கலாம்?**

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 12-14 வயதுடைய எந்தவொரு மாணவரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிப்பது எப்படி?**

உங்கள் வதிவிடத்துக்கு அருகிலுள்ள கேற்வே நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் 13.07.2016ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல், பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்களுக்கு :**

| Gateway Language Centre, # 39, College Road, Neeraviady, Jaffna. Tel: 021 492 7456 | Nelliady Branch: #55, Point Pedro Road, Nelliady. 021 492 7457 | Chavakachcheri Branch: #1, New Market Building, Chavakachcheri. 021 492 7432 |
|---|---|---|


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# றம்ழான் நோன்புப் பெருநாள் சிறப்பிதழ் - 2016

## முஸ்லீம்கள் நிம்மதியாக வாழும் சூழ்நிலை உருவாக இப்புனித நாளில் பிரார்த்திப்போம் வட மாகாண சபை உறுப்பினர் யாசீன் ஜவாஹிர் (ஜனுபர்)



உலகளாவிய ரீதியில் முஸ்லிம்சமூகம் எதிர்நோக்கும் இனவாத,மதவாத செயற்பாடுகள்ஒழிக்கப்பட்டு முஸ்லீம்கள் நிம்மதியாகவாழும் சூழ்நிலை உருவாக

இப்புனித நாளில் பிரார்த்திப்போம்என அகில இலங்கை மக்கள்காங்கிரஸின் வட மாகாண சபை உறுப்பினர் யாசீன் ஜவாஹிர் (ஜனுபர்) நோன்புப்பெரு நாள் செய்தியில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நோன்புப் பெருநாள் வாழ்த்துச்செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது :-

முப்பது நாட்களாகநோன்பு நோற்று அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற்றுபுனித நோன்புப்பெருநாளை கொண்டாடும்அனைத்து முஸ்லிம்களுக்கும் எனதும் எனது கட்சியின்சார்பாகவும் வாழ்த்துக்களைக்கூறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகலாவிய ரீதியில் நாம்பெருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில்மறுபுறம் குறிப்பாக பலஸ்த்தீனில்எமது சமூகம் மிகப் பெரும் கொடூரமான சூழ் நிலைக்குள்சிக்கி தத்தளித்துக் கொண்டிருப்பதை நினைக்கும் போது எம் உள்ளங்கள் வெடித்துச்சிதறிவிடும் போல் உள்ளது.

பல பில்லியன் கோடி பெறுமதியானமுஸலீம்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டும் அழிக்கப்பட்டும் பள்ளிவாசல்கள்இகுர்ஆன் எனதீக்கிரையாக்கபபட்டும் வெறிபிடித்தாடும் இக்கொடூரமிக்கவர்களிடமிருந்து எமது சமூகத்தை நாம்காப்பாற்ற அனைத்து முஸ்லீம்களும்

ஒன்று படுவதே இந்தகொடூரர்களுக்கு நாம் கற்பிக்கும் தகுந்த பாடமாக அமையும் என்பதை இச்சந்தரப்பத்தில் வேண்டிக்கொள்கின்றேன்.

எனவே நோன்புப் பெருநாளைக்கொண்டாடும் இலங்கை வாழ்முஸ்லிம்கள் மட்டுமன்றி உலகிலுள்ள முஸ்லீம் நாடுகளில் வாழும்முஸ்லிம்களும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும்நாடுகளிலுள்ள எமது உறவுகள்அனுபவிக்கும் அனைத்துத்து துயரங்களும் அகதி வாழ்க்கை முறையும்

ஒழிந்து கௌரவமிக்க நிம்மதியான வாழ்க்கைப் பயணம் அமைய இந்நாளில் இறைவனிடம் மன்றாட்டமாக துஆ செய்வோம்.



## அகில இலங்கை உலமா சபை யாழ் கிளிநொச்சி கிளை உப தலைவரும் மக்கள்பணிமனைத் தலைவருமான பி.எஸ்.எம். சுபியான் மௌலவி ஈதுல் பித்ர் பெருநாள் வாழ்த்து

ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்று நன்மைகள் புரிந்து மகிழ்ச்சியோடு பெருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் முஸ்லிம் சகோதரர்களுக்கு மக்கள் பணிமனைத் தலைவர் பி.எஸ்எம் சுபியான் மௌலவி தனது ஈதுல் பித்ர் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ரமழானிலே பள்ளிவாசல்கள் நிரம்பிக் காணப்பட்டன. நல்லுபதேசங்கள் கேட்கும் பாக்கியம் இரவும் பகலுமாக கிடைத்த வண்ணம் இருந்தன.

இவ்வாறெல்லாம் நல்ல பல விடயங்களைப் பெற்றுக் கொண்ட நாம் அதன் பக்குவத்திலும் பயிற்சியிலும் எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே ரமழானில் நாம் அடைந்த பயனாகும்.

அல்குர்ஆன் இறக்கப்பட்ட மாதமாகிய ரமழானில் எமக்கு அதனோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அத்தொடர்பு அல்குர்ஆனை ஓதுவது, விளங்குவது, வாழ்க்கையில் எடுத்து நடப்பது, மற்றோருக்கு எடுத்துச் சொல்வது ஆகிய அனைத்தின் மூலமே நிறைவுபெறும். தானதர்மங்கள் செய்து ஷைத்தானிய உணர்வுகளுக்கு விலங்கிட்டு வாழ்ந்த நாம் ரமழானில் பெற்ற பயனை ஏனைய காலங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இத்தருணத்தில் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் முஸ்லிம் உம்மத்திற்கு எதிரான சக்திகளை முறியடிக்க அல்லாஹ்விடம் பிரார்த்திப் போமாக. நோன்பென்றும் பாராது காஸாவிலுள்ள முஸ்லிம் களுக்கு இழைக்கப படும் அநீதி, படுகொலைகளுக்குக் கண்டனம் தெரிவிப்பதோடு பலஸ்தீன மக்களின் நிம்மதியான வாழ்வுக்காக துஆ செய்வோமாக.

எம் எல்லோரினதும் நற்கிரியைகளையும் எல்லாம் வல்ல அல்லாஹ் அங்கீகருத்தருள்வானாக. "நிச்சயமாக நாம் நன்மை செய்பவர்களின் கூலியை வீணாக்குவதில்லை" (18:30) தகப்பலல்லா/ஹ மின்னா வமின்கும் ஈத் முபாரக் என மக்கள் பணிமனைத் தலைவர் விடுத்துள்ள பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றம்ழான் நோன்புப் பெருநாள் சிறப்பிதழ் - 2016

அனைவருக்கும் இனிய றம்ழான் பெருநாள் வாழ்த்துக்கள்

அடுந்துங்கள் விடுந்து

சைவம் - அசைவம்

பாரம்பரிய
இன்சுவை
ஒடியல் கூழ்

புதன்
சனி
ஞாயிறு

விருந்து @ யாழ்பாடி
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868 | 075 9875 800 | 0777 360 353

## வட மாகாண சபை உறுப்பினர் ஹபிப் முஹம்மட் றயீஸின் நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தி



முப்பது நாட்கள் பசித்திருந்து நோன்பு நோற்று புனிதமான பெருநாளைக் கொண்டாடும் உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைவதுடன் இப்பெருநாள் தினம் இலங்கை முஸ்லிம்களுக்கு ஒரு சமாதானம் சமத்துவம் சகோதரத்துவம் பொருந்திய ஒன்றாக அமைய வேண்டும் என்று தனது பெருநாள் வாழ்த்துச்செய்தியில் வட மாகாண சபை உறுப்பினர் ஹபிப் முஹம்மட் றயீஸ் தெரிவித்தார்.

மேலும் தனது வாழ்த்துச்செய்தியில்: இத்தினத்தைக் கொண்டாடும் நாம் அடுத்த பெருநாள் வருவதற்கிடையில் வெளிநாடுகளில் பணியாற்றும் வெளிநாடுகளுக்கு பணிப்பெண்களாகச் செல்ல நினைத்துள்ள அனைத்து நம் தாய்மார், சகோதரிகள், மனைவிமார், பிள்ளைகள் அனைவரையும் தடுத்து நம்நாட்டிலேயே தொழில் செய்து தனகுடும்பத்துடன் சந்தோஷமாக தன் வீட்டிலேயே கழிப்பதற்கு திடசங்கற்பம் பூணுவோம்.

இன்று நாடாளுமன்றத் தேர்தலை எதிர் நோக்கியிருக்கிறோம். எனவே எவ்வாறு அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து போராடி ஏகாதிபத்திய ஆட்சியாளர்களை நாட்டில் இருந்து வெளியேற்றினரோ அவ்வாறே அனைத்து இன மக்களும் தமது வாக்குகளைப் பயன்படுத்தி ஜனநாயக விரோதிகளை தோற்கடிக்க வேண்டும்.

இதன் மூலம் தற்போது மலர்ந்துள்ள நல்லாட்சியை ஸ்திரப்படுத்தி நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவும் தமிழ் - முஸ்லிம் சிறுபான்மைச் சமூகங்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று சமத்துவமாக வாழ்வதற்குமான சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்" என்று முதலமைச்சர தனது பெருநாள் வாழ்த்துச் செய்தியில் வட மாகாண சபை உறுப்பினர் ஹபிப் முஹம்மட் றயீஸ்குறிப்பிட்டுள்ளார்.

## முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசல் பிரதம இமாம் மஹ்மூத் பலாஹி அவர்களின் நோன்புப்பெருநாள் வாழ்த்துச்செய்தி



முப்பது நாட்கள் நோன்பிருந்து தொழுகை ஸக்காத் திக்ரு ஸலவாத் மற்றும் குர்ஆன் போன்ற நல்லமல்கள் புரிந்து 'ஈதுல் பித்ர்' எனும் நோன்புப்பெருநாள் கொண்டாடும் என் இனிய இஸ்லாமிய நெஞ்சங்களுக்கு இதயம் கனிந்த புனித நோன்புப்பெருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்லின சமூகங்கள் வாழும் இந்த நாட்டில் சாந்தி சமாதானம் என்றென்றும் நிலவவேண்டும் எனவும் முஸ்லிம்களாகிய நாங்கள் தன்மானத்துடனும், தலை நிமிர்ந்தும், சம உரிமையுடனும், சகவாழ்வுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிய அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன்.

அதேபோல் நாம் இன்று கொண்டாடும் இனிய நன்நாளில் பலஸ்தீனில் வாழும் எமது உடன் பிறவா சகோதரர்கள் மிகவும் கஷ்டத்திற்கும் துன்பத்திற்கும் மத்தியில் அகதி முகாம்களிலும் பாதையோரங்களிலும் தஞ்சம் புகுந்து வாழ்கின்றனர். இவர்களுக்காக நாம் அதிகம் அதிகம் துஆ செய்வது எமது முக்கிய கடமையாகும்.

அல்லாஹ் இவர்களுக்கு விடிவை கொடுக்க வேண்டியுள்ளதோடு அவர்களுக்கு நிலையான சமாதானத்தை கொடுக்க மேலும் நானும் நீங்களும் இனிய நன்நாளில் மீண்டும் ஒருமுறை பிரார்த்திப்போம்

அனைவருக்கும் எமது றம்ழான் பெருநாள் வாழ்த்துக்கள்.

நியூ இன்பாலா ஹோட்டல்

சகல
விதமான
கலால் உணவுகளும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
விஷேட ஓடர்கள் செய்து
கொடுக்கப்படும்.

No 259, K.K.S.றோட், யாழ்ப்பாணம்.
021 221 5758
கிளை - 10/1 முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.
071 200 4477

றம்ழான் வாழ்த்துக்கள்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி உயர்ந்த மதிப்பெண்களை பெற்று வெற்றியை எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு

கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளில் தினமும் ஈடுபடுகின்ற வினைத்திறன் கொண்ட பதுளை, ஹட்டன், நுவரெலியா, புசல்லாவ, அக்கரைப்பற்று, வவுனியா, மன்னார், காரைநகர், நெல்லியடி, யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 12 ஆசிரிய வளவாளர்களால் தொகுக்கப்பட்டு 12 மாதிரி வினாத்தாள்களுடன் ( விடை - கையேடு ) வெளிவந்துள்ளது




விலை : 450/-

பூமாலை

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் தொ.பே : 077 6258778

மாணவர்களே ! வாங்கி படியுங்கள் ! வித்தியாசத்தை உணர்வீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றம்ழான் நோன்புப் பெருநாள் சிறப்பிதழ் - 2016

சகல விதமான ஆடைகளும் மிகக்குறைந்த விலையில்

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என
அனைவருக்குமான ஆடைத்
தெரிவுகள் எம்மிடம்

SALE

சாறிகள்
ரொப் (TOP)
ரீ ஷேட்
டெனிம் ரவுசர்

டெனிம் ஸ்கேட்
பிளவுஸ்
ஸ்கேட்
ஆண்கள் ஷோட்ஸ்

ஹொங்கொங் இலிருந்து இறக்குமதி
செய்யப்பட்ட ஆடைகள் மலிவு
விற்பனையில் உள்ளன.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது றம்ழான் நோன்புப் பெருநாள்
வாழ்த்துக்கள்.

இஷாரா

நியூடிரெஸ் மார்ட் (பிறை) லிட்
199A, 199B , மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் புதிய HNB அருகில்)
தொ.பே. 021 221 9925, 077 262 8933

அனைவருக்கும் இனிய றம்ழான் பெருநாள்
வாழ்த்துக்கள்.

தற்போது யாழ்ப்பாண நகரிலும்...

NSA

NSoft Academy

We Trust to Make You a Career

புதிதாக யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்ட
எமது கிளையில் பதிவுகளுக்கு முந்துங்கள்

- Spoken English
- IELTS
- Bachelor of Information Technology
- Higher National Diploma in Computing
- Industrial Training

Register NOW!

ORACLE CCNP CCNA MCSE BIT SPOKEN ENGLISH IELTS IELTS Life Skills

For More Info

**NSoft Academy-Vavuniya**
Vairavarkovil Road,
Vairavapuliyankulam,
Vavuniya
**024 454 5061**

**NSoft Academy-Jaffna**
320,1st Floor,
Point Pedro Road,
Anaipanthy, Jaffna.
**021 454 5293**

www.nsoftedu.com
www.facebook.com/nsoftacademy

அனைவருக்கும் எமது றம்ழான் பெருநாள் வாழ்த்துக்கள்.

மிலேணியம்

ஆடியை முன்னிட்டு அனைத்து விதமான
ஆடைகளுக்கும் 20% விலைக்கழிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
ஜீன்ஸ், சேட்ஸ், T சேட்ஸ், சல்வார்ஸ், சாறி,
புடைவைகள், ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான
ஆடைவகைகள் மற்றும் பல...

MFD
மிலேணியம்
பெஷன் டெஸ்டினேஷன்



MFD
மிலேணியம்
எதிர்கால நாகரீகம் இன்றே

இல.10,11, பவர் ஹவுஸ் வீதி, ஸ்டான்லி பஜார், யாழ்ப்பாணம்.
தொ.பே: +94 21 221 7575

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முழங்க
# அருள்மிகு ஸ்ரீ செல்வயோ
# திராவிட மரபு
# சிற்ப மணித் தேர் வெள்ளே

**காலம்**
**(புத**

### தேர் ஏறி வரும் திருநடன நாயகன்

இலங்கையின் வடபாகத்தில வயல் நிலமும், கடல் நிலமும் ஒன்றாய் இணைந்த பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட முழங்காவில் கிராமத்தின் முற்றமாய் விளங்கும் விநாயகா ஆலயத்தின் சித்திரை. தேர் அடி எடுத்து வைக்கும் நிகழ்வானது பெருமைக்குரிய விடயமாகும். பண்டைய காலத்தில் யாழ் குடா நாடும், வன்னி வளநாடும் ஒன்றாய் சங்கமிக்கும் சங்குப்பிட்டி பாலம் வழியே நடைபவனி நேர்த்திக் கடன் தீர்க்க யாத்திரை செய்யும் யாஸ்திரிகள் இடர்நேரும் துன்பங்களை நீக்க விநாயகரின் துணையுடன் இவ் ஆலயத்தில் எழுந்தருளச் செய்து பல நூற்றாண்டு காலம் போற்றி வழிபட்டனர்.

இவ் ஆலயத்தின் பெருமையை வெளிப்படுத்தும் " மின்னாது முழங்காது இடி விழுந்து தானாகத் தோன்றிய நீர்க்கிணறு " பெருமைக்குரியதாகும். பெருமைகள் பல தோன்றி பூநகரான நன்நகருள் அமர்ந்திருந்து அருள் பாலிக்கும் நடன நாயகனின் அருளினாலும் அடியவர்களின் முயற்சியினாலும் ஆழித் தேரில் ஆடிவரும் முதல் அற்புதக்ககட்சியானது அடியவர்களுக்கு அருள் பாலித்து அற்புதங்கள் வெளிப்படுத்த ஆசிகள் பல. ஊரவர்கள் யாவரும் ஒன்றாக இணைந்து உயர்த்திய இத் தேரை ஒன்றாக கூடி இழுத்து அமைதியும், சமாதானமும் வேண்டி அருள் பெற்று வாழ ஆசிகள் வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

**சி.ச. கிருஷ்ணேந்திரன்**
**பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பூநகரி.**

### வாழ்த்துச் செய்தி

நீர்வளம், நில வளம், கடல் வளம் ஆகிய வளங்களை தன்னகத்தே கொண்ட முழங்காவில் மண்ணின் வரலாற்று நாயகனாக துன்பங்கள் துயரங்களை நீக்கி எல்லோருக்கும் அருளினை அள்ளி வாரி வழங்கும் வள்ளல் பெருமானாக காணப்படும் செல்வயோக சித்தி விநாயகர் கன்னித்தேரேறும் கண் கொள்ளாக் காட்சி காணக் கண்கோடி போதாதையா! பஞ்சமுக நாயகனாக ரதம் ஏறி பவனி வரும் எம் பெருமானை பாமாலை பாடி பூமாலை சூடி மனதார வாழ்த்தி எம் பெருமானின் அருள் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ வாழ்த்துக்கின்றோம்.

**வணிகர் சங்கம்**
**முழங்காவில்.**

### ஆலய பரிபாலன சபை த



முழங்காவில் என்னு
காரணமாக அமைந்த மு
யோக சித்தி விநாயகர்)
திராவிட மரபில் அமைக்கப்
வினைக் காண்பதற்கு அ
இன்று நடைபெறுவதையி
வெள்ளோட்ட நிகழ்வும் தேர்த் திருவிழ
செல்வயோக சித்திவிநாயகரை வேண்
ஒத்துழைப்பு நல்கிய அனைவரையும்
அருளாசி அனைவருக்கும் கிடைக்க
சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு சிறப்
நிற்கின்றேன்.

### ஆசியுரை



தமிழ் மண்ணோடும் மக்களோடும் கலந்த கலைகளுள் தேர் பெரும் கலை அம்சம் பொருந்திய மிகப்பெரிய கலை பொக்கிசம் எனலாம். சிறுமலைபோல் காட்சியளிக்கும் தேரை மக்கள் ஒன்று கூடி இழுக்கும் போது ஆடி அசைந்து வருவது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஒரு தேர் உருவாக்கப்படும்போது எந்த கோயிலுக்காக உருவாக்கப் படுகிறது. மூலத்தில் வீற்றிருக்கும் இறைவன் அவருடைய உயரம் அல்லது கோபுர உயரம் அல்லது தூபி உயரம் இவற்றின் பிரதிபலிப்பாக அமையும் தேருக்குப் பூதப்பார், விக்கிரகபார், சித்துருதளம், பெரிய அங்கணம், தேவாசனம்.சிம்மாசனம் என ஆறு அடுக்குகளைக் கொண்டதாக அமையும். இந்த அடுக்குகளின் உட்கட்டமைப்பு 15 அடுக்குகள் இடம்பெறும்.

தேரிலே நாகரம், திராவிடம், வேசரம், சட்டத்தேர் எனப் பல வகை உண்டு. தேரானது, சதுரம், அறுகோணம், பதின்கோணம், பன்னிரண்டுகோணம், வட்டம்,நீள்வட்டம், நீள்சதுரம், எண்கோணம், முட்டை வடிவம் என ஒன்பது வகையில் அமைக்கலாம்.

விநாயகப் பெருமான் ஆலயத்தில் அமைக்கப்பெற்ற தேரானது திராவிடம் என்னும் தேரிலக்கணத்திற்கமைய அமைக்கப்பெற்றுள்ளது. முகபத்திர கலைக்கமைய பத்திரா பத்திர முறிப்பு எனும் சிறப்பு கலை அம்சம் கூடி அமைப்பு 26" கொண்ட மூலவருக்கு ஏற்றதாக மிகத் துல்லியமாக 29'-9" உயரம் கொண்ட தேராக அமைக்கப் பெற்றது மிகச் சிறப்பானது.

இத்தேரை அமைக்கும் ஸ்தபதி அவர்கள் செல்லையா பாலச்சந்திரன் தன்னுடைய குல ஆசாரத்தை மிகப் பேணும் நற்குணம் கொண்டவர். பூசாரி என மரியாதையோடு எல்லோரும் அழைப்பர். தன்னுடைய 55 வயதில் 50 இற்கும் மேற்பட்ட தேரை அமைத்துள்ளார். இது அவருடைய கலைத்திறமையை சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது. ஸ்தபதி அவர்கள் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆஸ்தான ஸ்தபதியாகத் தனது கடமையைச் சிறப்பாக செய்பவர். அவரது கலை எண்ணத்தில் உதித்த சித்திரத் தேரை அமைப்பதற்கு உதவியாக கடமையாற்றிய சிற்பிகள் திறமை வாய்ந்தவர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக இப்படியான ஒரு சித்திரத்தேரை அமைக்க வேண்டும் என பெருவிருப்போடு இயங்கிய தேர்த்திருப்பணி சபையினர்கள், நிர்வாக சபையினர்கள், அடியவர்கள் அவர்கள் பணி மிக சிறப்பானது. குறிப்பாக இளைஞர்கள் மற்றும் திருப்பணிக்கு உதவிய அடியவர்கள் எல்லோருக்கும் எனது ஆசிகளும் எம்பெருமானின் திருவருளும் என்றென்றும் கிடைக்க பிரார்த்திக் கின்றேன்.

ஐங்கரன் அருள் அகிலமெங்கும் பரவுக.

**மஹோற்சவ சிவாச்சாரியார்**
**பிரம்மஸ்ரீ சுந்தர செந்தில்ராஜ சிவாச்சாரியார்-அதிபர்**
**துர்க்கா தேவி வேதாகம பாடசாலை - துர்க்காபுரம்.**

### ஆசிச் செய்தி



பல வரலாறுகளைக் கொண்டமைந்த முழங்காவில் ஸ்ரீ செல்வயோக சித்தி விநாயகப் பெருமான் சித்திரத் தேரிலே வலம் வரு வேண்டும். அதனை என் வாழ்நாளில் காணவேண்டும் என்பது எனது அவா. இவ் ஆசை இன்று நிறை வேறுகின்றது இதற்கும் என்றும் என்னுடன் தோள் கொடுத்த அனைத்து அடியவர்கள் நிர்வாக உறுப்பினர்கள் அனைவருக்கும் எம் பெருமானின் அருட் கடாச்சம் கிடைக்க வேண்டும் என எம் பெருமானை பிரார்த்தித்து வெள்ளோட்ட நிகழ்வு சிறப்புற வாழ்த்துக்கின்றேன்.

**மூ. நவரத்தினம் J.P**
**(தேர் திருப்பணி சபைத் தலைவர்)**

**அபி**
உதிரிகள் வாணிபம்
நாச்சிக்குடாச்சந்தி, மன்னார் வீதி, முழங்காவில்.
077 494 3756

**நியூ கௌரி ஜூவல்லறி**
நாச்சிக்குடாச்சந்தி, முழங்காவில்,
கிளை - மன்னார், மட்டக்களப்பு.
021 228 3128

**பிரியன் இறுவெட்டு**
தொலைபேசி விற்பனை
மன்னார் வீதி, நாச்சிக்குடாச் சந்தி, முழங்காவில்.

**கிருபா ஹாட்வெயார்**
மன்னார் வீதி, முழங்காவில்
021 228 3110

**சிவா எலக்ரோனிக் & மொபைல்ஸ்**
கைத்தொலைபேசி விற்பனை, பழுது பார்த்தல்,
மன்னார் வீதி, முழங்காவில்,
077 639 0012

**கேசவன் வேளாண்சேவை**
விவசாய உள்ளீடுகள், கால்நடை தீவனம் மற்றும் மருந்துகள் விற்பனை.
மன்னார் வீதி, முழங்காவில்.
077 441 8948

**விநாயகர்**
எலக்றிக்கல் அன் மல்ரி சொப்
மன்னார்வீதி, முழங்காவில்.
077 799 0070

**யாழ்.பல்பொருள் வாணிபம்**
மன்னார்சாலை, நாச்சிக்குடா, முழங்காவில்.
077 749 6266

**றிஷா**
பல்பொருள் வாணிபம்
சந்தை உட்புறம், நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.

**துணைவன் வெற்றிலை வாணிபம்**
உரிமையாளர், க.தர்மலிங்கம்
நாச்சிக்குடா சந்தை, முழங்காவில்.

**மணமகள் நகையகம்**
9இன் பில்டிங், நாச்சிக்குடாசந்தி, முழங்காவில்.
077 938 4143

**சங்கவி ஹாட்வெயர்**
உதிரிகள் வாணிபம்
மன்னார் வீதி, முழங்காவில்.
077 694 9516


**தூயவள்**
அழகு சாதன புடைவையகம்
நாச்சிகுடாச்சந்தி
077 596 8057

**பிரதீபன்**
பல்பொருள் வாணிபம்
மன்னார் வீதி, முழங்காவில்.
077 088 9570

## அனைத்து அடியவர்களையும் கலந்து கொண்டு எம்பெருமானின் அருட்கட
## பெற்றுக்கொள்ளுமாறு வேண்டி நிற்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கலில்
# ...ாக சித்தி விநாயகர் ஆலய
# ...பு முகப்பத்திர
# ...ளாட்ட சிறப்பிதழ் – 2016



...ம்: 06.07.2016
(...தன்கிழமை)

நேரம்:
மாலை 3.00 மணி

**சித்திரத்தேர் திருட்டிப்பு:**
ரதகலாசூரி சிற்பரத பத்ம விபூசன்
ஸ்தபதி விஷ்வப் பிரம்மஸ்ரீ செ.பாலச்சந்திரன்
அவர்களும் பஞ்சகிருத்திய பரிசாதகர்களும்
(ஸ்ரீ காளிகா சிற்பகலையகம்)
புத்தூர், யாழ்ப்பாணம்.

## ...ப தலைவரின் ஆசிச் செய்தி

...ன்னும் பெயர் எமது கிராமத்துக்கு வரக் ...த முழங்காவில் பிள்ளையார் (ஸ்ரீ செல்வ ...யகர்) ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ...மக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ் ...கு அவா கொண்டுள்ளேன். இவ் நிகழ்வு ...தையிட்டு அகமகிழ்வு அடைகின்றேன். இவ் ...ருவிழாவும் சிறப்புற நடைபெறு வதற்கு ஸ்ரீ ...வேண்டி நிற்கின்றேன். இதை அமைப்பதற்கு ...ரையும் பாராட்டுவதுடன் எம் பெருமானின் ...டைக்க வேண்டும் என பிரார்த்திப்பதுடன் ...வு சிறப்புற நடைபெற ஆசிகளையும் வழங்கி

**தலைவர் ஆலய பரிபாலனசபை.**

## ஆசிச் செய்தி



வளம் நிறைந்த வன்னி நாட்டில் முழங் காவில் செல்வ யோக சித்தி விநாயகர் ஆலயத்தின் சிறப்பு அறியாதவர்களில்லை அற்புதம் நிறைந்த ஞான முதல்வன் அரு ளாட்சி செய்யும் திருக்கோயில் சீராக பராமரித்துப் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருவது பெருமைக்குரிய விடயமாகுத். இத்திருக் கோயிலில் புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு வெள் ளோட்ட விழா நடைபெறுவது குறித்து ஆனந்த மடைகிறேன். சிற்பகலா விநோதன் செ. பாலச்சந்திரன் அவர்களின் கைவண்ணத்தில் உரு வான சித்திரதேர் சூரிய சந்திரர் உள்ளவரை நிலை பெற் றுச் சிறக்கப் பிரார்த்திக்கிறேன். பலரை வாழ வைத்த முழங்காவில் மண்ணில் அருள் மழை பொழியும் ஆனை முகப் பெருமான் புதிய தேரில் வலம் வந்து மீண்டும் வன்னி மண் சிறக்க வாழத்தி அமைக்கிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர் - ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

## ஆசிச் செய்தி



இயற்கைவளம் எழில் கொஞ்சும் கிளிநொச்சி மாநன்ன கரில் பூநகரி மண்ணில் முழங்காவில் பிரதேசத்தில் அருட் கடாட்சம் அளித்து நிறைவோடு வீற்றிருக்கும் அருள் மிகு. ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திரு விழாவிற்கான வெள்ளோட்ட நிகழ்வினை சிறப்பிக்கும் வகையில் வெளி வரும் சிறப்பிதழுக்கு ஆசி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

ஆரம்ப காலத்தில் குறைந்தளவிலான வளங்களைக் கொண்டமைத்த சித்தி விநாயகர் ஆலயந்தனில் பின்னர் வெகுவிமர்சையாக மகோற்சவம் இடம் பெற்று சப்பறத்தினாலாக்கப்பட்ட கட்டுத்தேரில் உலா வந்தார். ஆனால் இன்று தனக்கென ஒரு ரதத்தினை அமைத்து வெள்ளோட்ட நிகழ்வினை செய்யும் வகையில் புகழ்பெற்றுள்ளது என்றால் அது மிகவும் பெருமைக் குரியதாகும்.

கோயில் இல்லா ஊரில் 'குடியிருக்க வேண்டாம் ' என்ற ஔவையாரின் உன்னத கருத்துக்கிணங்க முழங்காவில் பிரதேசந்தனில் இனிதமர்ந்து அருள்பாலித்து இன்று அடியார்களையெல்லாம் உன்னத வாழ்வுபெற வழிசமைத்த வகையில் அவரின் பெருமை இனிது விளங்குகின்றது. மன்னாருக்குச் செல்லும் ஒவ்வொரு வரும் தம் காணிக்கைகளைச் செலுத்தி எம் பெருமானின் அருளினைப் பெற்று தாம் உய்வடைந்த வண்ணம் உள்ளனர்.

இத்தகைய சிறப்புமிக்க ஆலயத்தின் பெருமை எஞ்ஞான்றும் வளங்கொழிக்கும் எம் பிரதேச அடியார்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதோடு இந்நிகழ்வு மென்மேலும் சிறப்புற்று இனிது நடைபெற என் ஆசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்கி நிற்கின்றேன்

**தி. இராசநாயகம்**
**தலைவர்- மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர். கிளிநொச்சி.**

## ஆசிச் செய்தி



இன்று பூநகரிப் பிரதேசத்தின் முழங்காவில் கிராமத்தில் கோயில் கொண்டிருக்கும் சித்தி விநாயகரின் சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா சிறப்புற நடைபெற மனம் மகிழந்து வாழ்த்துகின்றேன்.

பூசைக்கு நீர் இல்லையே என பூசகர் வருந்திய வேளையில் அவரது கனவில்தோன்றி நீரினை நாம் தந்தோம் கவலை கொள்ளாதே என்று தோன்றி மறைந்தார். பின்னர் பூசகர் விழித்து பார்த்தபோது கிணற்றிலிருந்து நீர் வற்றாமல் முழங்காமல் நீர் ஊற்றெடுத்தது இதனால் இக்கிராமத்திற்கு முழங்காவில் எனச் சிறப்பு பெறுகின்றது. இத்தேரினை அமைப்பதற்கு உதவிக்கரம் கொடுத்த வெளிநாட்டு, உள்நாட்டு அடியவர்கள் மற்றும் தேரை அமைத்து எம்மோடு சேர்ந்து பணியாற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**ஆ.பரதன்**
**தேர்த்திருப்பணிச்சபைப் பொருளாலர்**

**தேனுஜா**
சைவ உணவகம்
மன்னார்சாலை,
முழங்காவில்.

**சஸ்மிஜா உணவகம்**
பிள்ளையார் கோயில் வீதி,
முழங்காவில்.
T.P: 077 760 6165
உரிமையாளர்
ப.சுதாகரன்

**நகுலேந்திரன்**
பல்பொருள் வாணிபம்
மன்னார் வீதி,
முழங்காவில்.
T.P: 0772821630

**புதிய அம்மன் வாணிபம்**
நாச்சிக்குடா சந்தி,
முழங்காவில்
உரிமையாளர்
ப.சயந்தன்
077 940 0203

**தும்பிக்கையான்**
அழகு சாதன
புடைவை அகம்
நாச்சிக்குடா சந்தி,
முழங்காவில்.
077 870 8115

**புதிய கருமாரி நகைப்பூங்கா**
சரணியா நகைப்பூங்கா
தங்கப்பவுண்
நகை வியாபாரம்
077 152 2685
மன்னார் வீதி,
நாச்சிக்குடா சந்தி,
முழங்காவில்.

**BOYS STYLE**
All Kinds of
boys Items
இங்கே ஆண்களுக்கான சகல விதமான
ஆடைகளும் மற்றும் பாதணிகளையும்,
அழகுசாதனப் பொருள்களையும்
பெற்றுக் கொள்ளமுடியும்.
மன்னார் வீதி, நாச்சிக்குடா சந்தி,
முழங்காவில்.
T.P: 071 1483701

**Makendra Construction**
மகேந்திரன் நிர்மாணதாரர்
T.P: 076 696 6279
077 521 2381
A32, Kariyalai
Nagapaduvan
Mulankavil.

**தர்சிகா ஸ்ரூடியோ அன் மினி கலர் பிறிண்டர்ஸ்**
அனைத்து விதமான
புகைப்படங்களும்
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
077 281 2453
021 228 3130

**கண்ணன்**
பல்பொருள் வாணிபம்
மொத்த சில்லறை
விற்பனை நிலையம்.
நாச்சிக்குடாசந்தி,
முழங்காவில்.
077 283 5735

**வெற்றியுடையான்**
பல்பொருள் வாணிபம்
நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.
எம்மிடம் கட்டடப் பொருள்
மின்சாரப்பொருள்கள் எஸ்லோன்
பொருள்கள் சைக்கிள் உதிரிப்
பொருள்கள் மரவகைகள்
போன்றவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
ஈசன்பேய் ஓயில் சேஸ் கோஸ்வோ
பெயின்ற் ஏகமுகவர்
WESTERN UNION

**N.R.Mobile & Electronic**
Mannar Road,
Nachchikuda
Junction.
021 228 3115

**சிவசக்தி களஞ்சியம்**
நாச்சிக்குடா சந்தி,
மன்னார்சாலை,
முழங்காவில்.
021 228 3135


**நிது எலக்ரோனிக்ஸ்**
மன்னார்சாலை,
நாச்சிக்குடாசந்தி,
முழங்காவில்.
077 452 3074

...டாட்சத்தைப்

**ஆலய பரிபாலன சபை,**
**தேர்த்திருப்பணி சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றம்ழான் நோன்புப் பெருநாள் சிறப்பிதழ் - 2016




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றம்ழான் நோன்புப் பெருநாள் சிறப்பிதழ் - 2016

Obtain a postgraduate qualification and


# Get exemptions for your MBA

PEARSON edexcel advancing learning, changing lives

# PGD

## Post Graduate Diploma
### Strategic Management & Leadership

Duration: 6 Months



Delivered By PhD Qualified Academic Staff

Group Discount Available UP TO RS. 20,000

**Programme Stucutre**

- Developing strategic Managemnet & Leadership Skills
- Professional Development for strategic Management
- Strategic Change Management
- Strategic Marketing Management
- Strategic Human Resources Management
- Strategic Planing

UGC RECOGNIZED

Your progression Path

PGD 6 Months L7 Diploma → MBA 6 Months 2nd Semester → MBA 6 Months 3rd Semester →

Awarded By: LONDON METROPOLITAN UNIVERSITY MBA Master in Business Administration

ESOFT Shaping Lives, Creating Futures.

ESOFT METRO CAMPUS Hotline : 077 309 9 308 Tel : 021 222 4142

# AFTER O/L or A/L



PEARSON edexcel advancing learning, changing lives

# HND

NEW BATCHES

16 July 2016
18 July 2016
@ 9:00am

## BTEC HND Computing & Systems Development

Highlights in Computing

- Computer Systems
- Programming Languages (C++, C#.net, Asp.net, Java)
- Web Application Development
- Object Oriented Programming
- Network Technology
- Knowledge based systems

M.Sc MBA

Degree - Final Year: B.A (Hons) Business Administration, B.Eng. (Hons) in Software Engineering, B.Sc. (Hons) in Computing

HND in Computing & Systems Development / in Business Management

OL's / AL's / DiTEC

Success to Degree

Final Year: BEng (Hons) in Software Engineering; BSc (Hons) in Computing; BA (Hons) in Business Administration

LONDON METROPOLITAN UNIVERSITY

PEARSON edexcel advancing learning, changing lives

## BTEC HND Business Management

Highlights in B.Managment

- Human Resource Management
- Business Environment
- Organizational Behaviour
- Marketing Management
- Financial Management
- Business Law
- Quality Management

Success to Degree

Final Year: BA (Hons) in Business Administration

LONDON METROPOLITAN UNIVERSITY

ESOFT Shaping Lives, Creating Futures.

## ESOFT METRO CAMPUS

No.137, K.K.S Road, Jaffna.
Hotline : 077 309 9 308 Tel : 021 222 4142

HOTLINE 077 309 9 308

www.esoft.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரம்ழான் நோன்புப் பெருநாள் சிறப்பிதழ் - 2016


# ES Printers

## ES GiftZ

உங்கள் உறவினர்களுக்கு
அன்பளிப்பு பொருள்களை
எம் இணையத்தளம் ஊடாக
அனுப்பி மகிழுங்கள்

**www.esgiftz.com**

info@esgiftz.com

Poster / Notice
Lable / Wedding
Card / Bag Print /
Award / Frame Item /
Batch / Vehicle Brand /
T-Shirt / Cap
ID Card / Key Tag
Book Mark /
Pen Print /
Book Printing /
Woodent Print




சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

(C/29555)(10.17)




#357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 492 7471 / 021 492 7472

esprintersjaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org